நிவேதா உதயராஜன்

# மனமும் இடம்பெயரும்



# மனதும் இடம்பெயரும்

**- சிறுகதைகள் -**

நிவேதா உதயராஜன்

**மனதும் இடம்பெயரும்** – சிறுகதைகள்

**நிவேதா உதயராஜன்**

முதற்பதிப்பு: 2023 மார்கழி

© நிவேதா உதயராஜன்

வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 120

விலை: 500.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

**Manathum Idampeyarum - collection of Stories**

**Nivetha Uthayarajan**

First Edition: 2023 December

© Nivetha Uthayarajan

Layout : K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 120

Price: 500.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN:

ஜீவநதி வெளியீடு – 306

## உள்ளே...

1. அந்த மனிதன் /10

2. சீதனம் வேண்டாம் / 17

3. தண்டனை /22

4. அவனும் அவர்களும் /31

5. தானம் நீ /49

6. நான் வசந்தன் /63

7. மருந்தே இல்லாத நோய் /67

8. மன வாழ்வு /82

9. மனக் குரங்கு /90

10. பக்கத்து வீடு /101

# அணிந்துரை

தமிழ் பெண் எழுத்தாளர்களுள் புலம்பெயர்ந்து வாழு கின்ற நிவேதா உதயன் கணிப்புக்குள்ளான எழுத்தாளராக அறியப்படுபவர்; சிறு வயது முதலே எழுத்துலகில் பிரவேசித்த அவர் தொடர்ந்து எழுதுவதைத் தவமாக மேற்கொண்டு வருபவர். அவருடைய தொடர் எழுத்துக்களின் அறுவடையாக “மனதும் இடம்பெயரும்” என்ற மகுடத்துடன் பத்து சிறு கதைகள் அடங்கிய தொகுதி வெளிவருகின்றது.

ஈழத்துத் தமிழ் புனைவு வெளி புலம் பெயர்ந்த எழுத்தாளர்களினது பங்களிப்பால் சற்று அகலக்கால் வைத்தது என்பதை எவரும் மறுபதற்கில்லை. ஈழத்துக் குடாநாடு, இலங்கைத் தீவு என்ற நிலவியல் எல்லைகளுக்குள் நீண்ட காலம் பயணம் செய்த புனைவு வெளி, ஈழத் தமிழர்களின் புலப்பெயர்வு என்ற செயற்பாட்டாலும் அதன் வழி உருவான கருத்துருவாக்கங்களாலும் “புலம்பெயர் தமிழ் இலக்கியம்” என்ற அந்தஸ்த்தைப் பெற்றது. அதன் பேறாக, நாடுகளும், இயற்கையும் தட்ப வெப்பநிலைகளும், வாழ்வியலும் நேர் மறையாகவும் எதிர்மறையாகவும் நமது மனக்கண்முன் விரிந்தன. “உலகமயமாதல்” என்ற கருத்தியல் அல்லது “சுருங்கிய உலகு” என்ற கருத்தியலுக்கு அமைவாக எல்லாம் தான் எமது காலடியில் வந்து குவிந்தன. இதனால் புளகாங்கி தங்களும் கூடவே துயரங்களும் நம்மிடையே நிரம்பி வழிந்தன.

மேற்குறித்த கருத்து நிலைகள் ஓரளவிற்குத் தேய்மானங்கண்டுள்ள நிலையில் தற்போது புலம்பெயர் தமிழ் மக்களின் தனியாள் அனுபவங்களும் கலாசாரச் சிதைவுகளும் வாழ்வியற் கோலங்களும் அரசல் புரசலாக புனைவுகளில் வெளிவரத் தொடங்கியமையின் வெளிப்பாடாகவே நிவேதா

வின் இந்தத் தொகுதியில் அடங்கிய கதைகளிலும் பெரும்பாலும் முகங் காட்டு வதை இனங்காண முடிகின்றது.

நமது பாரம்பரியமான பண்பாட்டில் நம் மூத்தோர் கடவுட்குச் சமமாக வைத்தென்னைப் படுபவர்கள், தாய், தந்தை, பேரன், பெயர்த்தி என அந்தத் தொகுதி நீளும் அந்தப் பெரியோரும் நம்மையும் நம் வாரிசுகளையும் “எம்மில் தம்மைக் கண்டு” மகிழ்வு கொள்பவர்கள்; நம் குடும்ப உறவுகளின் “எல்லைக்கால்”களா நிற்பவர்கள்; அவர்களே அந்த எல்லைகளை மீறினால்... என்ற கருவை அடியாகக் கொண்ட “தண்டனை” என்ற கதை வாசகரைப் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கக் கூடியது. நமது கலாசார விழுமியங்களைக் கேள்விக் குள்ளாக்கக் கூடியது. எனினும் தன் மனைவியை மத்திய கிழக்கிற்கு அனுப்பி விட்டு தன் சொந்தமகளையே வன்புணர்வு செய்யும் தந்தைகள் நிறைந்த உலகிற்தானே நாமும் வாழுகிறோம் என்று இதனால் சமாதானங் கொள்வதா அல்லது சிக்மன்ட் பிறைட்டின் உளவியற் கோட்பாட்டை முன்நிறுத்திக் சமாதானங்கொள்வதா அல்லது ஏங்கல்ஸ் குறிப்பிடும் “புனசவா” குடும்பம் என்ற கருத்தியலில் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்ப்பதா என்ற வினாக்கள் இதனூடாக மேற்கிளம்புகின்றன. இவ்வாறான கருவை வெளிப்படுத்துவதற்கு “அயல் நோக்காத்துணிவு” வேண்டும் நிவேதாவிடம் அது நிறையவே உண்டு. அவர் பாரம்பரியத்தைத் தாங்கிப்பிடிக்கும் தூணாக நிற்க விரும்பவில்லை.

“தானம் நீ”, “மன வாழ்வு”, “மனக்குரங்கு” ஆகிய மூன்று கதைகளின் கருவை ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்க்க முடிகிறது. பெண்களை ஆண்களே பெரும்பாலும் ஏமாற்றுபவர்கள் என்ற பெரும்பான்மையான மதிப்பீடுகளை மறு தலித்து பெண்களும் வாய்ப்புக்கிடைத்தால் ஏமாற்றத் தயங்கார் என்ற கருத்தினை இக் கதைகளூடாக முன்வைக்கிறார் நிவேதா. தன் கல்லூரிக் காலத்தில் காதல் செய்த செந்தூரனுடன் சேர்ந்து வாழ்வதற்காக, தன்னைக் கட்டியவனுடன் போலி வாழ்வு வாழ்ந்து காதலனைக் கரம்பிடிக்கத் துடித்த நயனி, தன்னிலும் வயது கூடிய வெளிநாட்டு மணமகனைக் கரம்பிடித்து விட்டு வங்கியில் தன்னுடன் பணி யாற்றும் வாகீசனுடன் வாழத்துடிக்கும் ஜீவா, கரம்பிடித்த காதலனும் கணவனு மான ரவியிடமிருந்து விவாகரத்துப் பெற்று மூன்று பிள்ளைகளுடன் கஷ்ட ஜீவனம் செய்தவருக்கு ஆபத்பாந்தவனாக வந்து கை கொடுத்து மறுவாழ்வு தந்து கடனாவுக்கு கூட்டி வந்து வாழவு தந்தவனை ஏமாற்றிய “மனக்குரங்கு” கதையின் “நாயகி” என இவர்கள் எல்லாம் ஏமாற்றுக்காரிகளாக நம்பிக்கைத் துரோகிகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். ஒருவேளை தான் நினைத்தவனை அடைதல் பெண் களுக்கான சுதந்திரம் என்ற கருத்தியலை இவ்விடத்தில் நிலைநாட்ட நிவேதா முனைகிறாரோ என்று எண்ணத்தோன்றினும் (ஏனெனில் அவரது முந்தைய கதைகள் அவ்வாறானவை) கதைகளின் முடிவுகளின் படி, நம்பி நடந்த ஆண் மக்களை ஏமாற்றிய பெண்களின் கதைகளாகவே அவற்றைக் கருத முடிகிறது. இதில் சித்திரிக்கப்பட்டுள்ள ஆண்கள் மிகவும் கண்ணியமானவர்களாகவே

உள்ளனர். நிவேதாவின் இந்த மனமாற்றம் அல்லது கருத்தியல் புலம்பெயர் வாழ்வில் பெண்களின் நத்தைக்கோலங்களின் அபத்தங்களால் ஏற்பட்ட மன உளைச்சல்தான் காரணமாக அல்லது பிழைவிடுபவர் எல்லாத் தரப்பிலும் உளர் என்ற சமாதானமா? எதுவெனப் புரியவில்லை. "மருந்தே இல்லா நோய்" என்ற கதை இன்னோர் வகைமையான பெண்ணைக் கண்முன் நிறுத்துகிறது. பிரான்ஸில் பிறந்த மது என்ற பெண், புலம் பெயர் நாடுகளில் இன்னமும் வலுப்பெற்றுக் கொண்டிருக்கின்ற சாதீயத் தடைகளைத் தாண்டி, பெற்றோர் எதிர்ப்பையும் மீறிக் காதலித்த நவீன் என்பவனைக் கரம்பிடித்து இரு குழந்தைகள் பெற்ற பின்பும் தன்கணவன் வேறோர் பெண்ணுடன் காதலுறவு கொண்டுள்ளான் என்பதை அறிந்த மது அவனைத் தீவிரமாகக் கண்காணித்து கையும் மெய்யுமாக நிரூபித்து அவனிடமிருந்து பிரிந்து விடுவதாக இக்கதை அமைந்துள்ளது. தன் கணவன் எல்லை மீறுகிறான் என்பதை நிதானத்துடன் செல்லிடப்பேசியின் தொழில் நுட்பத்துடன் கண்காணித்து உண்மையை வெளிக்கொணரும் திறன் வாய்ந்த வளாக அவள் உருவாக்கப்பட்டுள்ளாள். ஒரு வகையில் இரு ஒரு புலனாய்வு சார்ந்த தன்மையுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனை வேறோர் வகையில் "உளவியல் நாடகம்" என்றும் கட்டமைக்கலாம். குற்றமிழைத்த ஒருவரை அவர் சந்தேகப்படும்படியாக நடக்காமல் அவருடன் இயல்பாகப் பழகி, அதனூடாகக் கண்காணிப்பு அல்லது புலனாய்வை நிகழ்த்தி இறுதியில் இக்கட்டான ஒரு சூழலில் சிக்க வைத்து குற்றவாளியின் வாயிலாகவே குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்வதை உளவியல் நாடகம் (Phycho Drama) என்பர். உளவியலாளர் அந்த முறைமைதான் இக்கதையிலும் நடந்தேறியுள்ளது. இன்னோர் வகையில் அந்தப் பெண்ணின் ஆளுமையும் தெரிய வருகிறது. தன் கணவன் தனக்குத் துரோகம் செய்வதை எந்தப் பெண்ணால் தான் பொறுத்துக் கொள்ளமுடியும் என்ற பொதுவிதியைத் தாண்டி, கல்லானாலும் கணவன் என்ற கீழைத்தேய நியமங்களைக் கடந்து, மூக்குச் சிந்தி அழுது ஆர்ப்பரிக்காது அப்பெண் நடந்து கொண்டவிதம் அவளுக்கு மேலைத்தேய வாழ்க்கை முறை தந்த துணிவும், தன்னம்பிக்கையம் தான் என எண்ணத் தோன்றியது.

ஓரினச் சேர்க்கையாளர்கள் தாம் விரும்பியவாறு சேர்ந்து வாழமுடியும் என்ற மேலைத்தேய அனுமதியை அனுசரித்துச் செல்கிறது. "நான் வசந்தன்" என்ற கதை. கதையின் ஓட்டம் சராசரியாக இருந்தாலும் கதையின் முடிவில் நிவேதா எழுதிய உரையாடல் அந்த உறவின் நன்மையை அல்லது உணர்ச்சியை புரிந்துகொள் வைக்கிறது.

அழைப்பு மணி அடிக்க அகிலுக்கு இதே வேலையாய்ப் போச்சு என்று மனதுக்குள் திட்டியபடி கதவைத் திறக்கிறேன்.

"நான் எங்காவது போயிருந்தால் என்ன செய்வாய்? திறப்பை மறக்காமல் எடுத்துக் கொண்டு போ என்று எத்தனை தடவை சொன்னாலும் கேட்கமாட்டியா?"

"நான் எப்ப வருவேன் என்று நீ எனக்காகக் காத்திருப்பாய் என்று

எனக்குத் தெரியுமே" என்றபடி வசந்தனை ஆசை தீர இறுக அணைக்கிறான் அகில்.

இதில் தெரியவருவது இரண்டு ஆத்மாக்களின் ஆழமான அன்பு தான் அது அபத்தமல்ல என்பதை நிவேதா நிறுவ முனைகிறார்.

இந்தத் தொகுதியில் உள்ள ஏனைய கதைகள் நிவேதாவின் அனுபவம் சார்ந்தவை. ஆயின் "அவனும் அவர்களும்" என்ற கதை நிவேதாவிற்கு உருவச் செழுமையுடனும் கதை சொல்ல முடியும் என்பதற்குப் பதந் சோறாக அமைகிறது. மரணமடைந்தவரே கதை சொல்லியாக மாறி, நனவோடை உத்தியில் கதையை நகர்த்திச் செல்லும் விதத்தால் அக்கதையை இத் தொகுதியின் கணிப்புக்குள்ளாகும் கதையாக மாறியுள்ளது. தவிர நிவேதாவின்கதை சொல்லும் முறை இன்னமும் நேர்கோட்டு முறையியலைத் தாண்டிச் செல்லவில்லை. ஆயின் கதைகளின் முடிவில் அதிர்ச்சி தருவதும் எதிர்பாராத திருப்பங்களை ஏற்படுத்துவதும் சில விடயங்களை வாசகரிடமே யுகத்துக்கு விட்டு விடுவதும் நல்ல சிறுகதைகளுக்கான குணாம்சங்கள். அவை நிவேதாவின் எழுத்துக்களில் துலங்கத் தொடங்கி யுள்ளன. உரை நடையில் செம்மை சேர்வதும் அல்லது பேச்சோசை மிகுவதும் கதைகளின் களத்தைப் பொறுத்ததேயன்றி கதைசொல்லியின் மனவோட்டத்தை பொறுத்ததல்ல என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். மற்றும் சுய விருப்பும் வெறுப்புகளுடனான தீர்வுகள் அல்லது அபிப்பிராயங்கள் கதை சொல்லி யின் நேர்மையைச் சோதிப்பனவாய் அமைந்தால் அது வெறும் வக்கிரங்களின் வெளிப்பாடாய் அமைந்துவிடும் அபாயங்களும் உண்டு. எனவே முன்வைக்கும் கருத்தைத் தர்க்கத்துடனும் ஆதாரத்துடனும் சமூகவியல் கண்ணோட்டத்துடனும் அழகியலுடனும் படைக்கும் போது கதை சொல்லி நின்று நிலைப்பார்; கதைகள் சாகாவரம் பெறும்.

நிறைவாக நிவேதா எனும் கதைசொல்லி இன்றும் கடந்து செல்ல வேண்டிய களமும் காலமும் அவர் முன் விரிந்து கிடக்கின்றன. அவற்றை ஒருமுகப்படுத்தும் திறன் நிவேதாவிடம் நிறையவே உண்டு. அவற்றைக் கலா பூர்வமாகக் கட்டமைத்து நமது புனைவு வெளியில் தனித்துவமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய எழுத்தாளராக நிவேதா நிலைக்க வேண்டும் என்பது என் அவா. அது ஈடேனும் என்பதில் அசைக்க முடியா நம்பிக்கையும் எனக்குண்டு.

வாழ்த்துக்களுடன்
பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன்
தகைசால் வாழ்நாட்பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# என்னுரை

பத்து ஆண்டுகளின் முன்னர் என் முதலாவது சிறுகதைத் தொகுதியும் நான்கு ஆண்டுகளின் முன் என் இரண்டாவது சிறுகதைத்தொகுதியும் வெளிவந்தபின் ஐந்து ஆண்டு ஆண்டு கால இடைவெளியில் மூன்றாவது தொகுதி வெளிவருகிறது. பெண்களால் தொடர்ந்து எழுத முடியாதவாறு பல தடைகள் குடும்பச் சூழலில் இருந்தாலும் அதையும் தாண்டி நான் காண்பவற்றை, கேட்பவற்றை எழுதும் ஆற்றல் எனக்குள்ளும் இருக்கின்றது. யாரின் புகழ்தலுக்காகவும் காத்திருக்காது என்னால் முடிந்ததைத் துணிவுடன் எழுதுவதும் எனக்கு நிறைவைத் தருகிறது. முக்கியமாய் யாழ்களமே எனது எழுத்துக்களுக்கு ஊக்கியாய் இன்றுவரை இருக்கின்றது. அதுமட்டுமன்றி என் கதைகளை விமர்சிக்கும் அத்தனை யாழ்கள உறவுகளுக்கும் நன்றிகூற நான் என்றும் கடமைப் பட்டவள். சரியோ தவறோ எம் நன்மைக்காய் விடமின்றி விமர்சிப்பவர்களின் விமர்சனங்களே என் எழுத்துக்களை மெருக்கேற்றிக் கொண்டிருக்கும்.

நான் கேட்டவுடன் நூல் விமர்சனம் ஒன்றை எழுதித் தந்த காரைக் கவி கந்தையா பத்தமநாதன் அவர்களுக்கும், அணிந்துரையை மிகக் குறுகிய காலத்தில் எழுதித் தந்த பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் அவர்களுக்கும், அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த யாழ்கள உறவான மூணா எனப்படும் ஆழ்வாப்பிள்ளை செல்வகுமாரன் அண்ணா வுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவள். என்னை எழுதுவதற்குத் தூண்டியதே சுமேரிய வரலாறு பற்றிய தூண்டாலே. அதுபற்றிய அடிப்படை அறிவை என்னுள் தூவிய மறைந்த நாதன் சிவகணேசன் அண்ணா அவர்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

நிவேதா உதயராஜன்

# அந்த மனிதன்

அது குளிர்காலமாதலால் லண்டன் காற்றில் இருந்து தப்ப நல்ல குளிராடைகளை நான் அணிந் திருந்தேன். சாதாரணமாக பிரித்தானியாவில் அதிக பனிப்பொழிவு அற்ற இடம் லண்டன்தான். ஜெர்மனியில் -5, -7 ல் குளிர் வரும்போது கூடக் குளிராத குளிர் லண்டனில் பத்துப் பன்னிரண்டு பாகையாக இருக்கும்போதே குளிரும். அதற்குக் காரணம் அது ஒரு பெருந் தீவாக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

நான் அந்தத் அஞ்சலகத்தில் வேலைக்குச் சேர்ந்த முதல் நாளே அவனை அந்தக் கடைக்கு முன்னால் பார்த்தேன். ஒரு பல்பொருள் அங்காடியின் உள்ளேயே நான் வேலை செய்யும் அஞ்சலகம் அமைந்திருந்தது. முன் பக்கம் முழுக்கக் கண்ணாடித் தடுப்புடன் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருக்கும் அதற்குள் நிற்கும்போதே குளிராக இருக்கும். ஆனால் அவனோ ஒரு கடதாசி மட்டையை விரித்து அதன்மேல் கடைக்கு முன்பாக ஒதுக்கமாக ஓரிடத்தில் அமர்ந்திருப்பான். அவன் முன்னால் ஒரு பிளாஸ்டிக் பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும். விருப்ப மானவர்கள் அதில் சில்லறைக் காசுகளைப் போட்டு விட்டுப் போவார்கள்.

ஆளைப் பார்த்தால் நன்றாகத்தான் ஆடை அணிந்திருப்பான். ஆனாலும் அதில் ஒரு அசாதாரணமும் இருக்கும். முதல் சில நாட்கள் எனக்கு அவனைப் பார்க்க எரிச்சலாக இருந்தது. அவனை கடந்து நான் போகும் போதோ வரும் போதோ சட்டை செய்யவில்லை. அவன்

நடந்து வரும்போது ஒரு நளினம் இருக்கும். இவன் ஒரு ஓரினச் சேர்க்கையாளனாகத்தான் இருப்பான் என நான் நம்பினேன்.

அடுத்த வாரம் என்னை நோக்கி வந்து நமஸ்தே கிருஷ்ணா என்றபடி ஒரு தாளை நீட்டினான். நான் வேண்டுமென்றே வணக்கம் என்றேன். அவன் எதுவும் சொல்லாமல் நிற்க நான் அந்தத் தாளை விரித்தேன். அது கவுன்சில் வீடற்றவர்களுக்கு வாராவாரம் கொடுக்கும் உதவித் தொகைக்கானது. ஆனால் அதைக் கொண்டு வருபவர் தன் அடையாள அட்டையைக் காட்டினால்த்தான் நாம் பணம் கொடுக்கலாம். ஏனெனில் வேறு ஒருவரினதை எடுத்துக்கொண்டு வந்து மற்றவர்கள் பணமாக்காதிருக்க அப்படியான பாதுகாப்பு முறையை வைத்திருந்தனர்.

“உனது ஐடியைத் தருகிறாயா?”

“என்னிடம் ஐடி இல்லை, ஜோன் ஒன்றுமில்லாமல் எனக்குப் பணம் தருவார்”

“யார் அது ஜோன்? அப்படி யாரும் இங்கு இல்லையே”

“இந்தக் கடையின் ஓனர் தான். உனக்குத் தெரியாதா?”

எனக்குக் குழப்பமும் கோபமும் ஒன்றாக வர கொஞ்சம் பொறு என்றுவிட்டு எனது முதலாளிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி விபரத்தைக் கூறுகிறேன். அவரும் வீடியோவில் அவனைப் பார்த்துவிட்டு “அவனுக்குக் கொடுங்கோ. அவன் காசை எல்லாம் என் கடையில் தான் செலவழிக்கிறவன்” என்று சொல்ல, யாரோ ஜோன் தனக்கு ஐடி இல்லாமல் பணம் தருவதாகக் கூறுகிறான். யார் அந்த ஜோன் என்கிறேன்.

“நான் தான். என்னை உந்த வெள்ளைச் சனங்கள் அந்தப் பெயரால்த்தான் அழைப்பார்கள்” என்று கூறி அவர் போனை வைக்க, தமிழராய் இருந்துகொண்டு உவருக்கு ஆங்கிலப் பேர் கேட்குது என மனதுள் கறுவினாலும் வெளியே சொல்லவில்லை.

அதன்பின்னர் பணத்தைப் பெற்றுக் கொண்டு செல்லும்போது “நன்றி. கிருஷ்ணா உங்களை ஆசீர்வதிப்பார்” என்கிறான்.

“நான் கிருஸ்ணரை வணங்குவதில்லை” என்கிறேன்.

அவன் எதுவும் சொல்லாது போய்விட்டான். அவன் சென்றபின் ஏன் நான் அவனுடன் அப்படிக் கதைத்தேன் எனறு என்னுள்ளேயே ஒரு கூச்சம் எழுந்ததுதான்.

அடுத்த வாரம் நான் வேலைக்குச் செல்லும்போது கால்மேல் கால் போட்டபடி கடையின் கண்ணாடியில் சாய்ந்து அமர்ந்திருந்தான். என்ன பிறப்பு இவன். இவனுக்குக் குளிர்வதே இல்லையா என எண்ணியபடி உள்ளே வந்தேன். சிறிது நேரத்தில் நான் என் அலுவல்களைப் பார்க்க, அவன் கடைக்குள் வந்து அங்கும் இங்குமாக நடக்க எனக்கு எரிச்சல் அதிகரித்தது. கடை பெரிதானதால் அவன் எங்கு நிற்கிறான் என்று எனக்குத் தெரியவில்லை. எதையாவது களவெடுத்துக்கொண்டு போக எண்ணு கிறானோ என எண்ணியபடி அவன் எங்கு செல்கிறான் என என் அறையின் உள்ளே இருக்கும் கமராவின் ஸ்கிரீனைப் பார்த்துக்கொண்டிருக்க அவன் எதையும் எடுக்காது பொறுமையின்றி நடந்து திரிந்துவிட்டு என் பக்கமாக வந்தான்.

நீ அஞ்சலகத்தைத் திறந்துவிட்டாயா என்றபடி தூரத்தில் நிற்க, வா என்றபடி அவனின் தாளை வாங்கி அவனிடம் எதுவுமே கேட்காது பணத்தை எண்ணிக் கொடுக்கிறேன். மீண்டும் அவன் “கிருஷ்ணா உங்களை ஆசீர் வதிப்பார்” என்று கூற “நன்றி உன்னை சிவா ஆசீர்வதிப்பார்” என்கிறேன். அவன் எதுவுமே கூறாமல் செல்ல என மனதில் எத்தனையோ கேள்விகள் எழுந்து மறைந்தன.

அடுத்தடுத்த வாரங்களில் வரும்போது அவனைப் பார்த்ததும் காலை வணக்கம் சொல்ல, என்னை ஆச்சரியமாகப் பார்த்து தானும் சொன்னான். அன்று அவன் பணம் பெற்றுக்கொள்ள வரவில்லை. ஏன் அவன் வரவில்லை என்று எண்ணியபடி ஆட்கள் வராத நேரத்தில் நான் வெளியே சென்று அவன் இருக்கிறானா என்று பார்த்தபோது அவனைக் காணவில்லை. கடையில் வேலை செய்தவர்களைக் கேட்க தமக்குத் தெரியாது என்றுவிட்டு அப்படித்தான் அவன் அடிக்கடி காணாமல் போவான் பின் வருவான் என்றனர். நானும் அதன் பின் அவனைப் பற்றி மறந்துவிட்டேன்.

ஒரு வாரத்தின் பின்னர் வந்தவன் இரண்டு காசோலைகளை என் முன்னே நீட்டினான். ஒவ்வொன்றும் 100 பவுண்ஸ்கள் பெறுமதியானவை. அவனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு “எங்கே சென்றாய்? உன்னைக் காணவில்லையே ஒரு வாரமாக” என்றேன். தனக்கு மன அழுத்தம் கூடிய தால் ஒருவாரம் வைத்தியசாலையில் இருந்தேன் என்றதும் மேற்கொண்டு என்ன கேட்பது என்று தெரியாது வரிசையும் நீண்டு விட்டதால் அவனை அனுப்பிவிட்டு மற்ற வாடிக்கையாளர்களைக் கவனிக்க ஆரம்பித்தேன்.

நான் வேலைசெய்யும் கடையிலே சூடான உணவுப் பொருட்களும்

உண்டு. நிரந்தர வாடிக்கையாளர்களுக்கு தேவை எனில் குளிரான உணவு களை சூடாக்கிக் கொடுப்பார்கள். பிரியாணி, சமோசா போன்றவற்றை அவன் சூடாக்கித் தரும்படி வாங்கி உண்பான். தேனீரும் கோப்பியுமாக அவன் பணம் அங்கேயே கரையும். ஆனால் ஒருநாள் கூட மலிந்த பியரைக் கூட அவன் வாங்குவதில்லை என அங்கு வேலை செய்பவர்கள் கூறுவார்கள்.

அன்று ஒரு மூன்று மணியிருக்கும். பள்ளிக்கூடம் அருகில் இருப்பதால் பள்ளி முடிந்து மாணவர்கள் வருவதும் போவதுமாக இருக்க, நான் காலையில் அவனுக்குக் கொடுத்த 20 பவுண்டஸ் தாள்களைக் கொண்டுவந்து பத்துப் பவுண்டஸ் தாள்களைத் தருகிறாயா என்றான். நானும் மாற்றிக் கொடுத்துவிட்டு எனக்கு வாடிக்கையாளர்கள் வாராதாபடியால் அறையை விட்டு வெளியே வந்து வீதியைப் புதினம் பார்க்கச் செல்கிறேன்.

அங்கே கூட்டமாக ஒரு ஏழு பள்ளி மாணவர்கள் நிற்க இவன் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பத்துப் பவுண்டஸ் தாளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். எனக்குப் பார்த்தவுடன் சுள் என்று கோபம் தலைக் கேறியது. கவுன்சில் அவனுக்குத் தரும் காசைச் சேமித்து வைத்துச் செலவழிக்காது இப்பிடி கொடுத்துக் கரைக்கிறானே என்று. ஏனெனில் அந்த வாரம் பணம் முடிந்தவுடன் எமது கடையில் கடன் சொல்லிவிட்டுத்தான் பொருட்களை வாங்குவான்.

ஆனாலும் அடுத்த நிமிடம் அவனின் செயலை எண்ணி வியப்பும் தோன்றியது. எதுவும் இல்லாதவன். இருப்பவர்களே கொடுக்க யோசிக்கும் இந்தக் காலத்தில் தனக்கு என வைத்திருக்காமல் இவர்களுக்குக் கொடுக் கிறான் எனில் எத்தனை பெரிய மனது வேண்டும் என எண்ணியவுடனேயே எனக்குள் ஒரு வெட்கம் ஏற்பட நான் உள்ளே நகர்ந்தேன்.

அடுத்த வாரம் பணம் மாற்ற வருவதற்கு முன்னர் சில பொருட்களை கையில் எடுத்துக்கொண்டு வந்திருந்தான்.

அவன் தூரத்தில் வரும்போதே துர்நாற்றம் ஒன்று வீச அந்தப் பெரிய கண்ணாடியை மீறி சிறிய கடிதங்கள் மட்டுமே போகக்கூடிய இடைவெளி யூடாக அந்த நாற்றம் என் மூக்கில் அறைய, நான் என்னை அறியாமலேயே கைகளால் மூக்கைப் பொத்திவிட்டு ஒரு வாடிக்கையாளருக்கு முன் அப்படிச் செய்வது அழகல்ல என்று எண்ணிக் கைகளைக் கீழே விட, அவன் அந்த இடைவெளியால் பணம் பெற்றுக்கொள்ளும் தாளைத் தருகிறான். அவனுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட, வழமைபோல் நன்றி கிருஷ்ணா என்றபடி திரும்புகிறான். அவன் கைகளில் வைத்திருந்த பொருட்கள்

அப்போதுதான் என் கண்ணில் தெரிகின்றன.

“உன் பெயர் என்ன”

“மார்ட்டீன்”

“எதற்கு இந்த வண்ணக் கட்டிகளையும் பென்சில்களையும் வாங்கிக்கொண்டு செல்கிறாய்”

“நான் ஆர்ட் கீறுவதில் மாஸ்ரேஸ் முடித்திருக்கிறேன். எனக்குத் தோன்றும் நேரங்களில் படங்கள் கீறுவேன்”

“உனக்குக் குடும்பம் இருக்கிறதா”

“யாரும் இப்போ இல்லை”

“வீடு கூட கவுன்சில் தரவில்லையா”

“எனக்கு வீடு இருக்கிறது. இரவில் மட்டும் அங்கு சென்று தூங்குவேன்”

“என்னைத் தவறாக நினைக்காதே. உன்னில் ஒரு கூடாத மணம் வருகிறது. இத்தனை படித்த நீ ஏன் சுத்தமாக இருக்கக் கூடாது”.

“ஓகே”

என்றுவிட்டு அவன் செல்ல, வெளியே கடையில் தட்டுக்களில் பொருட்களை அடுக்கிக்கொண்டிருந்த ஒருவர்

“என்ன அக்கா. ஏன் இப்பிடி மணக்குது என்று அவனுக்குச் சொன்னீர்கள்”

“அப்பாவாவது அவன் குளித்து உடைமாற்றிக்கொண்டு வருகிறானா என்று பார்ப்போம். எத்தனை நாட்கள்தான் அவனின் நாற்றத்தைத் தாங்குவது”

“நீங்கள் சொன்னது போலத்தான் எங்கட முதலாளியும் அவனுக்கு ஒருநாள் சொன்னவர். அவன் அதைக் கேட்டிட்டு ஜோன் எனக்கு ஒண்டும் சொல்லாதை. நான் இப்பிடித்தான் இருப்பன். எனக்கு மில்லியன் வியூவேர்ஸ் இன்ஸ்ரகிறாமில் இருக்கினம். உனக்குப் பிடிக்காட்டில் நான் எதிர்ப் பக்கம் இருக்கிற கடையில போய் இருக்கிறன் என்றானாம். அதன்பின் முதலாளி வாயே திறக்கிறேல்லை. ஆனால் நீங்கள் பொம்பிளை எண்டதால ஒண்டும் சொல்லாமல் போறான்”.

நான் சிரித்துவிட்டு என் அலுவலைப் பார்க்கிறேன்.

அடுத்த நாள் வேலையை ஆரம்பித்து பத்து நிமிடம் செல்ல மார்ட்டீன் என்னை நோக்கி வந்து குட் மோர்னிங் கிருஷ்ணா என்கிறான்.

நேற்று அவனுடன் கதைத்த பின் எனக்கு அவன்மேல் ஒரு மதிப்புக் கூடியிருந்தது. அதற்குக் காரணம் அவன் படித்திருக்கிறான் என்பது மட்டுமல்லாமல் நான் வேலை முடிந்து செல்லும்போது அவன் மட்டையில் வரைந்து முடித்திருந்த அந்த அழகிய அர்த்தம்பொதிந்த ஓவியமும்தான்.

இன்று நான் சுத்தமாக வந்திருக்கிறேன் என்று தன் ஆடையையும் தொட்டுக் காட்ட, அப்பதான் அட இவனில் இன்று எந்தத் துர்நாற்றமும் வீசாததை நான் கவனிக்கவில்லையே என வியந்தபடி "மிக்க நன்றி மார்ட்டீன். என் பேச்சு உன்னை காயப்படுத்தியிருந்தால் மன்னித்துக்கொள்" என்கிறேன்.

"இல்லை இல்லை. நான் ஒன்றும் நினைக்கவில்லை. கடவுள் உன்னை ஆசீர்வதிக்கட்டும்" என்றபடி திரும்பிச் செல்ல என் மனம் நிம்மதி அடைகிறது.

கடைக்கு வரும் பலரும் அவனுக்கு பணம் கொடுப்பது மட்டுமன்றி அவனைக் கூட்டிவந்து அவனுக்குத் தேவையான உணவுகளைக்கூட வாங்கிக் கொடுப்பார்கள். அங்கு மெசினில் கோப்பி அல்லது தேநீர் கூட அவனாகவே வாங்குவதுமுண்டு. மற்றவர்களும் வாங்கிக் கொடுப்பதும் உண்டு. சில நேரங்களில் கையில் பணம் இல்லாதபோது கடையில் நிற்போரிடம் கடன் சொல்லி வாங்கிவிட்டுப் பணம் சேரும்போது கொடுத்தும் விடுவான்.

கடந்த வாரத்தில் ஒருநாள் அவன் வந்து பணம் மாற்றிக்கொண்டு சென்று ஒரு அரை மணித்தியாலம் ஆகியிருக்கும். ஒரு பெண்ணும் ஆணு மாய் இரண்டு போலீசார் கடைக்கு வந்து வெளியே இருப்பவன் எங்கே என்று கடையில் வேலை செய்பவர்களைக் கேட்க அவர்கள் தெரியாது என்கின்றனர். பின்னர் என்னிடம் வந்து நீ அவனைக் கண்டாயா என்று கேட்க நான் தெரியாததுபோல யாரைக் கேட்கிறீர்கள் என்கிறேன். வெளியே இருப்பானே அவன்தான் என்கின்றனர். ஒ நீங்கள் மார்ட்டீனைக் கேட்கிறீர் களா என்று கேட்க ஓம் என்று தலையாட்டுகின்றனர்.

ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னர்தான் அவன் பணம் மாற்றிக் கொண்டு சென்றான். வெளியே இல்லையா என்கிறேன். இல்லை என்றுவிட்டு

அவர்கள் செல்ல எத்தனிக்க, எதற்காக அவனைத் தேடுகிறீர்கள் என்று நானும் ஆவலாய்க் கேட்க ஒன்றுமில்லை என்றுவிட்டு முன்பக்கமாகச் செல்கின்றனர். எனக்கோ மனம் பரபரக்கிறது. என்ன செய்திருப்பான்? களவெடுத்திருப்பானா என எண்ணிய மாத்திரத்திலேயே இருக்காது என்றும் நானே எண்ணிக்கொள்கிறேன்.

சிறிது நேரம் செல்ல மீண்டும் இருவரும் வந்து எமக்கு நேற்றைய கமரா ரெகோர்டிங் வேண்டும் என்கின்றனர். சரி முதலாளியிடம் கேட்டு விட்டுத் தருகிறேன் என்று கூறி அவருடன் கதைத்தபின் அவரும் கொடுக்கும் படி கூறுகிறார். யுஎஸ்பி தாருங்கள், கொப்பி செய்து தருகிறேன் என்று கூறி ஒரு பத்து நிமிட வீடியோவை மட்டும் எடுத்துக்கொண்டு செல்கின்றனர்.

அன்று முழுவதும் அவனைக் கடைக்கு வெளியே காணவே இல்லை. எனக்கோ என்ன விடயமென்று தெரியாமல் மனம் அலைகிறது. சரி நாளை வந்து பார்ப்போம் என்று வீட்டுக்குச் செல்கிறேன்.

அடுத்தநாள் நான் வேலைக்கு வரும்போது வழமையாக இருப்பது போல் சப்பாணி கட்டி இருந்தபடி ஏதோ பாட்டு ஒன்றை மெதுவாகப் பாடியபடி இருக்க, எதுக்காக நேற்று போலீசார் உன்னைத் தேடினார்கள். அவர்கள் உன்னிடம் கதைத்தார்களா என்கிறேன். அதுவா யாரோ வேண்டும் என்று நான் கைநீட்டிக் காசு கேட்டேன் என முறைப்பாடு செய்திருக்கிறார்கள். நான் யாரிடமும் கை நீட்டுவதில்லை. விருப்பமானவர்கள் தாமாகவே வாங்கித் தருவார்கள். அல்லது காசு தருவார்கள். அப்படித் தரும்போது கூட நான் கையில் வாங்குவதில்லை. எனக்கு வருத்தமாக இருக்கிறது என்றவுடன் சொறி சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள் என்று கவலையாகச் சொல்ல எனக்கு அவனைப் பார்க்கப் பாவமாக இருக்க கவலைப் படாதே என்றுவிட்டு கடைக்குள் செல்கிறேன்.

இப்ப இரண்டு வாரங்களாக அவனைக் கடைக்கு முன் காண வில்லை. அவன் மன அழுத்தம் காரணமாக மீண்டும் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டானோ?

காலையில் எழுந்து பல்விளக்கி முகம் கழுவுகிறானோ என்று கூடத் தெரியாது. குடும்பம் இல்லை. வேறு தொந்தரவுகள் இல்லை. வீதியிலேயே இருப்பதால் வீடு இருந்தாலும் கரண்ட் காசுகூடக் காட்டும் தேவை இல்லாத அவனுக்கே மன அழுத்தம் என்றால் இத்தனை சுமைகளைத் தாங்கி இத்தனை காலம் குடும்பமாய் வாழும் எனக்கு எத்தனை மனஅழுத்தம் இருக்க வேண்டும். அதனைக்கும் அசையாது இத்தனை மனத்திடத்துடன்

நான் இருக்கிறேன் என்னும் பெருமிதமும் என்னுள் ஏற்படாமல் இல்லை.

இருவாரம் ஒரு மாதமாகி ஆறு ஏழு மாதங்களாகியும் அவன் மீண்டும் வரவேயில்லை. அவன் தொடர்ந்தும் மருத்துவமனையில் தான் இருக்கிறானா?? அன்றி அவனுக்கு எதுவும் நேர்ந்துவிட்டதா என்னும் பதைப்பொன்றும் என்னுள் எழுந்து மடிய, பலரிடம் விசாரித்தும் அவனைப்பற்றி யாருக்கும் எதுவும் தெரியவேயில்லை. அவன் இருக்கும் இடத்தில் அவன் வைத்துவிட்டுப் போன அந்த மட்டையும் சில நிறம் தீட்டும் பென்சில்களும் கேட்பாரற்று இன்றுவரை அங்கேயே கிடக்கின்றன.

# சீதனம் வேண்டாம்

மகளின் திருமணம் கூடி வந்ததில் வாணிக்கு மனதில் நிம்மதி குடிகொண்டது. மூன்று பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி பல்கலைக்கழகம் அனுப்பி வைத்து மூத்த மகளும் இரண்டாவது மகளும் வேலையும் செய்யத் தொடங்கியாயிற்று. ஆனாலும் இன்னும் வாணியால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. பிள்ளைகளைக் கலியாணம் கட்டிக்கொடுத்தால்த்தான் ஒரு பெரிய பாரம் குறைஞ்ச மாதிரி. படிச்சு முடிக்கும் வரைக்கும் கூட பிள்ளைகள் இருவரும் யாரையாவது காதலிக்கிறேன் என்று கொண்டு வந்தால் என்ன செய்வது என்ற பயம் கூடவே ஓடிக்கொண்டே இருந்ததுதான். காதலிக்கிறது தப்பில்லை. ஆனால் வெள்ளையையோ அல்லது கறுப்பனையோ அல்லது வேற படிக்காமல் ஊர் சுத்துற எங்கட காவாலியள் யாரின் வலையில் பிள்ளைகள் விழாமல் இருக்கவேணும் எண்டு வேண்டாத தெய்வங்கள் இல்லை.

பிள்ளைகளுக்கும் சாடைமாடையாக ஒழுங்காய் இருக்கவேணும் எண்டு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல் லாம் சொல்லிச் சொல்லி நல்லகாலம் அவர்கள் இருவரும் யாரிடமும் மாட்டுப்படேல்லை.

இது தானாக வந்த சம்மந்தம். வீட்டுக்குக் கடைசிப் பெடியன். தகப்பன் இல்லை சீதனம் எதுவும் கேட்க மாட்டினம் என்று நண்பி குடுத்த சாதகத்தை வாங்கிப் பொருத்தம் பார்த்த வாணிக்குச் சந்தோசத்தில் தலைகால் புரியவில்லை. 80 வீதம் பொருத்தம். இதை விட்டுடா

தேங்கோ என்று பொருத்தம் பார்த்த அய்யர் சொன்ன உடனேயே தொலை பேசி இலக்கம் வாங்கிப் பெடியனின் தாயுடன் கதைத்துவிட்டாள் வாணி. மகளின் படத்தை அனுப்பச் சொன்னதும் வற்சப்பில் அனுப்பி அது தாய்க்குப் பிடிச்சு பிறகு மகனுக்கும் பிடிச்சு, பெடியன்ர படத்தையும் அனுப்பி மகள் பார்த்துப் பிடிச்சிருக்கு என்ற பிறகு நேர்ல தாயும் மகனும் வர பையனைப் பார்த்து வாணிக்கு நிம்மதி வந்தது. சிலபேர் படத்தில வடிவாயிருப்பினம். நேர்ல பார்க்க இவனா என்று இருக்கும்.

என்ன இருந்தாலும் மூத்த மருமகன் எல்லே. களையாக இருந்தாலும் படிப்பு கொஞ்சம் சுமார் தான். அவசரப்படாதையென்று கணவன் கூறியதை வாணி ஏற்கவில்லை. எங்கட பிள்ளையும் பிஸ்நெஸ் மானேஜ்மென்ட் தானே படிச்சவள். பெடியன்ர பக்கம் பிரச்சனையில்லை. இதையே செய்வம் என்று ஒருவாறு கலியாணக்காட் அடிக்கிற வரையும் வந்தாச்சு. பெடியன் ரெஸ்க்கோவில மனேச்சராய் இருக்கிறான். அது காணும். வேலை வெட்டியில்லாத பெடியளுக்கே எங்கடை ஆட்கள் பிள்ளையளைக் கலியாணம் கட்டிக்குடுக்கினம். அதுக்கு இது எவ்வளவோமேல் என்று மனதையும் ஆறுதல்படுத்தி கணவனின் வாயையும் அடைத்து விட்டாள். உங்கை எத்தினை குமர்ப்பிள்ளைகள் முப்பது முப்பத்தைந்து கடந்தும் கலியாணம் கட்டாமல் இருக்குதுகள். அப்பிடிப் பார்க்கேக்குள்ள பெடியன் நல்ல பெடியனாத் தெரியிறான் என்று மனதுள் கூறிக்கொண்டு அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பிக்கிறாள்.

அவள் காலையில் பத்து மணிமுதல் பள்ளி ஒன்றில் டின்னர் லேடியாக வேலை செய்கிறாள். பின்னர் மாலை மூன்று மணிக்கு இந்த வேலை முடிய ஐந்து மணியிலிருந்து பதினொருமணிவரை சான்விச் செய்யும் நிறுவனம் ஒன்றில் வேலை. கணவனும் அங்கேயே வேலை செய்வதால் இரவு வேலை முடிய கணவனுடனேயே வீட்டுக்கு வருவதில் எந்தப்பிரச்சனையும் இல்லை. எதுக்கு இரவிரவா வேலை செய்யிறாய். பின்னேரம் பிள்ளையளுடன் இரன் என்று கணவன் கூறியதையும் கேட்கவில்லை. வீட்டு மோற்கேஜ் இன்னும் ஒண்டரை லட்சம் இருக்கு. அதையும் கட்டி முடிச்சிட்டா நின்மதியாக இருக்கலாம் என்பதும் பிள்ளைகளின் திருமணத்துக்கு எப்பிடியும் ஐம்பதாவது வேணும் என்னும் அவளின் கணக்கும் எவ்வளவு சொல்லியும் கணவனுக்குப் புரியாதது கவலைதான்.

ஒருவாறு இரண்டு நகைச் சீட்டுப் போட்டுப் போட்டு ஏற்கனவே கொஞ்ச நகைகள் வாங்கி வைத்திருக்கிறாள். பிள்ளைகளின் சம்பளமும் இவள் கட்டுப்பாட்டில் தான். அந்தவரை பிள்ளைகளைத் தான் நன்றாக

வளர்த்திருப்பதாக இறுமாப்பு இவளுக்கு. கலியாணக் காட் தெரிவு செய்யவே நாலு நாட்கள் சென்றது. சிம்பிளாய் இருக்கட்டும் என்று பார்த்தால் மகள் தெரிவு செய்த ஒரு காட் இரண்டு பவுன்ஸ் முடியுது. ஒருதடவை சொல்லிப் பார்த்தபின் விட்டுவிட்டாள். சரி ஒரு தடவை தானே திருமணம். தங்கள் விருப்பத்துக்குச் செய்யட்டுமன் என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

சின்ன ஒரு மண்டபத்தில் செய்யலாம். ஒரு இரண்டாயிரத்துள் முடிக்கலாமென்று பார்த்தால் மாப்பிள்ளையின் தாய் தங்களுக்கு ஒரு ஐநூறு பேராவது வருவினம். கொஞ்சம் நல்ல கோலா எடுங்கோ எண்டதில் பெடியனும் பெட்டையும் அலைந்து திரிந்து எடுத்த கோல் ஏழாயிரம். என்ன இவ்வளவு அதிகமா இருக்கே என்றதற்கு இரண்டு நாட்களுக்கு இது மலிவு அம்மா என்று மகள் சொன்னதைக் கேட்டு நெஞ்சே அடைத்துவிட்டது வாணிக்கு. எதுக்கம்மா இரண்டு நாட்கள் என்றதற்கு அதுதான் இப்ப பாசன். முதல் கிழமை பதிவுத் திருமணம் முடிய எல்லாருக்கும் பார்ட்டி எங்கட விருப்பப்படி. அடுத்த கிழமை அய்யரோட எங்கட கல்சர்ப்படி உங்கடை ஆசைக்கு வெட்டிங் அம்மா என்று மகள் கொஞ்சலாகக் கூறியதில் எதுவும் சொல்ல முடியாமல் தலையை மட்டும் ஆட்டவேண்டியதாகிவிட்டது. எங்களுக்கும் ஒரு ஐநூறு சனமாவது வரும்தான். பதினைந்து வருடங்களாக இங்க குடுத்ததுகளை வாங்கத்தானே வேணும் என்பதாய் மனதை சமாதானம் செய்து கொண்டாள். ஏன் உன்ர மேள் உந்த எடுப்பு எடுக்கிறாள் என்று கணவர் சினக்க அந்தாளையும் ஒருவாறு சமாதானம் செய்தாயிற்று.

இன்று மூன்றாவது நாளாக சேலை எடுப்பதற்காய் அலைந்தாயிற்று. ஆயிரம் பவுண்ட்ஸ் சேலைவரை பார்த்தும் மகளுக்குப் பிடிக்கவில்லை என்பது வாணிக்குச் சினத்தைத்தான் வரவழைத்தது என்றாலும் எதுவும் செய்ய முடியாது பார்த்துக்கொண்டே இருக்க மட்டும் தான் முடிந்தது. மண்டப அலங்காரம், வீடியோ, உணவு, கேக் அது இது என்று எல்லாம் பாத்துப்பார்த்தது ஓடர் செய்து முடிய கிட்டத்தட்ட முப்பதினாயிரம் பவுன்சுக்குக் கிட்ட முடிய வாணிக்கு மலைப்பாகத்தான் இருந்தது.

கலியாணம் பேசி முடிஞ்சு இரண்டு பக்கத்தாரும் இருந்து கதைத்த போது சீதனம் எதுவும் எங்களுக்கு வேண்டாம். கலியாணச் செலவையும் நாங்கள் அரைவாசி பொறுக்கிறம் என்று வாயால் சொன்னதோடு சரி. அதுக்குப் பிறகு மறந்துபோய்த் தன்னும் எதுவுமே அவர்கள் கதைக்க வில்லை. செலவுக்கணக்கை அவைக்குக் காட்டுவமோ அப்பா என்று மனிசனிட்டைக் கேட்டதுக்கு சும்மா பேசாமல்விடு என்றதில் இவளும் அது

பற்றி மகளிடம் கூடக் கதைக்கவில்லை. என்ன இருந்தாலும் வீட்டில் முதல் திருமணம் என்பதும் ஐநூறு பேரில நானூற்றைம்பது பேராவது கட்டாயம் வருவினம். எப்பிடியும் ஒரு இருபதாயிரம் சேரும். ஒரு ஐயாயிரத்தை எடுத்துக் கொண்டு மகளின்ர பேரில போட்டுவிடுவம். பிறகு அவை வீடு வாங்க உதவும் என்று மனதில் எண்ணியபடியே கலியாண வேலையில் மூழ்கிப் போனாள்.

யூரோப்பில இருந்து வந்த சொந்தங்களுக்கு தங்குவதற்கு இங்கிருக்கும் நண்பர்களின் வீடுகள், உணவுகள் ஒழுங்கு செய்வதில் இருந்து அவர்களை மண்டபத்துக்கு அழைத்துப்போக வாகன ஒழுங்கு செய்வதில் இருந்து... அப்பப்பா ஒரு கலியாணத்தை நடத்தி முடிக்க எவ்வளவைச் செய்யவேண்டி இருக்கு. முந்தியெல்லாம் ஒரு அய்யரே வந்து எல்லாவற்றையும் செய்திட்டுப் போவார். இப்ப ஐயர்மாருக்கு ஒரு சிண் வேறை. இரண்டு பேருக்கும் தட்சணை தனித்தனி. அதுக்காக அய்யர் இல்லாமல் கலியாணம் செய்ய ஏலுமே என்றும் மனத்தைத் தேற்றி மாப்பிளை பெண்ணின் கழுத்தில் தாலி கட்டி முடியத்தான் வாணிக்கு பெரிய நிம்மதி ஏற்பட்டது.

கிட்டத்தட்ட சொன்ன எல்லாருமே வந்திருந்து மணமக்களை வாழ்த்தியது அதைவிட பெரிய நிம்மதி. சாப்பிட்டு முடியவே சிலகுடும்பங்கள் வேலைக்குப் போகவேணும் என்று இவளிடம் என்வலப்பைக் கொடுத்து விட்டுக் கிளம்பிவிட்டார்கள். நிண்டு படம் எடுத்துவிட்டுப் போங்கோ என்று இவள் சொன்னாலும் இன்னும் வீடியோக்காரர் பெண்ணையும் மாப்பிள்ளை யையும் தனியா வைத்துப் படம் எடுத்து முடியவில்லை. சனங்கள் வேற சாப்பிட்டு முடிய தாமே வரிசையில் நிற்கவாரம்பிக்க, இவள் ஆக்கள் வெயிற் பண்ணீனம். கேக்கை வெட்டிப்போட்டு பிறகு ஆட்கள் போன பிறகு இவையை வைத்து படம் எடுங்கோவன் என்றதையும் வீடியோக்காரர் கேட்பதாய் இல்லை. ஆட்களின் வரிசை பார்த்து என்ன செய்வது என்று தெரியாமல் கையைப் பிசைந்துகொண்டு நிற்க மட்டுமே வாணியால் முடிந்தது.

ஒருவாறு எல்லாரும் மணமக்களுடன் நின்று படம் எடுத்து முடிய வாணியின் குடும்பம் சகோதரர்கள் என்று ஒரு ஐந்து மணிக்கு திருமண வீடு நிறைவுக்குவர மணவறையின் அருகில் பரிசுகள், பணம் வைத்தபடி கொண்டு வரும் காட்டுகள் என்பவற்றைப் போடுவதற்கு அழகிய வேலைப் பாட்டுடன் வைக்கப்பட்டிருந்த மொய்ப் பெட்டிக்குக் காவலாக வாணி தனது மகனைக் காவலுக்கு வைத்திருந்தாள். ஆனால் இப்போது பார்க்க

மாப்பிள்ளையின் தாயார் அப்பெட்டிக்குப் பக்கத்தில் போய் இவள் மகனிடம் எதோ சொல்லிவிட்டு பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய் தான் இருந்த கதிரையில் வைக்க சுள் என்று கோபம் தலைக்கு ஏற இவள் செய்வதறியாது திகைத்து நிக்கிறாள்.

கணவனைத் தேடிப்பிடித்து நீங்கள் போய்க் கேளுங்கோ அப்பா என்று சொல்ல எனக்கு ஏலாது. கொஞ்சம் அமைதியாய் இரு. அவையிண்ட ஆட்களும் தானே காசு குடுத்திருப்பினம். அதை எடுத்துப்போட்டு எங்கடையைக் குடுத்து விடுவினம். எல்லாத்துக்கும் முந்துறதுதான் உன்ர வேலை என்று சொல்ல அவளுக்கும் அது நியாயமாகப் பட தன்னை எண்ணி வெட்கம் ஏற்பட்டது அவளுக்கு.

திருமணம் முடிந்து ஒருவாரம் மாப்பிளை வீட்டிலேயே மகளும் தங்கிவிட, இவள் மகளைப் பார்க்கும் ஆவலில் போன் செய்து “என்னம்மா இண்டைக்காவது நீங்கள் வாறியளோ” என்று கேட்க “இரண்டுநாள் கழித்து வருகிறோம்” என்று மகள் கூற எத்தனை நாட்கள் வளர்த்து ஆளாக்கியும் கணவன் வந்ததும் எப்படி பிள்ளைகள் பெற்றோரை மறந்து விடுகிறார்கள் என்று தவிப்போடு கணவனிடம் சொல்கிறாள். “அவள் மட்டும் இல்லை நீயும் அப்பிடித்தானே” என்ற கணவனின் கூற்றில் உண்மை இருக்க வேறு வழியின்றி இரண்டு  நாட்கள் மகளின் வரவுக்காக ஆவலோடு காத்திருக்க ஆரம்பித்தாள்.

இரண்டாம் நாட் காலையில் மலர்ந்த முகத்துடன் மகளைக் கண்டதும் எல்லா ஆதங்கங்களும் ஓடி ஒழிய கட்டி அணைத்தவளிடம் “அம்மா இதை முதலில் பிடியுங்கோ. மாமி இதை உங்களிடம் குடுக்கச் சொல்லித் தந்தவ. பிறகு நான் மறந்திடுவன்” என்று கூறி மகள் குடுத்த என்வலப்பை திறந்து பார்த்தவள், அதற்குள் ஒரு வெள்ளைத் தாளில் இவள் சொல்லித் திருமணத்துக்கு வந்தவர்கள் பெயர்கள் மட்டும் நிரையாக எழுதப்பட்டிருப்பதைக் கண்டு கோபம், அவமானம், கண்ணீர் என்பவற்றை ஒருங்கே அடக்கியபடி வாங்கோ பிள்ளையள் முதல்ல சாப்பிடுவம் என்றபடி குசினிக்குச் செல்லலானாள்.

# தண்டனை

இன்றுடன் அவள் இங்கு வந்து இரண்டு மாதங்கள் முடிந்துவிட்டன. எட்டு மாதப் பிள்ளை அங்கு என்ன செய்கின்றதோ என்பதே எந்நாளும் இவள் கவலையாக இருக்கிறது. எத்தனை கெஞ்சியும் பிள்ளையைக் கண்ணில்க் காட்டுகிறார்களே இல்லை. அதுவும் முதல் பிள்ளை. எனக்குத் தெரியாமல் அவனுக்குப் பிள்ளையைக் காட்டுவார்களோ என்று எண்ணும்போதோ மனம் பதட்டப்படத் தொடங்கிவிட்டது தாரணிக்கு.

“நீ தேவையில்லாமல் எல்லாத்துக்கும் டென்ஷன் ஆகாதை அக்கா. இன்னும் கொஞ்ச நாள்த்தான். பொறுமையாய் இரு.”

“நீ எண்டாலும் தருணை ஒருக்காய் போய்ப் பாரனடா. இரவிலை என்னால நித்திரையே கொள்ள ஏலாமல் இருக்கடா”

“நான் இண்டைக்கே போய்க் கதைக்கிறன். நீ நிம்மதியாய் இரு அக்கா”

விடைபெற்றுச் செல்லும் தம்பியைக்கூட அவளால் முற்றிலுமாக நம்பமுடியாவிட்டாலும் இப்ப அவனை விட்டாலும் யாருமில்லை அவளுக்கு என்னும் உண்மை உறைக்க, தம்பியார் கண்ணில் மறைந்த பின்னரும் கூட திரும்ப அவர்களுடன் சென்று தன் அறையை அடைந்து கட்டிலில் அமர்கிறாள்.

அவளுக்கு வேறு வழியே இல்லாமல் அமர்வது

அல்லது படுப்பதும் இருப்பதுமாகவே வாழ்வு சென்றுகொண்டிருக்கிறது. உணவுகூட நேரத்துக்கு வந்தாலும் எல்லாவற்றையும் உண்ணவும் முடியாது, கொட்டுவதும் அழுவதும் தனக்குள்ளேயே பிதற்றுவதுமாக நாட்கள் போய்க் கொண்டிருந்தன. கணவன் பலமுறை அவளை பார்க்க வந்தும் அவள் மறுத்து விட்டாள்.

“அத்தானில என்ன அக்கா பிழை? நீ ஏன் அவரில் கோவிக்கிறாய்” என்று தம்பியார் பலதடவை கேட்டும் அவள் எந்தப் பதிலும் கூறவேயில்லை. என்ர பிள்ளையை சொந்த அப்பப்பாவோட தானே விட்டுட்டு வேலைக்குப் போனனான். வேற யாரோடையும் எண்டால் தான் என்னிலை பிழை சொல்லவேணும். ஆரையோ நம்பி என்ர சின்னப் பிள்ளையை விட்டுவிட்டு நான் வேலைக்குப் போனது என் பிழை தானே என்று தனக்குத்தானே தவறைப் பலமுறை ஒப்புக்கொண்டும், நான் செய்தது தப்பே இல்லை என்று ஆணித்தரமாக மனம் சொல்ல, பின்னால் உள்ள சுவரில் சாய்ந்து அழவாரம்பிக்கிறாள் தாரணி.

“நாளைக்கு காலை தயாராய் இருக்க வேணும். கோட்ஸ்சுக்கு அழைத்துப் போவோம்” என்றபடி அவளின் ஆடைகளை அந்தப் பெண் கொண்டுவந்து கொடுக்க, தலையை ஆட்டி அதை ஆமோதித்தவண்ணம் என்னென்ன கேட்பார்களோ? என்ன சொல்வார்களோ? என்று யோசனை ஓட, நன்றாய்ப் போய்க்கொண்டிருந்த அவளின் திருமண வாழ்க்கை மனதின் முன்னே வருகிறது.

***

இலங்கையிலிருந்து திருமணமாகி கணவன் இவளை தாங்காத குறையாக இங்கு அழைத்து வந்தது முதல் நூற்றைம்பது பேருக்குச் சொல்லித் திருமண வரவேற்பு வைத்ததுவரை எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. இவள் கேட்காமலே நகை நட்டு வாங்கிக் கொடுப்பது, விதவிதமாய் ஆடைகள் வாங்கிக் கொடுப்பது என்று இவளுக்கும் மனமெல்லாம் நிறைஞ்சு போனதுதான்.

போகப்போகத்தான் கணவனின் பொறுப்பற்ற செலவுகளும் கடனும் இவளுக்குத் தெரியவந்தது. இனி என்ன திரும்பப் போகவா முடியும்? முதலில் அவனுக்கு வரும் கடிதங்களை இவள் திறந்தும் பார்ப்பதில்லை. ஒருநாள் தற்செயலாக ஒன்றைத் திறந்து பார்க்க கிரெடிட் காட்டில் இவன் பெரிய தொகை எடுத்திருப்பது தெரிய துணிந்து கேட்டுவிட்டாள்.

“உம்மை ஸ்பொன்சறில் கூப்பிட்டது எண்டவுடனே எல்லாம் பிரீ எண்டு நினைச்சீரே? எல்லாத்துக்கும் இங்க காசுதான். டிக்கட், நகைநட்டு, கலியாணச் செலவு எல்லாம் நான்தானே. உமக்கு வீடு மட்டும் தானே. நான் சீதனமா காசு ஒண்டும் கேட்கேல்லையே” என்பவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள் தாரணி.

விடுமுறைக்கு இலங்கை வந்தவன், தன்னுடன் கூடப் படித்த நண்பனையும் தேடி வந்தான். நண்பனுடன் கதைத்துக்கொண்டு இருந்த வனை தேநீரும் கடையில் வாங்கிய ரோள்சும் குடுத்து தாயார் உபசரித்துக் கொண்டிருக்க, வேலைக்குப் போய்விட்டு ஸ்கூட்டியில் வந்து இறங்கிய இவளைப் பார்த்துவிட்டு “யாரடா இது” எண்டு கேட்டவன், தமையன் இவளை பற்றிக் கூறியதும் இவளை பார்த்து “எப்பிடி இருக்கிறியள்” என்று இயல்பாக் கினான். இவள் உடனேயே சிரித்துவிட்டு அவனுக்குப் பதில் சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

அன்றிலிருந்து ஒரு வாரம் மிதுன் இவள் வரும் நேரங்களில் தமையனுடன் கதைத்துக் கொண்டிருந்தான். அதன் பின் தான் தமையன் தாயாரையும் இவளையும் கூப்பிட்டு “மிதுன் இவளைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். இவளுக்கும் சம்மதம் என்றால் செய்து வைப்பம்” என்றான். தாய்க்கோ சரியான மகிழ்ச்சி. இரண்டாவது மகனை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் லண்டன் அனுப்பினது எவ்வளவு நல்லதாப் போச்சு. அவனிட்டை ஒருக்கா விசாரிக்கச் சொல்லச் சொல்லுவம் என்று போனில் விபரம் சொல்லி அவனும் விசாரித்ததில் நல்ல குடும்பம் என்று தெரியவர எல்லாருக்குமே தலைகால் புரியவில்லை.

வெளிநாட்டில் இருந்து வந்தவன் தன்னை விரும்பிக் கேட்கிறான் என்றால் இவளுக்கும் கசக்குமா என்ன? பார்ப்பதற்கும் நன்றாகத்தானே இருக்கிறான் என்று இவளும் சம்மதம் சொல்ல எல்லாம் விரைவாக நடந்தேற, கனவுபோல் ஓராண்டு முடியும் முன்னரே இவள் லண்டன் வந்து விட்டாள்.

அதன் பின் தான் அவனின் கடன் விபரங்கள் தெரியவர, தானும் எங்காவது வேலைக்குச் செல்லலாம் என முடிவெடுத்துக் கணவனிடம் சொல்ல, அவனும் தன் நண்பனின் கடையில் வேலையும் எடுத்துக் கொடுக்க, இவளுக்கு வேலை கடினமாக இருந்தாலும் கணவனின் கடன் குறைகின்றதே என்று மனம் நிம்மதியானது.

ஆறு மாதங்கள் வேலை செய்தபின் இவள் கர்ப்பம் தரிக்க, தொடர்ந்து வேலைக்குப் போவதா விடுவதா என்று இவள் மனம் குழம்பிய வேளை, “முதல் பிள்ளை தானே. எட்டு மாதங்கள் வரை வேலை செய்யலாம்” என்று கடையில் வேலை செய்த நண்பி சொல்ல, இவளும் தொடர்ந்து போய்க்கொண்டுதான் இருந்தாள். எட்டாம் மாதம் இவளுக்கே அசதியாக இருக்க வீட்டில் இருக்க வாரம்பித்தாள்.

தமக்கையுடன் இருந்த மாமியார் இவளுக்குக் காவலாக வீட்டில் வந்து ஓரிரு மாதங்கள் இருந்தார் தான். ஆனாலும் இருவருக்கும் பெரிதாக ஒட்டவேயில்லை. ஏதோ கடமைக்கு இருவரும் கதைப்பது போலவே இவளுக்கு இருக்கும். இவளாக ஏதாவது கேட்டால் பதில் வருமேயன்றி அதைக் கொண்டுவா இதைக் கொண்டுவா என்று ஏவுவதோடு தன் வேலை முடிந்ததாக எண்ணிக்கொள்வார். வாயும் வயிறுமாய் இருப்பவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டு ஒருநாள் கூடச் சமைத்ததும் இல்லை. சீதனம் ஒண்டும் கொடுக்காமல் மகனை மருட்டிவிட்டாள் என்று இவளில் கோபம்.

குழந்தை கஷ்டப்படுத்தாமல் பிறந்து விட்டான். மாமியாருக்கும் மிதுனுக்கும் கூட ஆண்பிள்ளையாய்ப் பிறந்தது மகிழ்ச்சி. இவனின் சகோதரி, நண்பர்கள் என்று சிலர்தான் குழந்தையைப் பார்க்க வந்தார்கள். கனடாவில் மிதுனின் மூத்த சகோதரியுடன் வாழும் இவனின் தந்தையும் இவனின் திருமண வரவேற்பிற்கு வந்து போனதோடு சரி. இப்ப பேரனைப் பார்க்க வந்து இவர்களுடனேதான் தங்கப்போகிறாராம் என்ற தகவலை இவன் கூறியதிலிருந்து இவளுக்கு ஏற்பட்ட எரிச்சலை இவள் வெளியே காண்பிக்க முடியாமல் உள்ளுக்குள்ளேயே அடக்கிக்கொண்டாள்.

என்ன இருந்தாலும் மிதுனின் தந்தையை எப்படி இவர்களுடன் வந்து நிற்கவேண்டாம் என்று சொல்வது? அருகில் இருக்கும் தமக்கையுடன் தான் தாயார் வசிப்பது. வீட்டில் இருக்கும் சிறிய அறையில் தான் தாயார் தங்கு கிறார். அங்கு தந்தையும் வந்திருக்க முடியாதபடி சிறிய வீடு. இவர்கள் வசிக்கும் அபார்ட்மென்ட் ஒரு பெரிய படுக்கை அறையும் ஒரு சிறிய அறை யும் கொண்டதனால் மாமனார் இங்கு வருவதைத் தடுக்கமுடியவும் இல்லை.

மாமனார் வந்து சேரந்தபின் மருமகளே மருமகளே என்று இவளுடன் நல்ல வாரப்பாட்டுடன் தான் இருந்தார். இந்த நாடுகளில் மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்க முடியாதுதானே. குழந்தை பிறந்து இரண்டு வாரங் கள் லீவெடுத்துவிட்டு மிதுன் சமைத்துக்கொடுத்து ஒத்தாசையாகத்தான் இருந்தான். அதன்பின் அவனாலும் லீவெடுக்க முடியவில்லை. பிள்ளையின்

அலுவல்கள் முடிய பெரும் எடுப்பு எடுக்காமல் இரண்டுபேருக்கும் இவளேதான் சமைக்கவேண்டியதுமாயிற்று. மாமனார் வந்த பிறகு அவரே சாமான்கள் வாங்கக் கடைக்குப் போவது, மரக்கறி இறைச்சிகள் வெட்டித் தருவது, சில நேரம் தானே சமைப்பது என்று இவளுக்கும் மாமனார் தம்முடன் இருப்பதும் உதவியாய்த்தான் இருந்தது.

இவளும் குழந்தை கிடைத்து ஐந்து மாதங்களாகிவிட்டபடியாலும் தாய்ப்பால் சுரப்பதும் நின்று போத்தல் பால் பிள்ளை பழக, மாமனாரிடம் விட்டுவிட்டு திரும்பவும் வேலைக்குப் போனால் என்ன என்ற ஆசை எட்டிப் பார்க்க, கணவனிடம் கேட்க முதலே மகிழ்வாக அவன் தலையாட்டினான்.

ஏற்கனவே அங்கு வேறொருவர் வேலைக்குச் சேர்ந்துவிட இவளுக்கு ஒரு நாளைக்கு மூன்று மணிநேர வேலையே அங்கு கிடைத்தது. அதுவும் நல்லதுதான். போவதும் வருவதும் தெரியாது என்று எண்ணி மகிழ்ந்தவளாய் பிள்ளைக்கு குளிக்கவார்த்து, சமையல்முடித்து, பிள்ளையின் போத்தல் சாப்பாட்டைத் தீத்தித் தூங்கவைத்துவிட்டுத் தானும் சமையலை முடித்து மாமனாருக்கும் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, குளித்து வெளிக்கிட்டு ஒண்டுக்கு இறங்கினால் 1.30 - 4.30 வரை வேலை. ஐந்து மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவாள்.

வேலைக்குப் போகுமுன்னரே மாமனுக்குக் கஸ்டம் கொடுக்காமல் பிள்ளைக்குப் மாப்பாலைக் கரைத்து வோமரில் மூடிவைத்து விட்டுப் போனால் பிள்ளை மூன்று மூன்றரைக்கு எழும்பிப் பாலைக் குடிப்பான். பிறகு இவள் ஐந்துக்கு வந்து இரவுச் சாப்பாட்டைச் செய்து பிள்ளைக்குக் கொடுப் பாள். இடையில் பிள்ளை அழுதால் மாமனார் பிள்ளைக்குரிய தேநீரைக் கரைத்து ஆற்றிக் கொடுப்பார். அதனால் இவளுக்குப் பெரிதாகப் பிரச்சனை இல்லை.

ரிங் ரிங் ரிங்........ என்னும் மணியோசையில் இவளின் நினைவுகள் கலைய, அது இரவு உணவுக்கான மணி என்பதை உணர்ந்து விருப்பமே யின்றி எழுந்து மற்றைய பெண்களுடன் உணவு அருந்தும் இடம் நோக்கிச் செல்கிறாள்.

***

இது இரண்டாவது தடவை இவள் கோட்டுக்கு வருவது. என்ன நடந்தாலும் ஒன்றுதான் என்ற மனநிலை இவளுக்கு வந்திருந்தாலும் மகனைப் பார்க்கவாவது அனுமதி கேட்கவேண்டும் என்று முடிவெடுத்த

வளாகக் காத்திருந்தாள். இவளின் முறை வந்ததும் இவளின் வக்கீல் இவளை உள்ளே கூட்டிக்கொண்டு போக, இவளுக்கான ஒரு மொழி பெயர்ப்பாளரும் எதோ தீண்டாத தகாத பொருளைப் பார்ப்பதுபோன்று இவளைப் பார்க்கப் பிடிக்காது தலையை வேறு புறம் திருப்பிக்கொண்டு வர, இவளுக்குச் சிரிப்பு வருகிறது. சரி பிழைக்களுக்கும் அப்பால் ஒரு மனிதரை மதிக்கத் தெரியாதவனை எப்படி இந்தத் தொழிலில் அனுமதித்தார்கள் என்ற எண்ணமும் எழுந்தது.

இவள் பற்றிய வழக்கு ஆரம்பமாகியதில் கூண்டில் சாட்சியாய் ஏறி நிற்கவேண்டிய நிலை. ஆனாலும் அதுகூட அவளை பாதிக்கவேயில்லை. ஏறி நின்றபின் பார்த்தால் தன் தம்பி ஒருபுறமும் கணவன் ஒருபுறமும் இருக்க சுருக்கென்று கோபம் தலைக்கேறியது. திரைப்படங்களில் வருவதுபோல் இரு வக்கீல்களும் அதிக நேரம் வாதாடவேண்டிய தேவை இன்றி இவள் திட்டமிட்டு இந்தத் தவறைச் செய்யவில்லை என்பது நிரூபணமாகியதால் இவருக்கு விடுதலை கொடுக்கிறோம் என்னும் தீர்ப்பு இவளை திக்கு முக்காடச் செய்ய, என்ர பிள்ளையை என்னட்டைத் தாங்கோ என்றாள் கத்தி அழுதபடி.

அழாதேங்கோ. பிள்ளையைத் தருவார்கள் என்று வக்கீல் சொன்னதை மொழிபெயர்ப்பாளர் சொல்ல, என் கணவனும் என் பிள்ளை யைப் பார்க்கக் கூடாது என்று சொல்லுங்கோ என்றாள். அந்தப் பிரச்சனை வேறு ஒரு நாள் தான் கதைக்கலாம். இப்ப வாங்கோ போவம் என்ற வக்கீலிடம் நன்றி கூறியபடி தம்பியார் வருகின்றானா என்று பார்த்தபடி வாசலுக்கு வருகிறாள்.

“அக்கா அத்தான் உன்னோடே கதைக்கவேணுமாம்”

“நான் ஒருத்தரோடையும் கதைக்கமாட்டன். முதல்ல பிள்ளையை எங்க வச்சிருக்கிறாங்கள் எண்டு கேளடா”

தமக்கையின் கோபம் புரிய, “சரி வா கேட்பம்” என்றபடி முன்னால் நடக்கிறான் தம்பி.

எத்தனையோ பத்திரங்களில் கையொப்பமிட்டு, பல மனநல மருத்துவத் துறையினரின் பரிசோதனைகளின் பின்னர் இவளின் பிள்ளையை இவளிடம் ஒப்படைக்கவே ஒரு மாதமாக, பிள்ளையை வாங்கியவள் நெஞ்சோடு ஆசைதீர அணைத்துக்கொள்கிறாள்.

“அம்மா இனிமேல் பிள்ளையை யாரிட்டையும் விடமாட்டன். என்ர செல்லம். அம்மா வந்திட்டன்” என்று புலம்பியபடி ஆசைதீரப் பிள்ளையைப் பார்க்கிறாள்.

“வா அக்கா வீட்டை போவம்” என்றபடி தம்பியார் காரில் ஏற, தாரணியும் காரில் ஏறி பின் இருக்கையில் பிள்ளையை நெஞ்சுடன் அணைத்தபடி இருந்தவள் மனம் வாகனத்தின் சத்தத்தையும் மீறி எங்கெங்கோ அலைந்து மூன்று மாதங்களுக்கு முன்னர் நடந்ததை நடுக்கத்துடன் நினைத்துப் பார்க்கிறது.

***

மாமனாரிடம் குழந்தையை விட்டுவிட்டு போவதற்கு மனம் இல்லைத்தான் என்றாலும், யாரும் ஏதும் சொல்லிவிடுவினமோ என்னும் பயமும்கூடவே எழ, கடை நண்பியிடம் கூறுகிறாள்.

“உமக்குப் பிரச்சனையைத் தீர்க்க மற்றவையோ காசு தரப் போயினம். நாள் முழுக்கவே வேலை செய்யிறீர். நாலு மணித்தியாலம் தானே. ஒன்றுக்கும் யோசிக்காதையும்” நண்பி கூற மனம் நின்மதி பெறுகிறது.

மீண்டும் வேலைக்குப் போய் ஒருமாதம் முடிந்த நிலையில், இரண்டு மூன்று நாட்களாக இவள் கரைத்து வைத்த பால் சிறிது பருகியபடியும் அரை வாசிகூடக் குடிக்காமலும் மிகுதி பருக்கப்படாமல் அப்படியே இருக்க, “மாமா இவனுக்குப் பால் பருக்கேல்லையோ” என்கிறாள் ஆதங்கத்துடன். “பருக்கின்னான். குடிக்கமாட்டன் எண்டிட்டான்”. என்றபடி அவர் தொலைக் காட்சியைப் பார்க்க தாரணிக்கு எரிச்சல் தான் வருகிறது.

இவள் பிள்ளையைத் தூக்கப் பிள்ளை எடுத்த சத்தி இவளின் முகத்திலும் ஆடைகளிலும் தெறிக்கிறது.

“என்னப்பன்? என்ன செய்யுது?. ஏன் பாலைக் குடிக்கேல்லை” என்றபடி முகத்தை இளஞ்சூட்டு நீரில் நனைத்த துணியால் துடைத்து சமாதானமாக மார்புடன் அணைத்துத் தூங்கச் செய்கிறாள். தொடர்ந்தும் அன்று இரு தடவைகள் பிள்ளை வாந்தியெடுத்து ஒரே சோர்வாக இருக்க, அடுத்தநாள் பிள்ளையை வைத்தியரிடம் கணவனும் மனைவியுமாகக் கொண்டு போகிறார்கள்.

வைத்தியர் பார்த்துவிட்டு என்ன என்று புரியவில்லை. இன்னும்

இரண்டு நாட்கள் பார்த்துவிட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொல்லி அனுப்புகிறார். சிறிது மன நின்மதியுடன் இரண்டு நாட்கள் வேலைக்கு லீவு சொல்லிவிட்டு பிள்ளையுடனேயே இருக்கிறாள். இவள் அணைப்பில் பிள்ளை குணமானதுபோல் தெரிய, மூன்றாம் நாள் பிள்ளையை விட்டுவிட்டு வேலைக்குச் செல்கிறாள்.

“மாமா தருணைக் கொஞ்சம் கவனமாய் பாருங்கோ” என்றபடி வேலைக்கு கிளம்பியவளுக்கு மனம் எதோ சஞ்சலமாகவே இருக்க, மனதைச் சமாதானப்படுத்தியபடியே வேலைக்குச் செல்கிறாள். அன்றைக் கென்று பார்த்து “நீர் இண்டைக்கு வாறன் எண்டு சொல்லாததால நானே வேலைக்கு வந்திட்டன்” என்று மற்ற வேலைசெய்யும் பெண் கூற, தான் இன்று வேலைக்கு வருவதுபற்றி இவர்களுக்கு கூற மறந்தது இப்போதுதான் அவளுக்கு நினைவுக்கு வருகிறது. “சரி அப்ப நீங்களே செய்யுங்கோ. நான் நாளைக்கு வாறன்” என்றபடி தாரணி பேருந்துத் தரிப்புக்கு வருகிறாள்.

பத்து நிமிடங்களில் பேருந்து வர ஒருவித நின்மதியில் பேருந்தில் ஏறி இருக்கையில் சாய்கிறாள். வீணாக வெளிக்கிட்டு வந்தது. ஒரு மணி நேரம் வீண் என்று எண்ணியபடி முப்பது நிமிடப் பயணத்தில் வீடு வந்தவள், கதவை மெதுவாகத் திறந்தபடி கைப்பையை கொழுவிவிட்டு படுக்கை அறைக்குள் நுளைகிறாள். பிள்ளைக்கு நப்பீஸ் மாற்றுவதற்காக போடப் பட்டிருந்த மேசையின் அருகில் மாமனார் தெரிய, நான் வடிவா எல்லாம் மாற்றிவிட்டுத்தானே சென்றேன் என்று எண்ணியபடி “என்ன மாமா? கக்கா இருந்திட்டானே திரும்பவும்” என்றவள் குரல் கேட்டு அதிர்ச்சியுடன் மாமனார் திரும்ப முன்னரே மாமனாரின் அரை நிர்வாண நிலை இவளின் நெஞ்சைப் பதறவைக்க, பிள்ளையின் வாயிலிருந்து ஒழுகும் திரவமும் கண்ணில்பட, புரிந்தும் புரியாமலுமான அடுத்தநொடி “டேய்” .....என்றபடி பாய்ந்து சென்று மாமனாரை இழுத்து கீழே தள்ள, இவளைத் தள்ளிவிட்டு மாமனார் கதவை நோக்கி ஓடுகிறார். இவள் பாய்ந்து சென்று மீண்டும் ஆவேசத்துடன் அவரை இழுத்துக் கீழே விழுத்தி அருகில் இருந்த கதிரையை எடுத்து தன் பலம்கொண்டமட்டும் தாறுமாறாகத் தாக்குகிறாள்.

“டேய்” என்று தமக்கை கத்திய சத்தத்தில் என்னவோ எதோ என்று காரை பிரேக் பிடித்து நிறுத்திய தம்பி, அக்கா ஒக்கேயா?? என்று கேட்கத்தான் இவளுக்கு நிகழ்காலம் கண்ணில் தெரிகிறது.

யாரை மன்னித்தாலும் தன் கணவனை மன்னிக்கவே முடியாது. அன்றைக்கு அவள் போன் செய்து கணவன் வர அவனிடம் எல்லாம்

சொன்னதும், கணவன் அவள் காலில் விழுந்து கெஞ்சியதும் காதுகளில் நாராசமாக இன்றும் கேட்கிறது. “பிளீஸ் தாரணி. அப்பா செய்ததை வெளியில சொல்லிப்போடாதையும். எங்கட குடும்ப மானமே போயிடும். வேற ஏதும் சாட்டுச் சொல்லுவம்”.

சீ என்று அவனை அன்று உதறியவள் தான்.

# அவனும் அவர்களும்

அந்த மேளச் சத்தத்தின் அதிர்வில் கண் விழிக் கிறார் தேவர்.

டகு டகு டகு டகு டகு டகு டகு டகு டண் டண் டண்

டாடாண்டு டண் டண் டாடாண்டு டண் டண்

பறை மேளத்துக்குச் சொல்லியிருக்கு எண்டல்லோ சொன்னவை. இதென்ன கர்ண கடூரமான ஒரு அடி. சத்தத்தைக் கேட்டால் பறை மேளச் சத்தம் போல இல்லையே. மெதுவாக யார் அடிக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தர் தேவர். அதில் ஒன்றே ஒன்றுதான் பறை மேளம். மற்ற இரண்டும் வேறு வடிவத்தில் இந்தியாவில் கிந்திக் காரங்கள் அடிக்கிற மேளத்தின்ர வடிவில இருக்க, எல்லாமே இப்ப மாறிக்கொண்டேதான் வருகுது என்னைத் தவிர என எண்ணிக்கொண்டார். தாளக்கட்டுப்பாட்டோட தான் மூன்றுபேரும் மேளத்தை அடிக்கினம். ஆனாலும் முன்னைய இசை எங்கோ தொலைந்து... சனங்களுக்கும் அது பற்றி எல்லாம் யோசிக்க எங்க நேரம். காசைக் குடுத்துக் கடமையைச் செய்தாச் சரி என்ற மனநிலை.

டாங்கு டுக்குடு டுக்குடு டுக்குடு

டாங்கு டுக்குடு டுக்குடு டுக்குடு

டாண் டாண் டாண் டாண் டாண் டாண்

டாங்கு டுக்குடு டுக்குடு டுக்குடு

முன்னரெல்லாம் செத்தவீடுகளுக்கு அடிக்கும் இசை நினைவில் வந்து மனதை நிறைக்க பெரிய

பெருமூச்சு வெளிவருகிறது அவரிடம் இருந்து.

உடலை அசைக்க முடியாமல் இருக்கிறது. கிட்டத்தட்ட ஆறு மாதங்களாகப் படுத்த படுக்கைதான். எட்டு மாதங்களுக்கு முதல் சைக்கிளால விழுந்து ஆஸ்பத்திரியில கொண்டுபோய் போட்டதுதான். கோதாரி விழுந்த கொறோனா அங்க தொத்தி தனி வாட்டில கொண்டேப் போட்டு ஒருத்தரும் கொறோனா வந்தவையைப் பாக்க வரேலாது எண்டுபோட்டு, “இவரைப் பார்க்க தனி ஆள் போடுவம். ஒரு நாளைக்கு 2000 ரூபா தரவேணும்” எண்டு சொன்னார்கள். அங்க போய் ஆரிட்டைக் கதைக்க முடியும்? உடனேயே வீட்டுக்காறரும் வேற வழியில்லாமல் ஓம் என்று தலையாட்ட, ஒழுங்கான சாப்பாடுகூட அவங்கள் தராமல்த்தான் நான் சரியாய் இளைச்சுப்போனன் என எண்ணியவருக்கு மானச்சாட்சி உறுத்தியது.

காலையில இடியப்பமும் சொதியும் சம்பலும் கட்டிய பார்சல் கொண்டுவந்து குடுத்தவங்கள் தானே. மத்தியானமும் இரண்டு கறியோட சோறு, இரவிலும் என்ன வேணும் எண்டு கேட்பாங்கள். சிலவேளை பக்கத்துக் கட்டில்காரரர் சாப்பிடும்போது அவிச்ச முட்டை கூடக்கண்ணில் பட்டதுதான். இவர் தான் வீட்டில இருந்து சாப்பாடு வாறேல்லை என்ற கோபத்தில வேண்டாம் எண்டு தலையாட்டிவிட்டுச் சாப்பிடாமல் பிடிவாதம் பிடிச்சது. சாப்பிடாமல் விடவிட வயதுபோன இவரின் குடல் இன்னும் சுருங்கிப்போய் இவரால ஒழுங்காச் சாப்பிடவே முடியாமல் போச்சு.

ஒரு மாதத்தின் பின்னர்தான் அவரை வீட்டுக்குக் கூட்டிப் போக அனுமதித்தார்கள். இவரைப் பார்த்த ஆளுக்கு வீணாக அறுபதாயிரம் கட்ட மருமகன் தான் தன் இருப்பிலிருந்த பணத்தைக் கொடுக்க வேண்டியதாகி விட்டது. இவருடைய மருமகன் இவரைக் கூட்டிக்கொண்டு போக வந்து பார்த்து என்ன இப்பிடி மெலிச்சு போனார் மாமா என்று ஏங்கித்தான் போனான்.

வீட்டை போனதும் இவர் மனைவி சந்திரா ஐயோ என்னப்பா இப்பிடி ஆயிட்டிங்களே என்று கத்திக் குளறி அழ, மாமி அவருக்கு வருத்தம் இல்லை மாமி. நீங்கள் அழுது அவரைப் பயப்படுத்தாதேங்கோ எண்டதோடை மகள்களின் சத்தம் வராத அழுகையும் நிண்டு போச்சு.

வெளிநாட்டில இருக்கிற இவற்றை மருமகன் அனுப்பின காசில உயத்திப் பதிக்கிற கட்டில் வாங்கி அவரை அதில கிடத்திச்சினம். பேரப் பிள்ளையள் எல்லாம் இவரில நல்ல உயிர். சுற்றிவர வந்து நின்று இவரின் கையைப் பிடிச்சுக்கொண்டு தாத்தா என்று விக்கியபடி இருக்கினம்.

“எனக்கு ஒண்டும் இல்லை. அதுதான் நான் வீட்டை வந்திட்டன் தானே அழாதேங்கோ அப்பனவை”

“சந்திரா உன்ர கையால இடியப்பமும் சம்பலும் சொதியும் செய்துதா”

தலையைத் திருப்பி மனைவியிடம் கேட்க “வருத்தமாக கிடந்தாலும் அவற்றை குரலிலை இருக்கிற கம்பீரம் குறையேல்லை” என எண்ணியபடி எழுபத்தி ஐந்து வயதுக் குமரி மகிழ்வுடன் சமையலறைக்கு ஓடுகிறார்.

***

பணக்காரக் குடும்பத்தில இந்திரன் மூத்த மகன். மூன்று பெயரை ஒன்றாகச் சேர்த்து பெற்றவர்கள் ஏன் அவனுக்கு வைத்தார்களோ என்று அவன் அடிக்கடி விசனப்பட்டதுண்டு. பள்ளிக்கூடத்தில சேர்ந்தபோது மார்க் கண்டு வாத்தியார் ஆரடா உனக்கு உந்தப் பெரிய பேரை வச்சது எண்டு சொல்லிக்கொண்டு அவனின் பெயரை உச்சரிக்க மற்றப் பிள்ளையள் எல்லாம் சிரிக்க இவனுக்கு அவமானமாகப் போய்விட்டது. என்ர பேர் நல்லாத்தானே இருக்கு என்று இவன் சொல்ல, “எனக்கு வாய் காட்டிறியோ. கையை நீட்டடா என்று சொல்லி தான் வைத்திருந்த பெரிய பிரம்பால் போட்ட அடியில் கை வீங்கியதுகூட இந்திரனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. இந்த வாத்தியிட்டை இன்னும் எத்தனை நாட்கள் படிக்கவேணுமோ என்ற கவலையே பெரிதாக ஏற்பட்டது.

அன்று மாலையே வீட்டுக்குப் போய்,

“ஏனமா இப்பிடிப்பெரிய பெயர் வச்சனீங்கள்” என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்க,

“எல்லாரும் ஒரேமாதிரிப் பேர் தானே வைக்கிறவை. உன்ர பெயர் ஆருக்காவது இருக்கோ சொல்லு. மற்றவைக்கு ஒரே ஒரு பேர்தான் இருக்கு. உனக்கு மூண்டுவிதமாக கூப்பிடலாம்”

தாய் கூறியது சரியாகவே பட அவனுக்கு ஆறுதல் ஏற்பட்டது. வளர வளர பெயரைக் குறுக்கிச் சிலர் தெய்வா என்றும் சில நண்பர்கள் இந்திரன் என்றும் அழைக்க இவனுக்கு இந்திரனே பிடித்துப்போனது.

பணக்காரச் செல்லர் என்ற தந்தையின் பட்டமே இவனைப் படிக்க விடாது பின் தள்ளியது. உனக்கென்ன நல்ல சொத்துப்பத்து என்று நண்பர்கள் சொல்லும்போது இவனையறியாமலே ஒரு கர்வம் இவன் முகத்தில் வந்தமர்ந்துவிடும். இத்தனைக்கும் இந்திரனின் தந்தை ஒன்றும்

உழைத்துப் பணக்காரர் ஆனவர் கிடையாது. பெரிதாகக் கல்வியறிவும் கிடையாது.

“அந்தக் காலத்தில வழியிலாத சனங்களின்ர காணியளைக் காசு குடுத்து எழுதிவாங்கினதும், விதானை, புரக்கராசி எல்லாம் சேர்ந்து கன காணியளை உப்பிடித்தான் காலாலை அளந்தே வாங்கினவை” என்று இவனின் தந்தையின் தாய்க்கிழவி பேரப்பிள்ளைகளை இருத்திவைத்துக் கதை சொல்லும் வேளைகளில் கூறும்போது,

“அதுக்கும் ஒரு திறமை வேணும் எல்லோ மாமி. எல்லாராலையும் அது முடியுமே” என்று மாமனாருக்கு இவன் தாயார் வக்காலத்து வாங்கு வதையும் சிறு வயதில் கேட்டிருக்கிறான். ஊரில கால்வாசித் தோட்டக்காணி இவர்களதாய்த் தான் இருந்தது. தோட்ட வேலை செய்யவும் நிறையப்பேர் இருந்தார்கள்.

ஆனால் இந்திரனின் வீடு அத்தனை பெரிதாக இல்லை. வளவுதான் எட்டுப் பரப்பு. அந்தப்பக்கம் இரண்டு அறைகளுடன் ஒரு கட்டடம். பக்கத்தில சமையலறை. இந்தப்பக்கம் ஒரு அறை. மூண்டும் ஆண் பிள்ளைகள் என்றதால தானோ என்னவோ செல்லர் பெரிதாக வீட்டைக் கட்டவில்லை. பிள்ளைகளுக்கும் அந்த இரசனையும் இல்லை. இப்படியான விடயங்களில் பெண்கள் எல்லாத்துக்கும் ஆசைப்படுபவர்கள் என்ற குற்றச்சாட்டு இவனின் தாயோ அதற்கு எதிர்மாறாக இருந்தார். அதற்கு அவன் தாயும் பெரிதாகப் படிக்காததுகூடக் காரணமாக இருக்கலாம். இருந்தாலும் முற்றத்தில் தனி யாக ஒரு கட்டடம். நாலு பக்கமும் குந்துகளேயன்றி சுவர் எழுப்பாமல் கத கத என்று நான்கு பக்கமும் காற்று வருவதுபோல் கட்டியிருந்தது நன்றாகத் தான் இருந்தது.

மூத்த பிள்ளை எண்டதாலை அவரை நன்றாகப் படிப்பிக்க வேண்டும் என்று அவர் தந்தை ஆசைப்பட்டாலும் அவனால் முன்னிலை மாணவனாகவே முடியவில்லை. தந்தையும் நல்ல பள்ளிக்கூடங்கள் என்று இரண்டு மூன்றில் மாற்றிமாற்றிச் சேர்த்தும் பார்த்தார்தான். ஆனால் நூல்கள் வாசிப்பதிலும், சமய அறிவுப் போட்டிக்களில் கலந்து பரிசுகள் எடுப்பதிலும் காட்டிய உற்சாகத்தையும் அக்கறையையும் படிப்பில் காட்டவே இந்திரனால் முடியவில்லை. தகப்பன் ஆசைப்பட்டதுபோல் பல்கலைக் கழகம் செல்லவும் முடியவில்லை.

சிறிய கதைகள் கட்டுரைகள் என்று எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்ப அவை வரவேற்புப் பெற்றன. “வெடிப்புக்கள்” என்ற பெயரில் அவர்

எழுதிய சிறுகதை உதயன் பத்திரிகையில் வந்து சிறந்த பாராட்டைப் பெற்றது. பெண்கள் உட்பட எத்தனையோ பேர் இவனை உற்சாகப்படுத்தி உதயன் பத்திரிக்கைக்குக் கடிதம் எழுதினர். அவற்றை அவர்கள் இந்திரனுக்கு அனுப்பியிருந்தனர். கடிதங்களைப் பார்த்தபோது அவனுக்கு வானில் மிதப்பதுபோல் மகிழ்வேற்பட்டது. இன்னும் எழுதவேணும் என்ற உத்வேகமும் எழ அவன் எழுதிக் குவித்தான். இந்திரனின் கதை வருகின்றது என்றாலே நீ நான் எனப் பத்திரிகை வாங்குவோரும் அதிகரித்தனர்.

"சேற்றில் ஒரு செந்தாமரை" என்ற பெயரில் அவன் எழுதிய தொடர் கதை மிகப் பிரசித்தமானது. பிரபல எழுத்தாளராக இருந்த "செங்கை ஆழியான்" கூட தன்னை வந்து பார்க்கும்படி இந்திரனுக்குக் கடிதம் போட, அக்கடிதத்தை தன் நண்பர்களிடம் எல்லாம் காட்டி அவர்களைப் பொறாமை கொள்ள வைத்ததை எண்ணி இப்பவும் இந்திரன் சிரிப்பதுண்டு. ஆனாலும் அவன் செங்கை ஆழியான் கூப்பிட்டவுடன் ஓடவுமில்லை. இன்றுவரை போக நினைத்ததுமில்லை.

நண்பர்களை விடுங்கள். அதன்பின் வந்த பெண் விசிறிகளின் கடிதங்களை வாசித்து முடிக்கவே அதிக நேரம் தேவைப்பட்டது. அந்த நேரம் வொலிங்டன் திரையரங்கில் வெளியாகிய "பலே பாண்டியா" திரைப்படத்தை நண்பர்களுடன் பார்த்துக்கொண்டிருந்தபோதே அப்படத்தில் வந்த பாடல் வரிகளைத் தலைப்பாக்கி "நான் என்ன சொல்லிவிட்டேன்" என்னும் தலைப்பில் தொடர்கதையை வீரகேசரியில் ஆரம்பித்து அதை அவர்களே நாவலாகவும் வெளியிட்டு இரண்டாம் பதிப்பும் பதிப்பிக்கவேண்டி வர, முக்கியமான ஒரு எழுத்தாளராக இந்திரன் அறியப்பட, எழுதுவதிலும் அவனுடைய பெண் விசிறிகளைச் சமாளிப்பதே பெரும் பாடாகிப் போனது.

அவனின் எழுத்தாற்றலைக் கண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் இவனை வேலையில் இணைந்துகொள்ளும்படி அழைத்தார் கள். இந்திரனின் பெருமை சொல்ல முடியாததாக, அவனுக்கே தாங்க முடியாததாக இருக்க, விண்வெளிக்குச் செல்லும் ஒருவன் போல தன்னை எண்ணிக்கொண்டு கற்பனைகளுடன் வேலைக்குக் கிளம்பினான்.

அவன் நினைத்தது ஒன்று. நடந்தது ஒன்று. ஒலிபரப்புக் கூட்டுத் தாபன வேலை அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை. ஒவ்வொருவரும் தானே முன்னிலை வகிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு மற்றவரை ஏறி மிதித்தபடி போய்க்கொண்டிருந்தனர். பெண்களுக்கு பேயும் இரங்கும் எண்ட தால் அவர்கள் கலகலப்போடு தம் அலுவல்களைச் சாதித்துக்கொண்டனர். இவர் நினைத்ததற்கு நேர்மாறாக இவரை யாருமே ஒரு பெரிய எழுத்தாளர்

என்று சட்டை செய்யவே இல்லை என்பது இவரின் தன்மானத்தைச் சீண்ட, நீங்களும் உங்கள் வேலையும் என்றுவிட்டு ஒரு மாதம் முடிய முன்னரே மீண்டும் இவரின் ஊருக்கு வந்துவிட்டார்.

கொஞ்சம் அனுசரிச்சுப் போயிருக்கலாமே என நண்பர்கள் அங்கலாய்த்ததுக்கு "இவையிட்டையெல்லாம் பல்லைக்காட்டி வேலை செய்ய வேண்டிய தலையெழுத்து எனக்கு இல்லை. அப்பர் சேர்த்து வைத்த முதிசமே எவ்வளவு இருக்கு. என்ர பிள்ளையளுமே சும்மா இருந்து சாப்பிட ஏலும்" என்று திமிராகப் பதிலளிக்க, நண்பர்கள் வாயை நெளித்தும் கண்ணைக் காட்டியும் ஒருவருக்கொருவர் சிரித்துக்கொண்டதை இந்திரன் கவனிக்கவில்லை.

வந்ததும் வாராததுமாக தன்னைச் சந்திக்க வருமாறு தூது அனுப்பிய அளவெட்டி வனஜா மூன்று மாதம் கற்பமாக இருப்பதாகக் கூற, பெரும் இடி ஒன்று தன்னைத் தாக்கியதுபோல் நிலைக்குலைந்தான் இந்திரன்.

***

திடீரென்று செத்தவீட்டில் சலசலப்பு அதிகமாக தேவர் கண்ணைத் திறந்து பார்க்கிறார். முன் வீட்டு கணபதிப்பிள்ளையின் மகள் சுகிர்தா "ஐயோ எங்களை எல்லாம் விட்டுட்டுப் போட்டியளோ" என்று தலையிலடித்து அழுத படி வருகிறாள். அவளைப் பார்த்தவுடன் எழும்பி இருந்து பார்க்கவேண்டும் போல இருக்க எழ முயற்சிக்கிறார். அவரின் கையைத் தவிர எதையுமே அசைக்க முடியவில்லை.

இப்ப உவளுக்கு அறுபது வயது இருக்கும் என்று எண்ணிய தேவர், இந்த வயதிலும் இன்னும் கட்டுக்குலையாமல்த்தான் இருக்கிறாள். சுருள் முடியும் இறுகிய உடலும் அவளின் வயதில் பத்தைக் குறைத்தே மற்றவர் மதிப்பிடக்கூடியதாய் இருக்கின்றது எனத் தனக்குள் எண்ணிக்கொள்கிறார்.

தேவண்ணை தேவண்ணை என்று இந்த வீட்டு முற்றத்தைச் சுற்றியவள் தானே. இண்டைக்கு குழந்தை, கணவன், பொறுப்புகள் எண்டு மட்டுமில்லை, மட்டுவிலுக்குக் கலியாணம் கட்டிப் போனபிறகு நெருங்கின உறவுகளின் திருமணத்தைத் தவிர வேறு எதுக்கும் இந்த ஊர்ப் பக்கம் அவள் எட்டியும் பார்க்கேல்லை. அப்படி எப்பவாவது தாயைப் பார்க்க வந்தாலும் புருஷனோட வந்திட்டு அப்பிடியே போய்விடுவாள். பிள்ளைகள் பேர்த்தி யாரைப் பார்க்க சிலவேளை வாறதுதான். பெட்டை உரிச்சுவச்சு சுகிர்தா போலவே இருக்க, தேவர் பார்த்துவிட்டுப் போய்விடுவார்.

பிரேதத்துக்கு மேலே விழுந்துகட்டி அழுதுவிட்டு பக்கத்தில் கதிரையில் இருந்த சந்திராவைக் கட்டிப்பிடித்து அழத்தொடங்க, சந்திரா வுக்கு வந்த கோபத்தில் சுகிர்தாவைத் தள்ளிய தள்ளில் சுகிர்தா ஒருவாறு சமாளித்து காலை ஊன்றி அப்பால் நகர்ந்துபோக, அதைக் கவனித்த தேவருக்கு சுகிர்தாவின் மேல் இரக்கமும் சந்திராவின் மேல் ஒருவித பச்சா தாபமும் எழுந்தது. கூடவே ஒரு பயமும் எழுந்தது. சந்திராவுக்கு அந்த விஷயம் தெரியுமோ? என்னட்டை ஒருநாளுமே தெரிஞ்ச மாதிரி இதுவரை காட்டிக்கொள்ளேல்லையே. சரியான அமசடக்கி தான் சந்திரா என்று எண்ணியவர் முந்தி நடந்தவற்றை எல்லாம் ஒவ்வொன்றாய் நினைவில் கொண்டுவர முயன்றார்.

அக்கம் பக்கத்தவர் எல்லாம் இவர்கள் வீட்டுக்கு வந்து போவார்கள். வாசிப்பில் இவருக்கு இருக்கும் ஆர்வம் காரணமாக ஒரு அறை முழுவதும் கதைப்புத்தகங்கள் நிறைந்த அலுமாரிகள் நிறைந்திருக்க பலரும் வந்து வாங்கி இவரின் வீட்டுக் குந்தில் இருந்து வாசித்துவிட்டுப் போவார்கள். எவருக்குமே இவர் கொண்டுபோய் வாசிக்க அனுமதித்ததில்லை. இவர் பெற்றோர் உட்பட வீட்டில் உள்ள மற்றவர்கள் கூட அந்த அறையுள் இவர் அனுமதியின்றி நுழைவதே இல்லை. இவருக்கு அது கோவில் போல.

கோயில் திருவிழாக்கள் எண்டால் சொல்லி வேலையில்லை. சுவாமி தூக்குவது தொடக்கம் எல்லாமே இவர்கள் தலைமையில் நடக்கும். ஆண்கள் எல்லாம் வேட்டி கட்டி பார்க்கவே பக்தி மயமாக இருக்கும். இவர் வேட்டி கட்டி இடுப்பில் நிறத் துண்டு ஒண்டும் கட்டி யானைப்பல் வைத்துக் கட்டிய பென்ரன் கோர்த்த நாலு பவுண் தங்கச் சங்கிலியையும் கழுத்தில போட்டுக் கொண்டு றோட்டால போனால் ஆரெண்டாலும் திரும்பிப் பார்க்காமல் விடாயினை. அத்தனை கம்பீரமாகவும் அழகாகவும் இருப்பார். எத்தனையோ பெண்கள் எல்லாம் கண்களால் கதை சொல்லிவிட்டுக் கடந்து போவார்கள். ஊருக்குள் கொஞ்சம் கவனமாக இருக்கவேண்டும் என்பதில் இவர் கவனமாக இருந்த படியால் நல்லகாலம் பல இடங்களில் தப்பிவிட்டார்.

சுகிர்தாவுக்கு அப்ப பதினேழு வயது தான் இருக்கும். இவருக்கு முப்பத்திமூன்று கடந்திட்டுது. தளதளவென பெரிய கண்களும் நீண்ட முடியுடனும் இருந்த அவள் அடிக்கடி கதைப் புத்தகம் வாங்க இவரிடம் வந்து நின்றாள். இவர் ஓரிருதடவை எடுத்துக் கொடுத்தார்தான். எப்பிடித்தான் அத்தனை விரைவாக வாசிச்சு முடிக்கிறாளோ என்று ஆச்சரியப்பட்டாரே ஒழிய படிக்கிற வயதில ஏன் இத்தனை புத்தகம் வாசிக்கிறாய் என்று ஒரு முறை கூட அவளைக் கண்டிக்காவோ கேட்கவோ செய்யவில்லை. அடிக்கடி

வந்து வந்து அவள் புத்தகம் கேட்டதால் அவருக்கும் புத்தகங்களை எடுத்துக் குடுக்கப் பஞ்சிப்பட்டு நீயே போய் எடு என்று கூறிவிட்டார்.

முன்னரெல்லாம் மற்றவர்கள் நிற்கும்போது வந்து நூல்களை வாங்கும் சுகிர்தா இப்போதெல்லாம் மற்றவர்கள் இல்லாத நேரமாகப் பார்த்து வருவதையும் நீண்ட நேரமாக அந்த அறையுள் நின்று நூல்களை எண்ணுவதையும் இவர் சில காலம் செல்லத்தான் உணர்ந்து கொண்டார்.

இவரும் பாலை விரும்பிக் குடிக்கும் பூனைதானே. தானாக வந்து விழுவதை ஏன் வேண்டாம் என்பான். கோவிலில் மாலை நேரப் பூசை நடக்கும் போது மனைவியும் தாயும் சென்றுவிட இவர்கள் வீட்டிலும் ஆரா தனை நடந்தது. சுகிர்தா இன்னும் பூப்பெய்தாததும் இவருக்குச் சாதகமாய்ப் போனது. பதினெட்டு வயதாகியும் அவள் அப்படியே இருக்க இன்னும் உன்ர மேள் பெரிசாகேல்லையே என்று கேட்போரின் வாய்க்காக அவளை பள்ளிக்கும் செல்லாமல் தடுத்ததும் நல்லதாயிற்று.

இவரோ எந்தவிதக் குற்ற உணர்வும் இன்றி தொடர்ந்தும் தான் விருப்பப்படி இருக்கத் தலைப்பட்டார். பத்தொன்பது வயதில அவள் பெரி தானபின் கண்டபடி வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் கட்டுப்பாடுகளும் அவளைக் கண்காணித்தபடி தாயோ அம்மம்மாவாரோ இருக்க அவரைப் பார்க்கவேணும் என்ற தவிப்பு சுகிர்தாவுக்கு உண்டானது. பெரிதான பிறகு எதுக்குத் தேவையில்லாத பிரச்சனை என்று தேவரும் அவளைப் பற்றிய சிந்தனை இல்லாமல் இருந்தார்.

ஆனால் ஒருநாள் இவர் வீரகேசரியை வாசித்துக்கொண்டு இருந்த போது திடுதிப்பென்று சுகிர்தா இவர் முன்னால் வந்து நின்றாள். நீங்கள் என்னை ஒரேயடியா கைகழுவி விட்டுட்டியளோ. என்னை ஏமாத்திப் போட்டியள் என்று அவள் கூற தேவர் வெலவெலுத்துப்போய் கதிரையை விட்டு எழுந்தார்.

"உனக்கு என்ன விசரே. வீட்டில ஆக்கள் நிக்கினம். நான் பிறகு கதைக்கிறன். முதல்ல வெளிய போ" என்று உறுக்க,

"இண்டைக்கு நீங்கள் ஒரு முடிவு சொல்லு மட்டும் நான் போக மாட்டான்" என்று வீம்புடன் நிக்க, மனைவியும் தாயும் வீட்டில் தான் என்னும் எண்ணத்தில் தவிப்புக் கூடி முதல்முறையாக கைகால்களில் நடுக்கமும் பதட்டமும் ஏற்பட்டது.

"எளிய நாயே. அவன் கலியாணம் கட்டினவன் எண்டு தெரிஞ்சும் இப்பிடி வந்து நிண்டு கதைக்க உனக்கு வெக்கம் இல்லையே" என்றபடி தாய்

சுகிர்தாவை தலைமயிரில பிடிச்சு இழுத்துக்கொண்டு போய் அவளின் வீட்டுக்குள் தள்ளிவிட்டு வந்ததும், மனைவிக்கு ஏதும் கேட்டிருக்குமோ என்ற பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்க்க, மனைவியின் தலை தெரியாததில் இவர் நிம்மதிப் பெருமூச்சு விட்டதும் இவருள் இப்பவும் ஒரு உலுக்கத்தை ஏற்படுத்த நடுக்கத்துடன் பெருமூச்சொன்று வெளிவந்தது. சந்திராவுக்குத் தெரிந்தும் அவள் ஒருநாள்க்கூட என்னை எதுவும் கேட்கவே இல்லை என்னும் எண்ணம் எழுந்ததும் அவரை அறியாமல் கண்கள் நிறைகின்றன.

***

இந்திரனின் நண்பன் மாறனுக்கு நேற்றுத்தான் அம்மன் கோவிலில் திருமணம் நடைபெற்று முடிந்திருந்தது. வந்தவர்களுக்கு உணவு பரிமாறுவதில் இருந்து எல்லோரையும் தண்ணி வெந்நி எல்லாம் குடுத்து உபசரிப்பது உங்கள் வேலை என்று மாறன் கட்டன்றைற்றாகச் சொன்னதால எல்லா நண்பர்களும் ஒரு குறையும் விடாமல் வந்தவர்களை உபசரித்து அனுப்பி ஒருவாறு எல்லாம் முடிந்தாயிற்று. பெண் வீட்டில் நாலாம் சடங்கு. கட்டாயம் எல்லாரும் வந்திடுங்கோடா என மாறன் சொன்னதைத் தட்டாமல் இந்திரனும் மற்ற நண்பர்களுடன் செல்லத்தான் எண்ணியிருக்கின்றான்.

"உனக்கும் முப்பத்தைந்தாகுது. எத்தனை நாளைக்குத்தான் சாக்குப்போக்குச் சொல்லப்போறாய். நீ கட்டினாத்தானே உன்ர தம்பி மாருக்கும் கட்டி வைக்கலாம்" என்ற வழமையான தாயின் புலம்பலுக்கு,

"அம்மா என்னைப் பார்க்கவேண்டாம். எனக்கு எப்ப முடிக்கவேணும் என்று தோன்றுதோ அப்ப உங்களிட்டைச் சொல்லுறன். முதல்ல தம்பிக்கு பாருங்கோ"

"அப்ப அதுவரை ஊர் மேஞ்சு கொண்டு இருக்கப்போறியோ"

தாய் கூறியதைக் காதில் வாங்காதவன் போல சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான் இந்திரன்.

அன்று மாலை நாலாம் சடங்குக்கு நல்லா வெளிக்கிட்டுக்கொண்டு போய் நண்பனுக்குப் பக்கத்தில் இவர்களுக்கும் கதிரை கொண்டுவந்து போடுகிறார்கள். பெண்கள் எல்லாம் அப்போது கதிரைகளில் இருப்ப தில்லை. அழகிய பாய்கள் நிலத்தில் விரிக்கப்பட்டிருக்கும். வருபவர்கள் குழுவாகவோ அல்லது குடும்பத்துடனோ அமர்ந்திருக்க எவசில்வர் தட்டிலோ அல்லது பித்தளைத் தாம்பாளத்திலோ பலகாரங்கள் வைக்கப் பட்டிருக்கும். சில்வர் தேநீர் குவளைகளில் சுடச் சுடப் பரிமாறப்படும் டரின்பால் விட்ட தேனீரும் கூட சுவையாக இருக்கும்.

ஆண்களுக்கு பந்தலினுள்ளே கதிரைகள் போடப்பட்டிருக்கும். அவர்கள் போகும்போது மட்டும் மாப்பிளையையும் பெண்ணையும் எட்டிப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தபடி போட்டு வாறன் என்று கூறிவிட்டுச் செல்வார் கள். இவர்கள் நண்பர்கள் என்பதனால் பக்கத்தில் கதிரை போட்ட உபசரிப்பு.

இந்திரன் வெள்ளை பெல்பொட்டமும் செம்மஞ்சள் நிற சேர்ட்டும் போட்டு வந்துள்ளான். அடர் மீசையும் மேலே சிறிது திறந்துவிட்ட அங்கியூ டாகத் தெரியும் சங்கிலியும் மாப்பிள்ளைபோலவே தெரிக்கிறான். மற்ற நண்பர்கள் கூட நன்றாகவே இருக்கின்றனர். இரு குமர்ப்பெண்கள் ஓடியாடி எல்லோருக்கும் சிற்றுண்டியும் தேனீரும் பரிமாறுகின்றனர். தேவதைபோல் ஒருத்தி இவர்களுக்கு சிறுசிறு தட்டுக்களில் பலகாரவகைகளுடன் இவர்களை நோக்கி வந்து ஒவ்வொருவருக்கும் ஒரு தட்டை எடுத்துக் கொடுக்கிறாள். ஒவ்வொருவரிடமும் கொடுக்கும்போதுகூட அவள் யாரையுமே நிமிர்ந்து பார்க்கவில்லை. அந்த நிறமும் அமைதியான அழகிய முகமும் அவளின் ஆடையும் அவளின் பண்பைச் சொல்லி நிற்கின்றது.

“எடேய் மச்சான். சினிமாவில நடிக்க வைக்கலாம் போல இவ்வளவு அழகாய் இருக்கிறாள். ஆரடா இது” என்று நண்பனிடம் முணுமுணுக்கிறான் இந்திரன். “எனக்குத் தெரியாதடா இவவைத்தான் கேட்கவேணும். இப்ப கேட்டு என்ர குடும்பத்தைக் குழப்ப ஏலாது. கொஞ்சம் பொறுமையாய் இரு” என்கிறான்.

வீட்டுக்கு வந்த பின்னரும் அந்தப் பெண்ணின் நினைப்பாகவே இருக்கிறது.

எவ்வளவு அமைதியும் அழகும். எத்தனை பெண்கள் என் மேல் வந்து விழுந்திருக்கிறார்கள். இவளை விடக்கூடாது. எனக்கானவள் இவள்தான் என்று எண்ணிக் கனவுகளுடன் மனம் கனக்க, யாரும் இவளைக் கொத்திக் கொண்டு போக முதல் நான் முந்தவேண்டும் என்பதுவாய் மூன்று நாட்கள் சென்றபின் வெட்கத்தை மூட்டைகட்டி வைத்துவிட்டு நண்பன் வீட்டுக்குச் செல்கிறான்.

“நான் இவாவிட்டைக் கேட்டனான். இவவின் மாமியின் மகளாம். ஆனா என் மனிசியின்ர குடும்பம் மாதிரி வசதி ஒண்டும் இல்லை. ஒரு சீதானமும் எதிர்பார்க்கேலாது மச்சான். மூண்டு பெட்டைகளில இது கடைசிப் பெட்டையாம். மற்ற இண்டுபேரும் கலியாணம் கட்டீட்டினம். ஆனா இப்பவே சொல்லிப்போட்டன். என்னை ஒண்டுக்கும் சாட்டப்படாது. நல்ல பிள்ளையாம். ராமநாதன் கொலிச்சில படிச்சிட்டு வேலை தேடிக்கொண்டி

ருக்குதாம். யூனிவேசிற்றி கிடைக்கேல்லையாம்” கிளார்க் வேலை ஒண்டுக்கு அப்பிளிக்கேசன் போட்டுட்டுப் பார்த்துக்கொண்டு இருக்கிறாவாம். வதனா எண்டு கூப்பிடுறவையாம்”

சிவம் சொல்லி முடிக்கமுதலே தகப்பன்ர பெயரைச் சொல்லு. எங்க இருக்கிறவை? என்று அவதிப்பட்டான் இந்திரன்.

உடுவில் லேடீஸ் கொலிச்சுக்குப் பக்கத்தில குலத்தார் வீடு எங்கே எண்டால் காட்டுவினமாம்.

“சரியடா வாறன்” என்றுவிட்டு சைக்கிளை மிதித்தவன் தாயின் முன் வந்து நின்றான்.

“அம்மா எனக்கு அந்தப் பிள்ளையை நல்லாப் பிடிச்சிருக்கு. நான் இப்ப கலியாணம் செய்ய ரெடி. மிச்ச அலுவலை நீங்கள் தான் கெதியாப் பார்க்கவேணும்” என்று முடித்தான்.

ஒரு மாதத்திலேயே திருமணப் பேச்சு முடிந்து திருமணமும் முடிந்து வதானா குனிந்ததலை நிமிராமல் இவர்கள் வீட்டுக்குள் அடி எடுத்து வைத் தாள். அதிர்ந்து பேசத் தெரியாத வதனாவை எல்லோருக்கும் பிடித்துப் போனது. அண்ணி அண்ணி என்று இந்திரனின் சகோதரர்கள் அன்பையும் மரியாதையையும் காட்டினார்கள்.

மாமியார் தான் பெரிதாக வதானாவை மதிக்கவில்லை. எல்லா வேலைகளையும் இவள் தலையில் சுமத்திவிட்டு அங்கும் இங்கும் வலம் வந்துகொண்டிருந்தாள். அவவுக்கும் வயது போட்டுது தானே என்று தன் மனதைத் தேற்றிக்கொண்டு இது என் வீட்டு வேலைதானே என எண்ணியபடி எந்தவித முகச்சுழிப்புமின்றி வேலை செய்தாள் வதனா.

திருமணமாகி ஒரு மாதத்திலே இவளுக்கு ஒரு கடிதம் வந்திருப்ப தாக இவளின் தாயார் கொண்டுவந்து கொடுத்தபோது ஏனோ தானோவென அதை உடைத்தவளுக்கு முகம் முழுதும் விளக்கெரிந்தது.

“அம்மா எனக்கு வேலைக்கு அழைப்பு வந்திருக்கு” என்று மகிழ்வுடன் கூறும் மகளை அம்மா பார்த்த பார்வையில் எவ்வித பூரிப்பும் இருக்கவில்லை.

“ஏனம்மா எனக்கு வேலை கிடைச்சது உங்களுக்கு சந்தோசம் இல்லையோ”

கவலையுடன் கேட்ட மகளுக்கு என்னத்தைச் சொல்வாள் அவள்.

“கலியாணம் கட்டின பிறகு அவர் என்ன சொல்லுவாரோ எனக்குத் தெரியாது. எதுக்கும் கேட்டுப் பாரம்மா. சம்மதிச்சால் போ. இல்லையெண்டாலும் என்ன. முந்தி எண்டால் வேலைதான் முக்கியம் எண்டு சொல்லியிருப்பன். இப்ப நல்ல வாழ்க்கை கிடைச்சிருக்கு. அதோடை திருப்திப்பட்டுக் கொள்ளம்மா” என்று புத்திசொல்லிவிட்டுப் போகும் தாயை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

இந்திரன் வந்தவுடன் மகிழ்ச்சியுடன் தனக்கு வந்த கடிதத்தைக் கொடுத்தாள். வாங்கிப் பார்த்தவன் மனதிலும் மகிழ்ச்சி ஏற்பட “வாழ்த்துக்கள் வதனா. ஆனால் மட்டக்களப்புக்குப் போய் நீர் வேலை செய்ய நான் இங்க தனிய இருக்கேலுமே. இங்கினேக்கை எண்டால் கட்டாயம் போம் என்று நானே அனுப்பியிருப்பன்” என்று கூறிவிட்டு அவளைப் பார்க்கத் துணிவின்றி அப்பால் நகர வதானாவுக்கு அழுகை வந்தது.

“பெலத்து அழக்கூட என்னால் முடியவில்லையே. இந்த வேலை ஒரு மாதத்தின் முன்னம் கிடைத்திருந்தால் கலியாணமே வேண்டாம் என்று ஒற்றைக்காலில் நின்றாவது கலியாணம் காட்டாது வேலைக்குப் போயிருப்பன். என் விதி இதுதான் போல” என மனதைத் தேற்றிக்கொண்டாள்.

அடுத்த வாரம் தமக்கை தாய் வீட்டுக்கு வருகிறாள் எனக் கேள்விப்பட்டு கணவனின் அனுமதியுடன் அங்கு சென்றவள் தமக்கையைக் கட்டிப் பிடித்து “சின்னக்கா வேலை கிடைத்தும் என்னால போக முடியேலையே” என விக்கி விக்கி அழுபவளை ஆறுதல் படுத்த அவளின் முதுகை ஆதரவாக வருடிக் கொடுத்தபடி இருந்தாள் வதனாவின் இளைய சகோதரி.

அவள் கச்சேரியில் வேலை பார்க்கிறாள். கணவனும் பேராசிரியராக இருப்பதனால் இருவரும் வசதியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகளும் இருக்கின்றனர். மூத்த சகோதரிக்குத் திருமணமாகி பத்து ஆண்டுகளாகியும் குழந்தைகள் இல்லை. ஆனாலும் கடைசித் தங்கைமேல் பாசம் இருக்கிறதா இல்லையா என்பதுபோல் நடந்து கொள்வாள். பெரிதாக யாரையுமே தன்னுடன் ஒட்ட விட்டது கிடையாது. வசதியாகத்தான் வாழ்கிறாள். ஆனாலும் தங்கையின் திருமணத்துக்கு ஒரு அட்டியல் செய்து போடுமாறு தாய் கேட்டும், தந்தை வேலை செய்யும்போது கிளிநொச்சியில் வாங்கிப்போட்ட மூன்று ஏக்கர் காணியை தனக்கு எழுதுங்கோ என்று விடாப் பிடியாய் நிண்டு தன் பேருக்கு மாற்றிய பிறகுதான் தங்கையின் திருமணத்துக்கு நகையைச் செய்து கொடுத்தாள்.

வதானாவின் சின்னக்கா “அப்புவுக்கும் ஆச்சிக்கும் சரியான விசர்.

அரசாங்க உத்தியோகம் பாக்கிற மாப்பிளை எண்டு எல்லாக் காணியளை யும் அக்காவுக்கே சீதானமாய்க் குடுத்திட்டு எங்கள் இரண்டு பேரையும் அனாதைகள் போல விட்டிட்டினம் என்று அடிக்கடி வதனாவிடம் மட்டும் அங்கலாய்ப்பாள். அந்தக் கோபத்துடனேயே படித்து கச்சேரியில் வேலை கிடைத்ததும் தகப்பன் ஈடுவைத்த மூன்று பரப்புக் காணியை மீண்டு, அதில் வீடு ஒன்றும் கட்டி நன்றாகத்தான் வாழ்கிறாள்.

“எனக்கு இங்கே எங்காவது வேலை கிடைச்சிருந்தால் நான் கட்டாயம் விட்டிருப்பன். நீ இல்லாமல் நான் எப்பிடித் தனிய இருக்கிறது எண்டு சொன்னவர்” என்று தன் கணவனையும் விட்டுக்கொடுக்காது கூறியவளை அன்பொழுகப் பார்த்தாள் தமக்கை.

***

வதனாவுக்கு எல்லாமே பழகிவிட்டது. இந்திரன் இப்பொழு தெல்லாம் எழுதுவதுக்கூட இல்லை. சும்மா இருக்காமல் ஏதும் எழுதுங்கோ எண்டால் எனக்கு நீ புத்தி சொல்லாதை, எனக்கு என்ர அலுவல் தெரியும் என்பான்.

முன்புபோல இல்லை இப்ப எல்லாம். செல்லருக்கும் தோட்டங் களைப் பராமரிப்பது கடினமாக இருந்தது. இரண்டாவது மகன் முன்பு இவருடன் தோட்ட வேலைகளைப் பார்த்துக்கொண்டான். இப்ப அவனும் ஆசிரியர் வேலை கிடைச்சு மட்டக்களப்புக்குப் போய்விட்டான். அவனுக்கும் நிறையச் சம்மந்தம் வருகிறது. வேளைக்கு அவனுக்கும் திருமணம் செய்து வைக்கவேணும் என்று எண்ணியபடி இந்திரனை அழைத்தார் செல்லர்.

“தம்பி எவ்வளவு நாளைக்குத்தான் இப்பிடிப் பொறுபில்லாமல் இருக்கப்போறாய். ஏதேனும் வேலைவெட்டி தேடவேணும். இல்லாட்டில் தோட்டங்களையாவது பாக்கவேணும். உவன் கடைசி குகனும் இவ்வளவு நாள் தோட்டவேலையளுக்கு உதவி செய்தவன். இப்ப அவன் யூனிவேசிற்றிக் குப் போப்போறான். இனி நீதான் எல்லாத்தையும் பாக்கவேணும்” என்று தகப்பன் கூறிய பிறகு மறுத்து எதுவும் சொல்ல முடியாது தலையாட்டிவிட்டுச் சென்றான் இந்திரன்.

மற்றவரிடம் சென்று கையேந்தி வாழ அவனுக்குத் துளிகூட விருப்பம் இல்லை. வதானாவுக்கு சீதனம் என்று இவன் கேட்கவில்லையே ஒழிய, “உங்களால முடிஞ்சதைச் செய்து போடுங்கோ” என்று இவனின் தாயார் சொன்னதாலை மட்டுமில்லை, சும்மா தங்கச்சியை அனுப்பக் கூடாது எண்டு வதனாவின் சின்னக்கா சொல்லி இரண்டு சோடி காப்புகளும் பதக்கமும்

தானே செய்து போட்டு தமக்கை கொடுத்த அட்டியலோடு தங்கையைச் சிறப்பாய் அனுப்பி வைத்தார்கள்.

வதானா திருமணமாகி மூன்று மாதங்களில் கர்ப்பமாகி அயலட்டை யாரின் வெறும் வாய் மெல்ல சந்தர்ப்பம் கொடுக்காது எல்லாரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினாள். ஆனாலும் அவளை ஆசைக்கு இரு வாரம் கூட அவள் வீட்டில் இருக்க விடாது இங்கே வேலைகள் குவிந்திருந்தன. எட்டாம் மாதம் நடக்கும்போது சின்னக்காவும் தாயாரும் தம்முடன் அழைத்துப் போகிறோம் என்றதற்கு "ஏன் நாங்கள் ஒழுங்காப் பார்க்க மாட்டமோ" என்று மாமியார் கூறியதில் வதனாவின் ஆசையும் மதுக்குள்ளேயே அடங்கிப் போக தமக்கையும் தாயும் வேறு வழியின்றித் திரும்பிச் செல்ல வேண்டிய தாயிற்று.

மாமியார் உதவிகள் செய்தார்தான். ஆனாலும் இந்திரன் தன் வேலையில் ஒன்றைக் கூட தான் செய்ய முன்வரவில்லை.

ஒன்பதாம் மாதத்தில் ஒருநாள் நோவெடுக்க சொக்கனின் காரைப் பிடிச்சு யாழ்ப்பாணம் பெரியாசுபத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். மாமியாரும் கூடவே வந்திருந்தது வதனாவுக்குத் தெம்பாக இருந்தது. இரண்டு மணிநேர வாதைக்குப் பின்னர் ஆண் குழந்தை எவ்வித அசுமாத்தமும் இன்றி வெளியே வர வதனா அரை மயக்கத்தில் இருந்தாள்.

"இவான்ர புருஷன் வெளியில நிண்டாக் கூட்டிக்கொண்டு வாங்கோ" என்று அந்தப் பெண் மருத்துவர் கூற, மனப்பதைப்புடன் தாய் சென்று மகனை அழைத்து வந்தார். சொறி குழந்தை பிறக்கேக்குள்ளையே செத்துத்தான் பிறந்தது. ஒருக்கா வடிவாப் பிள்ளையைப் பாருங்கோ. தாய்க்கு மயக்கம் தெளியமுதல் பிள்ளையை எடுத்துக் கொண்டுபோய்விட வேண்டும் என்றுவிட்டு மருத்துவர் அகல..

"அளவெட்டிக் காறியின்ர பிள்ளையையும் கலைப்பிச்சு அவளைக் கைகழுவி விட்டதுக்குத் தான்ரா உனக்கு உந்தத் தண்டனை கிடைச்சிருக்கு" தாய் கூறப் பதட்டத்துடன் "வாயை மூடெணை" எனத் தாயை உறுக்கியவன் வதனா கேட்டிருப்பாளோ என்று துணுக்குற்றான்.

தாய் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல, வதனா என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவளுக்கு எல்லாமே நன்றாகக் கேட்டதுதான். ஆயினும் கண்களை தொடர்ந்தும் மூடியபடி மயக்கத்தில் இருப்பதுபோல் இருந்தாள். மனதில் எழுந்த வெறுமையும் ஏக்கமும் கவலையும் கண்ணீராக மூடிய கண்களினூடாக வழிந்தபடி இருக்க எதுவும் செய்வதற்று தொய்ந்து போய்க் கிடந்தாள் வதனா.

அவன் சிறிது நேரத்தில் அப்பால் செல்ல வெடிக்கும் மனதுடன் அசையாது கிடந்த குழந்தையை எடுத்து நெஞ்சோடு அணைக்க வேண்டும் போல் இருக்க மெதுவாகக் கைகளை ஊன்றியபடி எழும்ப எத்தனிக்க, அதற்குள் பெண் தாதியும் அவனின் தாயாரும் உள்ளே வந்து அவளை எழும்பவேண்டாம் என எச்சரித்துவிட்டு பிள்ளையை இவளுக்குக் காட்டி விட்டு உடனே வெளியே கொண்டுசெல்ல எப்படித் தன் கவலையை வெளிப் படுத்துவது என்று கூடத் தெரியாமல் படுத்துக்கிடந்தாள் வதனா.

குழந்தை அதுவும் ஆண்குழந்தை இறந்துவிட்டது அனைவருக்கும் மிகக் கவலையாக இருக்க இந்திரனுக்கு நரக வேதனையாக இருந்தது. அவளை எங்களோடை அனுப்பியிருந்தால் இப்பிடி நடந்திருக்காது என்று ஏசிவிட்டு அவளை வைத்தியசாலையிலிருந்தே தன்னுடன் சின்னக்கா கூட்டிச் சென்றாள். மனதிலை கவலையளை வச்சிருக்காமல் இங்கை எண்டாலும் வடிவா அழுதிடு என்று அவளுக்கு ஆறுதல் கூறி அவளை நன்றாகத் தேற்றி ஒரு மாதம் சென்ற பிறகே இந்திரனின் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.

வதனாவைக் கண்டதும்தான் இந்திரனுக்கு உயிர் வந்தது போல இருந்தது. வதனாவுக்கு எதுவுமே சொல்லாமலேயே அதது அவனுக்குக் கிடைத்துக்கொண்டிருந்தது. “எங்கிருந்தோ வந்தாள். எனக்காகவே வந்தாள்” என்றுதான் அவள் இவனுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்யும்போதெல்லாம் இந்திரன் எண்ணிக்கொள்வதுண்டு.

அவள் இல்லாமல் தாய் வைத்துக் கொடுத்த சுரணைகெட்ட தேனீரும் உணவுகளும், அயன் செய்யாத ஆடைகளும் எல்லாமே அவளின் அருமையை உணரவைத்தன.

உடையவன் உழைத்தால் தான் தோட்டமும் தொழிலும். இந்திரனுக்கு மண்வெட்டி பிடித்து வாய்க்காலில் நீர் கட்டக்கூடத் தெரியாமல் இருந்தது. எல்லாத்துக்கும் கூலிக்கு ஆள் வைத்து விவசாயம் செய்ததில் பெரு நட்டமே ஏற்பட்டது. வதனாவின் நகைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்ச மாய்க் காணாமல் போயின. அடுத்த ஆண்டிலேயே அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து மூக்கும் முழியுமாக எல்லாரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இரண்டு ஆண்டுகளின் பின்னர் இன்னொரு பெண் குழந்தை. அவர்கள் எல்லாம் ஆண்பிள்ளைகள் என்றதாலோ அல்லது முதல் முதல் வதனாவுக்குப் பிறந்தது ஆண் குழந்தை என்பதாலோ என்னவோ இந்திரனோ தாயோ கூட ஆண் குழந்தை என்ற பெயரை மறந்து போயும் உச்சரிப்பதுமில்லை. ஆண் பிள்ளைக்கு ஆசைப்பட்டதும் இல்லை.

பிள்ளைகள் வளர வளர பணம் தேவைப்பட “உவ்வளவு காணிகளை வச்சு என்ன செய்யப்போறம்” என்று சில நிலங்களையும் அப்பப்ப விற்றுக் குடும்பத்தை நடத்தினாலும் எந்தவிதக் குற்ற உணர்வும் இந்திரனுக்கு ஏற்பட்டதே இல்லை.

அதன் பிறகும் இந்திரன் சில நாவல்களை எழுதினான்தான். ஒரு நாவலுக்கு சாகித்திய விருதும் கிடைத்ததுதான். ஆனால் அதனால் கிடைத்த சொற்ப வருமானம் அவரின் குடும்பத்துக்குப் போதுமானதாக இருக்க வில்லை. மண்வெட்டி எடுத்துத் தோட்டம் கொத்தவோ வேறு வேலை செய்யவோ இந்திரனால் முடியாதது அவன் குற்றமா என்ன? சிறுவயதில் இருந்தே எனக்குப் பொறுப்பைப் பழக்கியிருக்க வேணும். பிழை விட்டது அம்மாவும் அப்பரும் தான். இன்னும் காணியள் கிடக்குத்தானே. பார்த்துக் கொள்ளலாம் என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

அப்பப்ப இவனின் கதைகளை வாசித்த பல்கலைக் கழக மாணவர் கள் இவனை வந்து பார்த்துச் செல்கிறார்கள். அவர்களுடன் பல விடயங் களையும் விவாதிக்குமளவு பொது விடயங்களையெல்லாம் கரைத்துக் குடித்து வைத்திருந்தான் இந்திரன். வதானாவுக்கு இவர் வேலை எதுவும் செய்யாது திண்ணையில் இருந்து விவாதிப்பது எரிச்சல் கொடுத்தாலும் பெருமையாகவும் இருந்ததுதான். எனக்கு அந்தளவு அறிவு இல்லை. விஷயமில்லாமலோ அவரைத் தேடி வரீனம் என தமக்கையாருடன் கதைக்கும் போது கூறுவதை தமக்கையோ சிரித்தபடி கேட்டுக் கொண்டிருப் பாளேயன்றி தங்கையின் மனதைப் புண்படுத்தக் கூடாது என எதிர்மறை யாகக் கதைத்ததில்லை..

வதனா வெறுங்கையுடன் வந்ததைப் பொறுக்க முடியாமல் தன் காப்புகளில் ஒரு சோடியை வேண்டாம் என்று சொன்ன தங்கைக்குப் போட்டே அனுப்பினாள். எக்காரணம் கொண்டும் இதை உன்ர கையை விட்டுக் கழட்டவே கூடாது என்றும் சத்தியம் வாங்கிக்கொண்டும் தான் இவளை அனுப்பினாள்.

ஆனால் அக்காப்பு ஆறு மாதங்களின் பின்னர் அடக்குக் கடைக்குப் போனதையும் அதேபோன்ற கிலிட்டுக் காப்பு ஒன்றைக் கணவன் அவளுக்கு மாற்றிச் செய்து கொடுத்ததையும் அவளும் தெரிந்ததுபோல் இந்திரனுக்குக் காட்டிக்கொள்ளவில்லை. மறந்துபோய்த்தன்னும் தமக்கைக்கு மட்டுமல்ல யாருக்குமே கூறவில்லை.

***

ஐயர் வந்து கிரியைகள் எல்லாம் முடிந்து பிள்ளைகள் வாய்க்கரிசி போட்டு பேரபிள்ளைகள் எல்லாம் சுற்றி நின்று நெய்ப்பந்தம் பிடித்து முடிய ஊரில் உள்ள பெரியவர்கள் சிலரும் இலக்கிய கர்த்தாக்கள் சிலரும் அவரைப்பற்றி ஆகா ஓகோவென்றெலாம் புகழ, கேட்டுக்கொண்டிருந்த சில உறவினர்களுக்குப் பெரிய இம்சையாக இருந்தது. சிலருக்கோ அட இப்பிடி எல்லாம் கூட நடந்திருக்கா. எங்களுக்குத் தெரியாமல் போட்டுதே இவ்வளவு நாளும் என எண்ணியபடி வாய்பிளந்து கேட்டுக்கொண்டும் இருந்தனர்.

“இவர் இலங்கையின் மிகச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். இவர் எம்மூரில் பிறந்தது நாம் செய்த பாக்கியம். இத்தனை விரைவில் இவர் மரணமடைந்தது எமக்கெல்லாம் பெரிய இழப்பு” என்று கூறிவிட்டு அமர்ந்தார் ஒருவர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த தேவருக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

“இவன் எண்பத்தைந்து வயதுவரை இருந்து எழுதினதைத் தவிர என்னத்தைச் சாதிச்சுக் கிழிச்சான் என்று இன்னும் இருந்திருக்க வேண்டும் என்று உப்பிடிக் கதைக்கிறாங்கள்”

“பிள்ளையளுக்கும் பெண்டிலுக்கும் சோறு போட்டதும், உடம்பை வளர்த்ததும், பிள்ளையளைக் கலியாணம் கட்டிக் குடுத்ததும் தகப்பன் சேர்த்து வச்ச சொத்துக்களை விற்றுத்தான்” இவர் மனதில் எண்ணி முடிய முதல் அடுத்தவர் ஆரம்பித்துவிட்டார்.

“இவரைப்போல ஒருவரை நான் இதுவரை காணவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கிடைத்த அரசாங்க வேலையைக் கூட வேண்டாம் என்று கூறிவிட்டு இந்த மண்ணுக்காக உழைக்கவேண்டும் என்று தோட்டம் செய்து உழைத்துச் சாப்பிட்ட உழைப்பாளி இவர்”

“எடேய்.. செத்தவீட்டில ஒருத்தரும் வந்தும் சொல்ல மாட்டினம் எண்டு இப்பிடி எல்லாமா புழுகுவியள். தோட்டத்தைப் பாக்கிறன் எண்டு தோட்டத்துக்குப் பக்கத்தில இருந்த சுகுணாவைப் பார்க்கப் போறது உவங்களுக்குத் தெரியாது போல” மனதுள் எண்ணியவுடனேயே இவருக்கு வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போல இருந்ததை அடக்கிக்கொண்டார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வேலை அரச வேலையோ இல்லையோ எண்டு இவருக்கு இப்ப சந்தேகம் வந்தது. “இப்ப கோதாரி ஆரிட்டைக் கேட்கமுடியும்” என்று தன்மனதை அடக்கிக் கொண்டார்.

எண்டாலும் உந்தக் கொறோனாக் கட்டுப்பாடுகள் தளர்த்தின பிறகு செத்ததால ஊரிப்பட்ட சனம். ஒரு இருநூறு முன்னூறு பேராவது இருக்கும். இரண்டு கிழமைக்கு முதல் செத்த பாக்கியத்துக்கு இருபது பேர் கூடப் போகேல்லையாம். பாடை கட்டவும் ஆட்கள் வரேல்லை. ஐயரும் பயத்தில போகாமல் ஒரு இருபது பேரோடை வானிலதான் கொண்டு போய் எரிச்ச தெண்டு இவரை வருத்தம் பார்க்க வந்த கந்தசாமி சொன்னவன்.

பெரிய வடிவான பாடைகட்டி தென்னோலையெல்லாம் பின்னி, பூமாலை எல்லாம் கட்டி பார்க்கவே அழகாய்த்தான் இருக்கு. எனக்கே ஏறிப் போய்ப் படுக்கவேணும் போல இருக்கு என்று எண்ணித் தன்பாட்டில் சிரித்துக்கொண்டார் தேவர்.

திடீரென பெருங் குரலெடுத்து எல்லோரும் அழுகின்றார்கள். திடுக்கிட்ட தேவர் என்ன நடக்குது என்று நினைவுகளைத் தள்ளிவிட்டுப் பார்க் கிறார். சவப்பெட்டியை மூடுகிறார்கள். மூடவிடாது பிள்ளைகளும் மனைவி யும் பிடித்துக்கொண்டு கத்த, அவர்களை பிடித்து இழுத்து வலுக்கட்டாயமாக மூடியபின் உரித்துடையவர்கள் ஆறுபேர் நான் முந்தி நீ முந்தி என தள்ளுப்பட்டு அவரின் பிரேதப் பெட்டியைக் கொண்டுபோய் பாடையில் வைத்துவிட்டு தூக்கிக்கொண்டு போகிறார்கள்.

டகு டகு டகு டகு டகு டகு டகு டகு டண் டண் டண் டண்

டாடாண்டு டண் டண் டாடாண்டு டண் டண்

மேளச் சத்தம் காதைப் பிளக்கும்படி இருக்கிறது. தேவரின் எரிச்சல் அதிகரிக்கப் பாடை நகர்ந்தபடி இருக்கின்றது.

“என்றாலும் நான் குடுத்துவைத்துத்தான் பிறந்திருக்கிறேன். இத்தனை நாட்கள் இராசா மாதிரி இருந்தேன். எந்தக் குறையும் இல்லாமல் மனைவி பிள்ளைகள் பார்த்துக்கொண்டார்கள். இறந்தபின்னும் சிறப்பாகப் பாடைகட்டி இத்தனைபேர் பின்தொடரச் செல்கிறேனே. பாவம் சந்திரவதனா நானில்லாமல் என்ன செய்யப்போறாளோ. என்னோடை அவளையும் கூட்டிக் கொண்டு போனால் எவ்வளவு நல்லாய் இருக்கும்” என்று எண்ணியபோதே உடலெங்கும் விசுக்கென இழுபட, தன் செத்தவீட்டை இத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருந்த இந்திரன், தேவர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட தெய்வேந்திரத் தேவரின் உயிர், மிகுதி இறுதி ஊர்வல நிகழ்வைப் பார்க்க முடியாதவாறு எங்கோ வேகமாக இழுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

# தானம் நீ

காலைக் கதிரவன் கதிர்பரப்பிக் கடைவிரித்த பின்னும்கூட நயனி கட்டிலில் இருந்து எழுந்திருக்க மனமின்றி படுத்தே கிடந்தாள். எழுந்து என்னதான் செய்வது? இந்தப் பரபரப்பான பாரீஸ் நகரின் எல்லை யான பொண்டி என்னும் இடத்தில் தான் அவர்கள் வசிக்கும் அடுக்குமாடி வீடு அமைந்திருந்தது. ஐம்பது குடும்பங்களாவது வசிக்கும் அக்கட்டடம் பிரதான வீதியி லிருந்து சற்று உள்ளே அமைந்திருந்ததால் எவ்வித வாகன ஓசைகளும் இன்றி அமைதியான பிரதேசமாகக் காணப்பட்டதனால் நாமாக அலாரம் வைத்து எழுந் தாலோ அல்லது நித்திரை முறிந்து எழுந்தாலோ அன்றி யாரும் இடைஞ்சல் தர மாட்டார்கள். முகுந்தன் காலை ஆறுமணிக்கு எழுந்து வேலைக்குச் சென்றானென்றால் மாலை ஐந்து மணிக்குத்தான் திரும்ப வருவான். அதுவரை அவதியாகச் சமைக்க வேண்டிய தேவையோ அல்லது கட்டாயம் உண்ணவேண்டிய தேவையோ அவளுக்கு இல்லை.

நயனி முகுந்தனைத் திருமணம் செய்து வந்து ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. பெற்றோர் பேசிச் செய்த திருமணம் தான். ஆளும் பார்க்கக் கறுப்பென்றா லும் களையாகவே இருந்தான். இராமநாதன் கல்லூரியில் நடனம் பயின்றுகொண்டிருந்தாலும் அவள் இன்னும் ஒரு ஆண்டுகள் பயின்றிருந்தால் பட்டதாரியாகி வெளியே வந்திருக்க முடியும். அவளின் அறிவற்ற விளையாட்டுச் செயல் வினையில் முடிந்து கடைசியில் இங்கும் கொண்டு வந்து சேர்த்து விட்டது.

நயனியின் நெஞ்சில் இருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியே வந்தாலும்கூட அவள் நடந்துபோன அந்த நிகழ்வைப் பற்றிப் பெரிதாகக் கவலை கொண்டதேயில்லை. கல்லூரிப்படிப்பு என்றால் சும்மாவா. அதுவும் கலைக் கல்லூரி என்றால் ஆண்களும் பெண்களும் அரட்டையிலேயே அரை வாசி நாட்கள் பறந்து போய்விடும். அவளின் சொந்தக் கிராமம் கிளிநொச்சி யில் இருந்தாலும் இராமநாதன் கலைக் கல்லூரியில் இடங்கிடைத்ததும் அவளின் மகிழ்ச்சி கட்டற்றதாய் ஆனது. பெற்றோரின் கட்டுப்பாட்டில் வளரும் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் மகிழ்ச்சிதான் அவளுக்கும் ஏற்பட்டது. வேறு மாணவிகளுடன் இணுவிலில் ஒரு வீட்டில் தங்கியிருந்து கல்லூரிக்குச் செல்வது புதிய அனுபவமாக இருந்தது.

நடனத்துக்கு ஏற்ற அவளின் மெல்லிய உடல்வாகும் நீண்ட முடியும் களையான முகமும் அவளுக்கே தன்பால் ஈர்ப்பை ஏற்படுத்தி அவளைக் கனவுலகில் சஞ்சரிக்க வைத்தது. வீதியால் இருப்பது நிமிடம் நடந்து கல்லூரிக்குச் செல்லும் பாதையில் தன்னை அறியாமலே ஏற்படும் கர்வத்துடன் யாரையும் ஏறிட்டும் பார்க்காமல்த்தான் அவள் நடந்து செல் வாள். ஆனாலும் இந்தத் தர்சினிதான் அவள் மனதைக் கெடுத்தவள். தர்சினி வவுனியாவில் இருந்து வந்து நடனம் பயின்றுகொண்டிருந்தாள். இவளின் நிறம் இல்லாவிட்டாலும் அவளும் பார்க்க அழகாய்த்தான் இருந்தாள். எடி அவன் உன்னை வைத்தகண் வாங்காமல் பார்க்கிறான் என்று போகும் போதும் வரும்போதும் இவள் காதில் முணுமுணுக்கும்போது இவளுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டாலும் அதைக் காட்டிக்கொள்ளாது “பேசாமல் வாடி” என்பாளேயன்றி நிமிர்ந்தும் யாரையும் பார்த்ததுமில்லை, சிரித்ததுமில்லை.

அதற்கும் ஒரு காரணம் இருந்தது. மூத்த பெண்ணான இவள்பால் தந்தை வைத்திருந்த அசைக்கமுடியாத நம்பிக்கையைத் தான் கெடுக்கக் கூடாது என்று தன் மனதில் ஏற்படுத்தியிருந்த எண்ணம் வலுவாக மனதில் பரவியிருந்ததும் ஒரு காரணம். இவளும் ஒரு தம்பியும் மட்டுமே குடும்பத் தில். தந்தை எப்போதுமே இவளை திட்டி இவள் அறிந்ததில்லை. ஆனாலும் அடிக்கடி இவளுக்கு புத்திகூறியபடியே இருப்பார். இவள் அழகாயிருந்ததும் அதன் காரணம்.

இந்தக் காலத்தில் யாரையுமே நம்ப முடியாது அம்மா. கவனமாக இருந்துகொள்ளுங்கோ. உங்களுக்கு ஒண்டு என்றால் நாங்கள் ஒருத்தரும் உயிருடன் இருக்கமாட்டம் என்று அவர் சாதாரணமாகக் கூறினாலும் தன்மீது தந்தை வைத்துள்ள ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடுதான் அது என்றதும் அவள் அறிந்ததுதான்.

செந்தூரன் பாவம்டி. நீ அவனைத் திரும்பியும் பார்க்கிறாய் இல்லை சரியாய்க் கவலைப் பட்டவன் என்று தர்சினி கூறும்போதெல்லாம் அப்ப நீயே அவனைக் கலியாணம் கட்டடி என்று கூறிவிட்டு எவ்வித உணர்ச்சியு மற்றிருப்பாள். அவன் எவ்வளவு நல்லவன். என்னை அவன் பார்த்தால் கண்ணை மூடிக்கொண்டு ஓமெண்டு சொல்லிப்போடுவன் என்று தர்சினி கூறும்போதும் இவள் அசையவே இல்லை.

வார இறுதி நாட்களில் பக்கத்து வீடுகளில் சைக்கிளை வாங்கிக் கொண்டு இருவரும் ஊரைச் சுற்றி வருவார்கள். சிலவேளை மற்றைய வீடுகளில் வசிக்கும் சிநேகிதிகளும் சேர்ந்து கோவில்களுக்கோ அல்லது சினிமா பார்க்கவோ போவதோடு சரி. அன்றும் அப்பிடித்தான் காரைக்கால் சிவன் கோவிலுக்கு இன்று போய் வருவமாடி என்று தர்சினி கூற இவளுக்கும் பொழுதுபோக வேண்டும் என்று ஒரு சைக்கிளில் இவளையும் பின்னால் ஏற்றிக்கொண்டு தர்சினி கோவிலுக்குப் போகிறாள். காரைக்கால் சிவன் கோவில் ஒரு ஒதுக்குப்புறமாக இருக்கிறது. திருவிழாக் காலங்களில் மட்டும் தான் சனத்தைப் பார்க்கலாம். மற்றப்படி வெறிச்சோடிக் கிடக்கும். ஆனால் முன்னால் பரந்துவிரிந்திருக்கும் அரசமர நிழல் நல்ல குளிர்மையைத் தந்து கொண்டிருக்கும். கோவிலைச் சுற்றியும் பல மரங்கள் இருப்பதனால் சோலையாகக் காட்சி தரும்.

கோவில் திறந்துதான் இருந்தது. ஆனாலும் ஐயரைத் தவிரக் கோவிலில் ஆட்களே இல்லை. எல்லா விளக்குகளும் போடாமல்.. நயனிக்குக் கோயிலுக்கு வந்ததுபோலவே இல்லை. என்னடி அரிச்சனை ஏதும் செய்யப்போறியோ என்று தர்சினியைக் கேட்க, இல்லையடி சுத்திக் கும்பிட்டுவிட்டுப் போவம் என்றபடி ஒருதரம் உள் வீதியைச் சுற்றிவிட்டு வெளியே வருகின்றனர். வெளியே வந்து செருப்பைப் போட்ட போதுதான் பார்த்தால் பக்கத்தில் செந்தூரன் இவளை பார்த்தபடி நிற்பது தெரிகிறது. இவள் மனம் பதட்டமாக உடனே திரும்பினால் பக்கத்தில் தர்சினியைக் காணவில்லை. நயனி பயப்பிடாதையும். உம்மை நான் கடிச்சுத் தின்ன மாட்டன் என்கிறான் அவன். அவள் பதட்டத்துடன் நிமிர்ந்து பார்த்து என்ன விளையாட்டு இது என்கிறாள்.

அவன் முகம் சிரிப்புடன் அழகாகத்தான் இருக்கிறது என்று இவள் மனம் எண்ணினாலும் அதை முகத்தில் காட்டாது கடுகடு என்று வைத்துக் கொண்டு என்னட்டை உந்த விளையாட்டு ஒண்டும் வேண்டாம். நான் போறன் என்றபடி அவள் நடக்கவாரம்பிக்க, அவன் அவள் கைகளை பிடித்து கைகளில் ஒரு கடிதத்தை வைத்துவிட்டு, “அவசரப்பட்டு ஏதும் திட்டிடாதை

யும் நயனி. எனக்கு உங்களை நல்லாப்பிடிச்சுப் போச்சு. கடிதத்தைக் கசக்கி எறியாமல் கொண்டுபோய் தனியா இருந்து வாசிச்சுப் பாரும். உமக்கு விருப்பமில்லை எண்டால் நான் உம்மைத் தொந்தரவு செய்யமாட்டன்" என்றபடி அவள் கைகளை விட்டுவிட்டுப் போன பிறகும் கூட அவன் கைகளை பிடித்திருப்பதாகவே மனம் எண்ணியது.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுக் கடிதத்தை சட்டைக்குள் வைத்துவிட்டு வெளியே தெரிகிறதா என்று தடவிப் பார்த்துவிட்டு தர்சினி எங்கே நிற்கிறாள் என்று தேடினால் அவள் சிரித்தபடி வந்துகொண்டிருந்தாள்.

***

என்னடி செந்தூரனைக் கலைத்துப் போட்டாய் போல என்ற கேள்விக்கு உமக்கேன் தர்சினி தேவையில்லாத வேலை. யாராவது பாத்திருந்தால் எனக்குத்தான் கெட்ட பெயர் என்று கோபித்தபடி நடக்கத் தொடங்க, நயனி நீர் இரண்டு நாள் அவனோட கதைச்சுப்பாரும். உமக்கு கட்டாயம் அவனைப் பிடிக்குமப்பா. ஒருதரும் பாக்கக் கூடாது எண்டுதான் உம்மை இங்க கூட்டிக்கொண்டு வந்தனான். அவனுக்கு என்ன குறை. அவன் சொந்தமாக் கடை வச்சிருக்கிறான். பெட்டையளிட்டை வழியிற கேசுமில்லை. ஆகத்தான் பிகுபண்ணிறீர் என்றுவிட்டு சேர்ந்து நடக்கிறாள் நயனியுடன்.

வீட்டுக்கு வந்த பிறகும் அவளுக்கு கடிதத்தைத் திறந்து படிக்கப் பயத்தில் படபடப்பை கஸ்டப்பட்டு அடக்கியபடி காத்திருக்கிறாள். ஏன் நான் அவனிடம் வாங்கினேன் எனக்கும் அவனைப் பிடிக்குதோ என்று மனதுள் இரகசியமாகக் கேட்டபடி "தலை இடிக்குது" என்று கூறியபடி பாயை விரித்துப் படுப்பவளைப் பார்த்துக் கொடுப்புள் சிரித்தபடி தர்சினி "நான் பக்கத்துவீட்டு விமலா அக்கா வீட்டை போட்டு வாறன்" என்று சொல்லியபடி கதவைச் சாத்திக்கொண்டு போகிறாள். தர்சினியின் காலடி ஓசை மறைந்த பின்னும் கண்ணைத் திறக்காது கிடக்கிறாள் நயனி. ஒரு ஐந்து நிமிடத்தின் பின்னர் தான் படபடப்புக் குறைந்து போக, எழுந்து கதவைத் திறப்பால் பூட்டிவிட்டு கடிதத்தை எடுத்து விரிக்க குப் என்று வியர்த்துக் கைகள் நடுங்குகின்றன.

அன்பே உன் நினைவு தினமும் சுடுகிறது

நித்தமும் உனைப்பார்த்து நிம்மதி கொள்ள

முகம் காட்ட முனையாது நிலவுபோல் மறைகிறாய்.

என் நிம்மதி தொலைத்துவிட்டு நீமட்டும்

நிம்மதியாய்த் தினமும் தூங்குகிறாய்

நெருப்பிடை நிற்பதுவாய் தினம்

உன் நினைவில் நான் வெந்துபோகிறேனடி

என்னைக் கரைசேர்க்க மாட்டாயா காதலியே

என்று கவிதை முடிந்திருக்க இதயத்தின் படபடப்பு இரட்டிப்பாக கால்கை சோரப் பாயில் அமர்கிறாள். கதவு தட்டப்படும் சத்தம்கேட்டு திடுக்குற்று எழுந்து கதவைத் திறந்தவள் தர்சினியைக் கண்டதும் தலையைக் குனிகிறாள். என்னடி அவன்ர கடிதத்தை வாசிச்சிட்டியா என்பவளை, எப்படித் தெரியும் என்ற கேள்வியோடு நிமிர்ந்துபார்க்க, நீ கடிதத்தை வாசிச்சு முடிக்கட்டும் என்று தான் நான் வெளியில போனனான் என்று தர்சினி சிரித்தபடி கூற உனக்குத் தெரிஞ்சிட்டுதா என்றபடி முகம் சிவக்க நண்பியை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலை குனிகிறாள் நயனி.

***

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்தவளை முகுந்தனின் தொலைபேசி அழைப்பு நிகழ்வுக்கு கொண்டுவர சொல்லுங்கோ என்கிறாள். இன்னும் படுத்திருக்கிறீரோ? எழும்பும் என்ற அன்பான குரலில் நெகிழ்ந்த வள் எழும்பீற்றன் என்றபடி போனை காதில் வைத்தபடி எழுகிறாள். காலை யில கட்டாயம் சாப்பிடவேணும். தேத்தண்ணியைக் குடிச்சிட்டு பாணைச் சாப்பிட்டிட்டு அக்கா வீட்டை போறதெண்டால் போம். அல்லது இருந்து டிவி பாரும். நான் இண்டைக்கு நாலு நாலரைக்கு வந்திடுவன். பிள்ளையார் கோவிலுக்குப் போவம் என்றபடி போனை வைக்க இவள் எழுந்து பல் விளக்கப் போகிறாள். டீவியை எத்தனை நாட்களுக்குத்தான் பாக்கிறது. எதுக்கும் மச்சாள் வீட்டுக்கே போவம் என்று எண்ணியபடி உடுப்பை மாற்றுகிறாள்.

முகுந்தனின் அக்காவும் இரண்டு கட்டடங்கள் தள்ளிதான் வசிக் கிறாள். மிகவும் நல்லவள். நயனியை தன் சொந்தத் தங்கையைப் போலவே நடத்துபவள். முக்கியமாய்க் கள்ளங்கபடம் அற்றவள். அவள் கணவனும் நல்லவன்தான். இரண்டு பிள்ளைகள். பிள்ளைகளை பள்ளிக்கூடம் விட்டு விட்டுக் கணவன் வேலைக்குச் செல்ல அவளுக்கும் பொழுது போகாது தானே. தம்பியின் மனைவியை தன் வீட்டுக்கு கூப்பிட்டு வைத்துக் கொள்வாள்.

மற்றைய மச்சாள்மார் போல் இல்லாமல் தம்பி மனைவியை, அவளின் அழகைத் தம்பிக்கு முன்னாலேயே பாராட்டுவதில் இவளுக்கும் அவளை நன்கு பிடித்துவிட்டது.

முகுந்தனின் தமக்கையின் வீடு சொந்த வீடு. ஆனாலும் தம்பியையும் மனைவியையும் தன்னோடு வைக்குமளவு வசதியற்றவீடு. ஆனாலும் தான் இருக்கும் இடத்துக்கு அருகிலேயே தம்பியையும் ஒரு அறையில் வசிக்கச் செய்திருந்தாள். கொஞ்சநாள் அங்கேயே இருந்து கொண்டு ஒரு வீட்டை நீயும் வாங்குதம்பி என்றதும் முகுந்தனுக்கும் மகிழ்ச்சிதான்.

முகுந்தன் வசிப்பது ஒரு சிறிய அறையினுள்ளேயே. குசினி சரியான சின்னன்தான் என்றாலும் ஒருநேரம் இரண்டு கறியும் சோறும் சமைக்க அது போதும் தானே. நயனிக்கு என்ன குறை எண்டால்  ஒரு நல்ல போன் இல்லை எண்டதுதான். வைத்திருக்கும் போனில் அவன் போன் செய்வான். அல்லது தமக்கை போன்செய்வாள். அவனிடம் ஸ்மாட்ப்போன் இருந்தாலும் அதுவும் ஒரு குறிப்பிட்ட வரையறைகளுடன் தான்.

ஞாயிற்றுக் கிழமைகளில் அவனின் போனில் இருந்து பெற்றோருடன் கதைப்பதோடு சரி. மகளுடன் கதைப்பதற்காக அவளின் தந்தை ஒருபோனை வாங்கி வைத்திருந்தார். கொஞ்சம் பொறும். இன்னும் ஆறேழு மாதங்களில உமக்கு இரண்டு வருஷம் முடிஞ்சு 5 வருட விசா தந்திடுவாங்கள். சொந்த வீடும் வாங்கிடலாம். அதுக்குப் பிறகு குஞ்சுக்கு ஆசைப்பட்டதெல்லாம் வாங்கித்தாறன் என்று கூறுபவனின் சொல்லுக்கு கட்டுப்பட்டு எதுவும் கேட்பதில்லை. என்னை மகிழ்ச்சியாக வைத்திருக் கத்தானே இதெல்லாம் செய்யிறார் என்று மனதை சமாதானம் செய்து கொள்வாள்.

முகுந்தனின் தமக்கையின் வீட்டில் கணனி ஒன்று இருக்கிறது. அக்காவுக்கு கணனியைப் பயன்படுத்துவதில் ஆர்வம் இல்லை. அத்தான் காரன் தான் அதை பயன்படுத்துவது. மற்றப்படி பிள்ளைகள் விளையாடு வதற்குப் பயன்படுத்துவதோடு சரி. இப்ப நயனிகூட அதை பயன்படுத்தக் கற்றுக்கொண்டுவிட்டாள். அதற்கு காரணம் அவள் பிரெஞ்சு மொழியைக் கற்க வாரத்தில் இருநாட்கள் பள்ளிக்குச் சென்று வருகிறாள். அங்கு ஒரு மணி நேரம் கணனி வகுப்பும் இருக்கின்றது. அங்கு வரும் இன்னொரு யாழ்ப்பாணப் பெண்தான் இவளுக்கு முகநூலை அறிமுகப்படுத்தியது. தட்டுத்தடுமாறி ஒருவாறு முகநூல் போய் வருவதற்கும் பழகிவிட்டாள். முகுந்தனின் அக்கா வீட்டில் இருக்கும் கணனியினால் நயனிக்கு பொழுது போவதே தெரிவதில்லை.

அந்த மாதம் வழமையாக வரும் மாதவிடாய் வராது நின்றுபோய் ஏழு வாரங்கள் தாண்டிய பின்னர்தான் அவளுக்கு உறைத்தது. கணவனிடம்

கூறியவுடன் அவன் அடைந்த மகிழ்வுக்கு அளவே இல்லை. ஆனால் இவளின் மகிழ்ச்சியற்ற முகம் பார்த்து என்ன உமக்கு சந்தோசமில்லையோ என்றான் முகுந்தன். “எங்கட சொந்த வீட்டிலதான் எங்கள் முதல் குழந்தை பிறக்க வேணும். இந்த இட்டுமுட்டான அறையில என்ன செய்யிறது” என்று அவள் கேட்பதுகூட முகுந்தனுக்கும் சரியாகப் பட, அப்ப என்ன செய்யிறது என்று பரிதாபமாக அவளைக் கேட்கிறான். அக்காட்டைச் சொல்லாதேங்கோ. டொக்டரிட்டை நான் கதைக்கிறேன் என்று கெஞ்சுபவளை மறுப்பதற்கு அவனால் முடியவில்லை. கலியாணங் கட்டி முதல்முதல் தங்கிய பிள்ளையை அழிப்பதற்கு அவளுக்கு கூட மனமில்லைத்தான். ஆனால் வேறுவழியே இல்லை என்று மனதை அவனும் அவளும் தேற்றிக் கொண்டனர்.

***

இது நடந்து நான்கு மாதங்கள் இருக்கும். அவள் தமக்கையின் வீட்டில் கணனியில் மும்மரமாக இருந்தாள். முகுந்தன் இன்று வெள்ளண வருவதாகவும் அவளை போன் வாங்கக் கடைக்கு அழைத்துச் செல்வதாக வும் கூற அவளுக்குத் தலைகால் புரியவில்லை. அவனுக்கு இன்னும் சமைக்கவில்லை. தமக்கையிடம் போட்டுவாறன் மச்சாள் என்று கூறியபடி அவளின் பதிலுக்கும் காத்திராமல் செல்பவளை முகுந்தனின் தமக்கை அதிசயமாகப் பார்த்தாள்.

நயனி சமைத்து வைத்துவிட்டு அவனின் வருகைக்காகக் காத்திருந்தால் ஆறுமணியான பின்தான் அவன் முகத்தில் சோர்வோடு வந்து சேர்ந்தான். வெளிக்கிடட்டோ என்று கேட்டதுக்கும் சொறி நயனி இண்டைக்குப் போகேலாது கடை பூட்டிவிடும். எனக்கும் சரியாத் தலை யிடிக்குது என்று கூறுபவனை ஏமாற்றத்தோடு பார்த்தபடி சாப்பிடுறியளோ என்றாள். இல்லை வேண்டாம். நான் குளிசை போட்டுட்டுப் படுக்கப் போறன் என்றபடி அவளின் பதிலுக்குக் காத்திருக்காது குளியலறை சென்று முகம் கழுவி வந்து படுக்க, நயனி என்ன செய்வது என்று தெரியாது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு வாசிக்கவாரம்பித்தாள்.

அடுத்தநாள் காலை முகுந்தன் நயனிக்குச் சொல்லாமலே வேலைக்குச் சென்றிருந்தான். அவளுக்கு மனதை எதோ பிசைய காலை உணவை உண்ணாமல் தமக்கை வீட்டுக்குச் சென்றால் தமக்கை வாரும் நயனி. விடியச் சாப்பிட்டிட்டே வாறீர். இண்டைக்கு ராசவள்ளிக் களி செய்தனான் கொஞ்சம் சாப்பிடுமன் என்றதும் தாங்கோ என்று வாங்கிக் கொண்டு கணனியின் முன் அமர்ந்தாள்.

கணனி வேலை செய்தாலும் இன்டநெட் வேலை செய்யவில்லை. மச்சாள் இது ஏன் வேலை செய்யுதில்லை என்று கேட்க, பிள்ளைகள் எதோ செய்துபோட்டுதுகள். இனி சனிக்கிழமைதான் தம்பி அல்லது இவர் திருத்த வேணும் என்றுவிட்டு தொலைக்காட்சித் தொடரைப் பார்க்கவாரம்பிக்க இவளும் அதில் அமர்ந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

முகுந்தன் அன்று சாப்பிட்டீரோ என்று போன் செய்யாதது அவளுக்கு ஒருவித நெருடலை ஏற்படுத்த, தானே அவனுக்குப் போன் செய்தாள். போன் நிப்பாட்டியிருந்தது. ஆருக்கு அடிக்கிறீர் என்று முகுந்தனின் தமக்கை கேட்க இவருக்குத்தான் என்றாள். அவன் வேலை நேரத்தில ஆரோடையும் கதைக்கிறதில்லையே என்று தமக்கைக்கூற சரி பின்னேரம் வரும்போது கேட்போம் என்றபடி வீட்டுக்குச் செல்ல ஆயத்தமானாள்.

அங்க போய் என்ன செய்யப்போறீர் தம்பி வந்தபிறகு இரண்டு பேரும் இங்கேயே சாப்பிடுங்கோவன். நான் நண்டு சமைக்கப்போறன் என்றதற்கு நேற்றும் இவர் இரவு சாப்பிடேல்லை மச்சாள். சாப்பாடு அப்பிடியே கிடக்கு. நானும் படுத்திட்டன். நித்திரையும் சரியாக கொள் ளேல்லை. கொஞ்ச நேரம் படுக்கப் போறன் என்றுவிட்டுக் கிளம்பி வீட்டுக்கு வந்து படுத்தவள் முகுந்தன் வந்து எழுப்பும் வரைக்கும் எழும்பவேயில்லை.

நான் உங்களுக்குப் போன் செய்தனான். ஏன் எடுக்கவில்லை என்று கொஞ்சலாகக் கேட்டாள். இண்டைக்கு சரியான வேலையப்பா. அதுதான் போன் செய்ய ஏலாமல் போச்சு. ஆனால் குஞ்சுக்கு ஒரு சப்பிறைஸ் வச்சிருக்கிறன் என்றான். என்னவென்று அவள் கேட்க்காமலே அவனே சொல்லட்டும் என்று அவளும் பேசாமல் இருந்தாள். என்ர பேரில ஆறு பரப்புக்காணி அம்மா வாங்கி விட்டவ எல்லா. அதை நான் போய் வித்துப்போட்டு வரப்போறன். அந்தக் காசையும் போட்டு அடுத்த மாதமே இங்க ஒரு வீடு பாத்திருக்கிறன். அதை வாங்கப் போறன். அதில நீர் மகாராணிமாதிரி இருக்கப்போறீர் என்றுவிட்டு அவள் முகத்தைப் பார்த்தான்.

நானும் போன் ஏதோ வாங்கி வந்தனான் என்று சொல்லப் போறீங்கள் என்று நினைச்சன் என்று தொய்ந்த குரலில் சொல்ல, இன்னு மொன்றும் இருக்கு. இன்னும் இரண்டு நாளில நானும் நீரும் ஊருக்குப் போறம் என்றதும் அவளுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் வாயிலிருந்து வார்த்தைகள் வர மறுத்தன.

அவன் கூறியதை நம்ப முடியாவிட்டாலும் அவன் அவளை கடைகளுக்கு அழைத்துச் சென்று அவள் தந்தைக்கு, தம்பிக்கு, தாய்க்கு

என்றும் தன் தாய், சகோதரி பிள்ளைகளுக்கு என்று பொருட்கள் வாங்கியதும் நம்பத்தான் வேண்டியிருந்தது. அவளின் மகிழ்ச்சி எல்லைகளற்றிருந்தது. ஆனாலும் தமக்கை வீட்டுக் கணனி வேலை செய்யாதது மிகுந்த எரிச்சலை யும் தந்தது. தர்சினியைக் கட்டாயம் பார்த்து வரவேண்டும் என்று மனதில் எழுந்த ஆசை கணனி இன்மையால் நிராசையாகிவிடுமோ என்னும் பதற்றமும் சூழ்ந்துகொண்டது. அடுத்தநாள் பள்ளிக்கூடம் சென்று அந்த யாழ்ப்பாணப் பெண்ணிடம் தங்கள் வீட்டுக் கணனி வேலை செய்யவில்லை. இங்கு எப்படி முகநூலுக்குச் செல்ல முடியும் என்று கேட்டவுடன் அப்பெண் தன் போனைநீட்டி இதில் போம் என்றதும் தலைகால் புரியவில்லை.

ஆனாலும் அந்தப் பெண்ணின் போனில் முகநூலை ஒருவாறு திறந்து தர்சினியின் முகநூலில் தான் நாட்டுக்கு வரும் விபரம் கூறி அவளின் தொலைபேசி எண்ணைத் தன் முகநூல் மெசெஞ்சருக்கு அனுப்பும்படி எழுதிவிட்டு வந்த பின்தான் சிறிது நிம்மதி ஏற்பட்டது. செந்தூரனுக்கு அவள் ஊருக்கு வரும் விடயத்தைக் கூறவே முனையவில்லை. அதற்கு காரணம் அவன் தன்னைப் பார்க்கவென்று திடுதிப்பென்று வந்துவிடுவானோவென்ற பயம்தான். அடுத்தநாள் முகுந்தன் வீட்டிலேயே நின்றதனால் அவளால் சாட்டுச் சொல்லிவிட்டு வெளியே செல்லவும் முடியாதிருந்தது.

விமானத்தில் அவனருகில் இருந்தாலும் மனம் முழுதும் ஊரில் இருப்பவரை நினைத்து வட்டமிட்டது. உன் பெற்றோருக்கு கூறவேண்டாம். அவர்களுக்கு ஆச்சரியம் ஏற்படுத்தும் வகையில் நேரில் போய் நிற்போம் என்று முகுந்தன் கூறியதை அவளும் ஏற்றுக்கொண்டாள். விமானம் வானில் பறக்க வாரம்பிக்க அவளின் நினைவுகளும் பின்னோக்கிப் பறந்தன

***

செந்தூரனின் காதல் தாங்கி வந்த கடிதம் அவளுக்கு அவன்மேல் எல்லையற்ற மயக்கத்தை ஏற்படுத்த அடுத்த நாளே அவனைச் சந்திக்க வேண்டும் என்று தர்சினியூடாக ஒழுங்கு செய்து சந்திக்கவாரம்பித்து ஒரு மாதம் முடிய முன்னரே அவனை விட்டு இருக்க முடியாது என்னும் நிலை ஏற்பட்டுப் போன நிலையில்தான் அவளின் தந்தை திடுதிப்பென்று இவள் தங்கியிருக்கும் வீட்டுக்கு வந்தார்.

உடனடியாகத் தன்னுடன் அவளை அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தவரிடம் எந்த சாட்டும் எடுபடவில்லை. அடுத்த வாரம் திரும்ப வந்து விடலாம் என்றவரிடம் எதுவும் கூற முடியாது தன் ஊருக்குச் சென்றிருந்த தர்சினியையும் பார்க்காது அவளிடமோ அல்லது செந்தூரனிடமோ எதுவும்

கூற முடியாது தந்தையுடன் கிளம்ப வேண்டியதாகிவிட்டது.

தந்தை வருவார் என்று தெரிந்திருந்தால் முதலே செந்தூரனுக்குக் கூறியிருக்கலாம். அவனைப் பார்க்காமல் இருக்கவேண்டும் என்னும் எண்ணமே எதுவோ செய்ய, தந்தைக்குத்தெரியாது தர்சினிக்கு ஒரு கடிதத்தை விபரமாய் எழுதி அவள் பெட்டியில் வைத்துவிட்டுக் கிளம்ப வேண்டியதாகிவிட்டது.

வீட்டுக்குச் சென்ற பின்னர் தான் தந்தை தன்னைக் கூட்டி வந்ததன் நோக்கம் தெரியவர அதிர்ச்சியில் மயக்கமே வந்தது. வெளிநாட்டு மாப்பிளை ஒன்று அவளுக்குச் சரிவந்திருக்காம். அந்தப் பெடியன் ஊர்ல தானாம் வந்து நிக்கிறான். ஒரு வாரத்தில கலியாணம் கட்டிப்போட்டுப் போய் அவளைக் கூப்பிடுவானாம் என்று தாய் மகிழ்வோடு சொல்ல இடி தன்மேல் விழுந்தது போல் நிலைகுலைந்து போனாள் நயனி.

அம்மா எனக்கு இந்தக் கலியாணத்தில விருப்பம் இல்லை என்று திரும்பத்திரும்பச் சொன்னபிறகும் அப்பா அவளருகில் வந்தமர்ந்து “அம்மா மூத்த பிள்ளை நீங்கள். நீங்கள் வசதியா வாழவேணுமெண்டுதான் நான் அந்த மாப்பிள்ளையைப் பாத்திருக்கிறன். எண்பது வீதப் பொருத்தம் நல்ல ஆட்கள். வசதியான ஆட்கள். ஒரு தமக்கையும் இவரும்தான். இவர் தான் கடைசிப்பிள்ளை. எண்டதாலை பொறுப்புமில்லை. நீங்கள் எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் நல்லாய் வாழுவீங்கள் அம்மா. என்று அவள் தலையைத் தடவி அப்பா கூறியபோது செந்தூரனைப் பற்றிக்கூற ஒருவீதத் துணிவுகூட ஏன் தனக்கு ஏற்படாமல் போனது என்று எண்ணியபடி விமான இருக்கையில் கண்மூடி அமர்ந்திருந்தவளை ஏன் நயனி அழுகிறீர் என்று கூறி முகுந்தன் தோளைத்தட்டி கேட்ட பின் தான் தன்னுணர்வுபெற்று எனக்குத் தலை சுற்றுகிறது என்று பொய் கூறியபடி கண்களைத்துடைத்தபடி மீண்டும் கண்ணை மூடிக்கொண்டாள்.

விமானத்தில் இருதடவைகள் உணவு பரிமாறப்பட்டும் அவள் தேநீரை மட்டும் குடித்துவிட்டு இருந்து விட்டாள். பதினொரு மணி நேர பயணத்தின் பின்னர் அதிகாலையில் கட்டுநாயக்காவில் வந்திறங்கி வெளியே வந்தபின் ஒரு டாக்சியைப் பிடித்துக்கொண்டு கோட்டைத் தொடருந்து நிலையத்தை அடைந்து அங்கு பிரயாணச் சீட்டை எடுத்துக் கொண்டு தொடருந்துக்காகக் காத்திருக்க நயனியின் மனமோ எப்படி செந்தூரனைச் சந்திப்பது என்பதிலேயே இருந்தது.

இன்னும் அரை மணிநேரம் இருக்கு. நான் போய் ஏதும் வாங்கி வாறன் என்றுவிட்டு முகுந்தன் சென்றுவிட அவள் மனம் என்ன செய்யலா

மென்று வழி கண்டுபிடிக்க முனைந்து தோற்றது. அவனைச் சந்திக்க முடிமா? முகுந்தனுக்குத் தெரிந்தால் பெரிய பிரச்சனையாகிவிடுமே. தர்சினியின் தொடர்பு கிடைத்தால் மட்டும்தான் அவளூடாக அவனைப் பார்க்க முடியலாம் என்று மனம் ஏதேதோ எல்லாம் எண்ணிக் குளம்பியது. தூரத்தில் இருக்கும் போது கட்டுப்பாடாய் இருந்த மனம் அருகே வந்து விட்டேன் என்றதும் எப்படித் துடிக்கிறது. இப்படி அவன் மேல் இன்னும் தீரா அன்புடன் இருப்பவள் எப்படி இன்னொருவனை மணக்கச் சம்மதித்தாய் என்று இடிக்கும் மனதுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிக்கும் அவள் நிலையை நீடிக்க விடாது முகுந்தன் மாலு பண், கடலை வடை, இடியப்பப் பார்சல், ஒரேஞ் பார்லி எல்லாம் வாங்கிக்கொண்டு வந்து சேர்ந்தான். இன்னும் உமக்குத் தலையிடி மாறேல்லையா என்றபடி பையை நீட்ட, பசி காரணமாக ஒரு மாலு பண்ணை எடுத்து உண்ணவாரம்பித்தாள்.

தொடருந்தினுள்ளும் இவளால் நின்மதியாக இருக்கவே முடியவில்லை. ஆயினும் தன் முகத்தில் இருந்து எதையாவது முகுந்தன் கண்டுகொண்டு விடுவானோ என்னும் பயத்தில் எத்தனை இயல்பாக இருக்க முடியுமோ இருக்க முயன்றாள். இடையில் ஒரு தரிப்பில் முகுந்தன் வாங்கிக் கொடுத்த தேநீர் மனக் கவலையை கொஞ்சம் மறக்கவைக்க அவன் தோளில் சாய்ந்தபடி தொடருந்தின் ஆட்டத்தையும் மீறித் தூங்கிப்போனாள். அவன் அவளை எழுப்பியபோது அவர்கள் கிளிநொச்சிக்கு வந்திருந்தனர். அவன் அவளின் பயணப் பொதிகளையும் தானே தூக்கிக்கொண்டு கவனமா இறங்கும் என்று அக்கறையுடன் கூறியபடி இறங்கினான்.

இன்னும் முப்பது கிலோமீற்றருக்குக் கிட்ட இருக்கு அவளின் ஊருக்குச் செல்ல. பாரிஸில் இருந்தே வாகன ஒழுங்கு அவன் செய்திருந்த தனால் அவனுக்குத் தெரிந்த ஒருவரின் சிற்றுந்து அவர்களுக் காகக் காத்திருக்க, பொதிகளை பின்னால் வைத்துவிட்டு அவளையும் ஏறச் சொல்லிவிட்டு அவன் முன்னாள் ஏறி அமர்ந்தான். வெயில் முப்பத்தைந்து பாகையில் கொதித்துக் கொண்டிருக்க அவன் மனதிலும் அதற்கு மேலால் வெப்பம் ஏற்பட்டதுதான் எனினும் என்னும் உன் நேரம் வரவில்லை என்று மனம் எச்சரிக்க அமைதியாக இருந்து ஓட்டுனருடன் அளவளாவியபடி தன் வெப்பத்தைக் குறைக்க முனைந்தான்.

இடையில் ஓரிடத்தில் நிறுத்தி உணவகம் ஒன்றில் நன்றாக உண்டுவிட்டு மூவரும் மீண்டும் வந்து ஏறிப் பயணத்தை ஆரம்பிக்க, உங்கள் வீட்டுக்கு நாங்கள் வாறது தெரியுமா என்றாள் நயனி. அக்காவிடமும் சொல்லவேண்டாம் என்று சொல்லிவிட்டேன். உங்கள் வீட்டுக்கு முதலில்

போட்டு பிறகு இரண்டு நாளில எங்கட வீட்டை போவம் என்று கூறுபவனை நிமிர்ந்து பார்க்க அவளுக்கு கூசியது. முகுந்தன் எத்தனை அன்பாக என்னுடன் இருக்கிறார். நான் மனத்தால்க் கூட செந்தூரனை மீண்டும் நினைப்பது தவறுதான் என்று எண்ணினாலும் அவனைப் பார்க்கவே வேண்டு மென்னும் நினைப்பும் எல்லாவற்றையும்மீறி எழ, என்ன பெருமூச்சு விடுறீர் என்றான் முகுந்தன். ஐயோ நான் என்னை கொஞ்சம் அடக்கிக்கொள்ள வேண்டும். என்னையறியாமலேயே நான் என்னைக் காட்டிக் குடுத்துடுவன் போல என்று எண்ணியவள் எல்லா நினைப்புக்களையும் தற்காலிகமாக மூட்டை கட்டி வைத்துவிட்டு வெளியே பராக்குப் பார்க்கவாரம்பித்தாள்.

***

இவளைக் கண்டதும் பெற்றோருக்கும் சகோதரனுக்கும் மகிழ்ச்சி தான் என்றாலும் சொல்லாமல் கொள்ளாமல் ஏன் வந்தார்கள் என்னும் கேள்வி தந்தை மனதில் ஓடவே செய்தது. ஆனாலும் மருமகனின் முகத்தில் எந்தக் கடுமையும் இல்லாதபடியால் அவர் நீண்ட நாட்களாகக் காணாத மகளைக் கண்ட மகிழ்ச்சியில் வாயெல்லாம் பல்லாக மாப்பிள்ளையுடன் கதைக்கவாரம்பித்தார். மகள் உடலில் தசை சிறிது கூடி பார்ப்பதற்கே அழகாக இருப்பதைக் காணத் திருப்தியும் ஏற்பட்டது.

அடுத்தநாட் காலை “வெளிக்கிடும் நயனி. வத்தாப்பளை அம்மன் கோவிலுக்குப் போட்டு வருவம்” என்று கூற, அவளும் குளித்து முடித்து பஞ்சாபியைப் போடட்டே என்று முகுந்தனிடம் கேட்கிறாள். சேலை தான் உமக்கு இன்னும் அழகு. கோவிலுக்கு நாங்கள் ஓட்டோவில போறம் அதாலை பயப்பிடாமல் நல்ல சீலையை உடுத்துக்கொண்டு வாரும் என்கிறான். அழகிய நீலநிறச் சேலையில் அவளைக் காண முகுந்தனுக்கே கண்கலங்குகிறது.

அழகிதான் இவள். இருந்தும் என்ன பயன் என்று மனம் எண்ணு கிறது. நானும் அக்காவோட போறன் என்று கூறும் தம்பிக்கு அவள் வாடா என்று சொல்ல முதல் “இன்னொரு நாள் நீங்களும் வாங்கோ. இண்டைக்கு நாங்கள் ஒரு வேண்டுதலை நிறைவேற்றப் போறம்” என்று கூறும் முகுந்தனை எனக்குத் தெரியாமல் இவருக்கு என்னவேண்டுதல் என்று ஆச்சரியமாகப் பார்க்கிறாள் நயனி.

கோவிலைச் சென்றடைந்தபோது சனமே கோயிலில் இல்லை. இப்போதெல்லாம் கோவில்களுக்குப் போவதிலும் பார்க்க நிறையச் சோலிகள் மனிதர்களுக்கு. விசேட தினங்கள் என்றால்கூட முன்புபோல்

சனங்கள் வருவதில்லை. இன்று சனங்கள் அதிகமில்லாதிருப்பதும் நல்லது தான் என நினைத்தபடி முகுந்தன் இறங்கி கோவிலுக்குச் செல்ல முதல் தன் போனில் யாருடனோ கதைக்கிறான். "என்னடா எல்லாம் ஓகேயா? கோவிலுக்கு உள்ளேயா நிற்கிறீர்கள்" என்று மட்டும் கேட்டுவிட்டு, வாரும் என்று நயனியைப் பார்த்துக் கூறியபடி செல்கிறான்.

அவனின் நண்பர்கள் யாரையோ இங்கு வரும்படி கூறியுள்ளான் போல என எண்ணியபடி பின்தொடர்ந்து சென்றவள், கோவிலினுள்ளே சென்றதும் அங்கு நின்றவனைக் கண்டதும் திடீரென மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானவள் போல் மனம் பதைத்து தேகம் நடுங்க மேற்கொண்டு நடக்கமுடியாது அப்படியே நின்றாள். அவளைத் திரும்பிப் பார்த்த முகுந்தன் வாரும் நயனி என்று அவளுக்குக் கிட்டச் சென்று "நான் தான் செந்தூரனை இங்கே வரவளைத்தேன்" என்றதும் அவளுக்கு கண்கள் இருண்டு கொண்டு வர விழாதிருக்க சுவரைப் பிடித்துக்கொண்டாள்.

செந்தூரனுக்கும் எதுவும் புரியவில்லை. இரு நாட்களுக்கு முன்னர் முகநூல் மெசெஞ்சரில் தான் இங்கே வருவதாகவும் இந்தக் கோவிலில் இத்தனை மணிக்கு நீங்களும் வாருங்கள் கதைப்போம் என்று நயனி எழுதியிருந்ததைப் பார்த்துவிட்டு அவளை ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் காணும் ஆவலுடன் வந்திருந்தவனுக்கு, அங்கு நயனி கணவனுடன் வந்திருந்ததே அதிர்ச்சியாக இருக்க மலங்கமலங்க விழித்தபடி என்ன அடுத்துச் செய்வது என்று எண்ணியபடி நிற்கிறான்.

அவள் கணவனே தன்னை வரவழைத்தேன் என்று கூறியது ஆச்சரியத்தையும் அதிர்வையும் பலமடங்கு ஏற்படுத்த, என்ன சொல்லி இந்த நிலையைச் சமாளிக்கலாம் என எண்ணமுன்னரே இரண்டுபேரும் வந்து இதில இருங்கோ என்று கூற, வேறுவழியின்றி இருவரும் வந்து தலை குனிந்தபடி அமர்கின்றனர்.

இரண்டு பேருமா சேர்ந்து இதை வாசிச்சுக்கொண்டிருங்கோ. நான் வாறனென்று ஒரு என்வலப்பைக் கொடுத்துவிட்டு நண்பனையும் அழைத்துக் கொண்டு வெளியே செல்கிறான் முகுந்தன்.

"உங்கள் இரண்டு பேருக்கும் இதை நம்பமுடியால்த்தான் இருக்கும். ஆனால் எனக்கு ஏற்பட்டது அதிர்ச்சியும் ஏமாற்றமும். நயனி அக்கா வீட்டில முகநூலைப் பாவிச்சுப்போட்டு நிப்பாட்ட மறந்துபோனா. அதை தற்செயலாக என் அக்கா பார்த்திட்டா.

"இன்னும் நான்கு மாதத்தில எனக்கு ஐந்து வருட விசா

கிடைத்துவிடும். அதுக்குப்பிறகு என்னை விவாகரத்துச் செய்திட்டு உங்களை ஊர்ல வந்து திருமணம் செய்து பிரான்சுக்கு கூப்பிடுவதாகவும் நயனி எழுதியிருந்ததையும், உங்கள் மேல் இன்னும் இருக்கிற காதலாலதான் வயிற்றில வந்த பிள்ளையை அழித்ததாகவும் இவ உங்களுக்கு எழுதி யிருந்ததை மட்டுமில்லை நீங்கள் மூன்று மாதங்களாகக் கதைத்த எல்லாத்தையும் நான் மட்டுமில்லை அக்காவும் வாசிச்சிட்டா. நீங்கள் இரண்டு பேரும் காதலிச்சது தவறில்லை. அதுக்குப் பிறகு இவ என்னைக் கட்டினதுகூடத் தப்பில்லை. ஆனால் என்னோட தொடர்ந்தும் குடும்பம் நடத்திக்கொண்டு என்னை ஏமாற்றத் திட்டம் போட்டதுதான் தப்பு.”

“நான் இவவை நூறு வீதம் நம்பி என் மனைவி என்ற உண்மையான அன்போடதான் நடத்தினனான். இவ பெற்றோரை எதிர்த்து உங்களைக் கலியாணம் செய்திருக்கவேணும். அது நடக்கேல்லை என்றதும் எனக்காவது உண்மையா இருந்திருக்கவேணும். அதைவிடப் பெரிய தவறு குழந்தையை அழிச்சது. எவ்வளவு நம்பிக்கையோட நான் இவவோட வாழ்ந்து கொண்டிருக்க, என்னோட வாழ்ந்துெ காண்டே நான்கு மாதத்துக்குப் பிறகு என்னை விவாகரத்துச் செய்திட்டு உங்களைக் கலியாணம் செய்யப் போவதாக எழுதின பிறகு நான் இவவை மன்னிச்சு இவவோடை வாழ முடியாது.

இவவை மட்டும் ஊருக்குத் திருப்பி அனுப்பியிருக்கலாம். ஆனால் இவ இங்க வந்து என்னில பழியைப் போட்டுவிட்டுத் தப்பிவிடுவா. அதுக்கு இடங்குடுக்கக் கூடாது எண்டு தான் நானும் வந்தது. இப்ப நீங்கள் இரண்டு பேரும் கலியாணம் செய்து கொண்டு சந்தோசமா வாழுங்கோ. பக்கத்தில இருக்கிற பையில மாலையும் தாலியும் இருக்கு. என்னை நீங்கள் தேடினா லும் கண்டுபிடிக்க ஏலாது. நான் நயனியின் பாஸ்போட்டையும் ரிக்கற்ரையும் கூட எடுத்துக்கொண்டு போறன்”. என்று முடிந்திருக்க விம்மி விம்மி அழும் நயனியை எப்படித் தேற்றுவது என்று தெரியாது என்ன செய்வது என்றும் தெரியாது செந்தூரன் திகைத்துப்போய் அமர்ந்திருக்கிறான்...

# நான் வசந்தன்

அம்மாவின் அன்பான அழைப்பும் துயில் எழுப்பலும் எதுவும் இல்லை. தங்கையின் அலட்டல் ஆர்ப்பாட்டம் இல்லை. அப்பாவின் கம்பீரக் குரல் இல்லை. எனக்குப் பிடித்த இன்னும் பலதும் இங்கில்லைத்தான். ஆனாலும் அவர்கள் எல்லோருடனும் இருக்கும்போது இல்லாத ஒருவித நிம்மதியும் அதனூடே தெரியும் வெறுமையுமே இப்ப எனக்கு இருந்தாலும் சுவாசக் காற்றில் எதோ ஒரு சுகத்தை கவலையினூடும் என்னால் உணர முடியிது.

நான் இரண்டு நாட்களாக என் அறையில் ஒருவித இலயிப்போடு சுருண்டு படுத்திருக்கிறேன். ஏழாம் மாடியின் அறை ஒன்றில் திரைச்சீலையற்ற யன்னலினூடே தெரியும் வானத்தையும் அப்பப்போ கடந்து போகும் மேகங்களையும் சில பறவைகளையும் கூட பல காலத்துக்குப் பின்னர் இப்பிடிப் படுத்தபடியே பார்த்து இரசிக்க முடியும் என்று இரண்டு மாதங்களுக்கு முன்புவரை நான் கனவில் கூட எண்ணியதில்லை.

அம்மா அப்பா தங்கை எல்லோரையும் விட்டு விட்டு இந்த அறைக்கு நான் வந்து ஒரு வாரம் தான் ஆகிறது. வீட்டில் இடம் இல்லாமலோ அல்லது அம்மா அப்பாவோட பிரச்சனை என்றோ நான் வீட்டை விட்டு வரவில்லை. எத்தினை நாட்களுக்குத்தான் அவைக்கு என் விடயம் தெரிஞ்சிடுமோ தெரிஞ்சிடுமோ என்று பயந்து பயந்து இருக்கிறது.

மற்றவைக்காக என் உணர்வுகளையும் மகிழ்ச்சியையும் ஏன் நான் விட்டுட்டு இருக்கோணும்.

சிலநேரம் அம்மாவோ அப்பாவோ என் பிரச்சனையைச் சொன்னால் விளங்கிக்கொண்டிருப்பினம் தான். ஆனால் சொன்ன பிறகு அவை அதிர்ச்சியில ஏதும் சொல்லிவிட்டால் என்னால அதைத் தாங்கேலாமல் இருந்திருக்கும். அதால நான் எடுத்த முடிவு சரிதான் என்று என் மனம் சொன்னதை ஏற்றுக்கொண்டு விட்டேன்.

நான் வசந்தன். வயது 24. நல்ல உயரமான ஆண் அழகன். என்னைப் பற்றி நானே பீத்திறன் என்று நீங்கள் நினைக்கக் கூடாது. என்னோட கதைக்க ஆசைப்படும் பெண்களை வரிசையில் நிக்கவைக்க லாம். நான் கேட்காட்டிக் கூட பெண்கள் விடாமல் என்னைத் துரத்தினால் நான் அழகன் தானே. ஆறடிக்கு மேல் இருப்பேன். தலை நிறைந்த அடர் முடி. கருப்பும் இல்லாமல் மா நிறமும் இல்லாமல் நல்ல ஒரு நிறம் எனக்கு. அம்மாவின் நிறம் தான் நீ என்று என் தங்கை குறைப்பட்டுக்கொள்வாள். அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை.

பெண் பிள்ளைகள் வெள்ளையாக இருந்தால் தானே எங்கள் பெடியளுக்குப் பிடிக்கும். என் தங்கையோ அப்பாவைப் போல கருமை நிறம். அதற்காக அவளுக்கு என்னிலோ எனக்கு அவளிலோ எள்ளளவும் எரிச்சலோ கோபமோ இருந்ததில்லை. என்னிலும் பார்க்க என்றுதான் சொல்ல முடியும்... அவளுக்கு என்னில் அளவு கடந்த பாசம். ஒருநாள் கூட பகிடிக்குத் தன்னும் நான் அவளின் நிறம்பற்றிக் கதைத்தது கிடையாது. அம்மாதான் திவாவுக்கு உன்ர நிறம் வந்து உனக்கு அப்பாவின்ர நிறம் வந்திருக்கலாம். ஆம்பிளையள் கறுப்பாய் இருக்கிறதுதான் களை என்று தங்கை இல்லாத நேரம் என்னிடம் தன் ஆதங்கத்தைக் கொட்டும்போது எனக்கும் வருத்த மாகத்தான் இருக்கும். இருந்தாலும் அதை மறைத்துக்கொண்டு என்னம்மா கதைக்கிறீங்கள். தங்கச்சி என்னிலும் எவ்வளவு வடிவு என்பேன். அம்மா ஒரு சிரிப்புச் சிரித்துவிட்டு நீ தங்கச்சியை விட்டுக்கொடுக்க மாட்டாய் என்பார்.

எனக்கு நினைவு தெரிஞ்ச நாள்முதல் பெட்டையள் எண்டாலே சரியான விருப்பம். என் அயலட்டையில் ஆறேழு சின்னஞ் சிறிசுகள் இருக் கினம் தான். மீனாவோடையும் செல்லாவோடயும் சேர்ந்து விளையாடுவது தான் விருப்பம் எனக்கு. அதிலும் அந்த மீனாவோடையே எப்போதும் இருக்கவேணும்போல, கதைக்கவேணும் போல என் உள்ளக்கிடக்கையைச் சொல்லவேணும்போல ஆசையா இருக்கும். ஆனா அம்மா ஏன்ரா பெட்டை யளுக்குப் பின்னால திரியிறாய் என்று அவளவைக்கு முன்னாலேயே ஏசேக் குள்ள அழவேணும்போல இருக்க கண்ணெல்லாம் குளமாயிடும். பொம்பிளைப்பிள்ளை போல அழாதை என்று சொன்னதும் கண்ணீரும்

வெளியில வராமல் நிண்டிடும்.

பள்ளிக்கூடம் போனாலும் பெட்டையளோடயே கதைக்கவேணும் போல இருக்கும். ஆனா பெடியள் என்னை இழுத்துக்கொண்டு போவிடுவாங்கள். அதிலும் அந்தக் கரன் அடிக்கடி என்னைக் கட்டிப்பிடிச்சு கடுப்பேத்துவான். என்பாட்டில ஒரு பக்கமாய் போய் நிண்டாலும் விடான். எடேய் வாடா எண்டு என்னைப்  பந்தடிக்க கூட்டிக்கொண்டு போயிடுவான். இருந்தாலும் மார்க்கண்டு வாத்திக்கும் அம்மாவுக்கும் பயந்து விருப்பம் இல்லாமல் விளையாடிக் கொண்டிருப்பன். வாத்தி அம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரன். தான் தான் எனக்குப் பள்ளிகூடத்தில் காவல்போல அம்மாவைக் காணும்நேரம் ஏதும் வத்திவைப்பார். அதுக்குப் பயந்து அவதானமாக இருப்பன்.

அப்பா வெளிநாடுபோய் எங்களையும் ஸ்பொன்சரில கூப்பிட்ட பிறகு ஊரும் இல்லை அயலுமில்லாமல் நான் சரியாக் கஷ்டப்பட்டுப் போனன். இங்க வந்து மொழி படிக்கிறது கஷ்டம் எண்டா ஒரு சின்ன வீட்டுக்குள்ள அக்கம்பக்கம் எங்கடை ஆட்களும் இல்லாமல்... அதுகும் ஒருவகையில நிம்மதியாத்தான் இருந்துது.

படிக்கட்டும் பிள்ளை எண்டு அப்பா வாங்கித் தந்த கணனியாலதான் என்ர சலிப்பான சிறிய உலகமே மாறிப்போச்சு. அதுக்காக நான் படிப்பைக் கோட்டை விடேல்லை. அப்பா தான் பாவம். இரண்டு வேலை செய்து என்னை யும் தங்கையையும் டியூசனுக்கு அனுப்பி... நான் அவையின் நம்பிக்கையைக் கெடுக்காமல் ஒருமாதிரிப் படிச்சு யூனியும் முடிக்கப்போறன். இவ்வளவு நாளும் அரசாங்கம் படிக்கக் காசு தந்தாலும் அம்மாவோடையே மூண்டு வருடங்களும் இருந்து கொஞ்சக் காசும் மிச்சம் பிடிச்சிட்டன். அதிலேதான் இனி மாஸ்டர்ஸ் செய்யவேணும். வீட்டில இருக்கிறது பல விதத்தில நன்மை. சாப்பாடு அந்தந்த நேரத்துக்கு பாசத்தோடு வரும். ஒதுக்குற வேலை, உடுப்புத் தோய்க்கிற வேலை, அதை அயர்ண் பண்ணுற வேலை எதுமே இல்லை. ஆனா ஆம்பிளைப் பிள்ளையாய் பிறந்திட்டு நெடுக அம்மா அப்பாவின் காசில வாழக் கூடாது தானே.

இப்ப பகுதி நேர வேலையும் செய்துகொண்டு தான் படிக்கிறன். அந்த வேலை செய்யப் போய்த்தான் எனக்கு அகிலோட பழக்கம் ஏற்பட்டுது. நாங்கள் இருவரும் ஒரே உணவகத்தில் பகுதி நேர வேலை செய்ய ஆரம்பிக்க, என்னுடன் தானே வந்து வலியக் கதைக்கவாரம்பிச்சது அகில் தான். பார்க்கப் பார்க்கப் பாத்துக்கொண்டே இருக்கலாம் போல் அழகு. நல்ல சுருள் முடி. எகிப்து நாட்டின் ஒரு தங்க நிறமும் உயரமும் கூர்மையும் என்னை

மட்டுமல்ல யாரையுமே ஈர்க்கத்தான் செய்யும். வேலை முடிந்த பின்னரும் இருவரும் எங்காவது அமர்ந்து ஏதாவது குடித்தபடி பேசவாரம்பித்தது படிப்படியாக அதிகரித்து நான் வீட்டில் வந்து இரவு தூங்கிவிட்டு காலையில் மட்டும் வீட்டில் உணவருந்துவது என்றாகி இப்ப கொஞ்ச நாட்களாக அம்மாவும் தங்கையும் கூட “நீ இப்ப முன்னை மாதிரி இல்லை” என்று சொல்லுமளவு அகிலின் நெருக்கம் அதிகமாகி.... அப்போதுதான் அகிலுடனேயே எந்நேரமும் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் ஏற்பட்டுப் போனது.

அகிலின் எண்ணம் எதுவென வடிவாத் தெரியாது நானாக வாய் திறந்து ஏதும் கேட்டு அது தப்பாகி அகிலின் நட்பையே இழந்திடுவேனோ என்ற பயமும் கூடவே இருக்க, அன்று என் அதிட்டம்... நாங்கள் பேசிக் கொண்டிருந்தபோது அகிலே என்னை அணைத்து முத்தமிட்டபோது எல்லாமே எங்கள் இருவருக்கும் புரிந்துபோனது.

அதன் பின்தான் அகிலே நாங்கள் இருவரும் ஒரு தனி வீடு எடுத்து இருந்தால் என்ன என்று கேட்டபோது குப்பென்று மனதில் ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியை நான் உணர்ந்தேன். அப்பவும் மனம் பயத்தில் திக் திக் என்று அடித்துக்கொண்டதுதான். தங்கை இருக்கிறாள். அம்மா என்னைத் தனியா இருக்க விடுவாவோ? அவர்களைவிட்டு வந்து இருப்பது சரிதானா? என்று ஒருவாரமாக மண்டையைப் போட்டு உருட்டியதில்த்தான் அந்த ஐடியாவை அகிலே தந்தது. ஆனாலும் அகிலைப் பிரிந்து இருப்பதிலும் பார்க்க பெற்றோரையும் தங்கையையும் பிரிந்து இருக்க முடியும் என்று மனம் அல்லாடிப் பின் வெல்ல, சரி இரண்டுபேரும் தனியாக வாழ ஆரம்பிக்கலாம் என்று முடிவெடுத்ததுதான். எனது மாஸ்டர்ஸ் படிப்பை தூரவாக ஓர் இடத்தில் தெரிவு செய்து அங்கு எனக்கு இடமும் கிடைத்தது என் நல்ல காலம்.

அழைப்பு மணி அடிக்க அகிலுக்கு இதே வேலையாய் போச்சு என்று மனதுக்குள் திட்டியபடி கதவைத் திறக்கிறேன்.

“நான் எங்காவது போயிருந்தால் என்ன செய்வாய்? திறப்பை மறக்காமல் எடுத்துக் போ என்று எத்தனை தடவை சொன்னாலும் கேட்க மாட்டியா”

“நான் எப்ப வருவேன் என்று நீ எனக்காகக் காத்திருப்பாய் என்று எனக்குத் தெரியுமே” என்றபடி வசந்தனை ஆசை தீர இறுக அணைக்கிறான் அகில்.

# மருந்தே இல்லா நோய்

மாலை நேரச் சூரியன் மறையும் காட்சி அத்தனை அழகாய் இருந்தும் மதுவால் அதை இரசிக்க முடிய வில்லை. பெரிய தோட்டத்துடனான வீடு. சமதரை யாக இல்லாது மேடும் பள்ளமுமாக இருந்ததில் அதற் கேற்ற நிபுணர்களைக் கொண்டு காசைப் பார்க்காமல் வடிவமைத்ததில் எத்தனைத்தரம் பார்த்தாலும் சலிக்காத அழகுடன் அந்த வீட்டின் பின்பகுதியும் தோட்டமும் அழகாய் இருக்கும். வரும் நண்பர்கள் அதைப் பார்த்துப் பொறாமை கொண்டாலும்கூட வாய்விட்டு அதன் அழகைப் புழுகாமலும் போனதில்லை. நிபுணர்கள் ஒரு தடவைதான் வந்து வடிவமைத்தார்கள். அதன்பின் அவளே சிலதை புதிதாக நட்டும் மாற்றியும் அமைத்திருக்கிறாள்.

ரோசாக் கன்றுகள் மட்டும் விவதவிதமாகப் பூத்துக் குலுங்குவதை எத்தனை தடவை பார்த்தாலும் யாருக்கும் சலிக்காது. மாதம் ஒரு தடவை ஒருவர் வந்து கத்தரிப்பதைக் கத்தரித்து இலைகளைக் கூட்டிச் சுத்தம் செய்து புற்களை எல்லாம் வெட்டி அழகுபடுத்திவிட்டுப் போவார். அவர் இறந்து நான்கு மாதங்களாகிவிட்டன. வேறு ஆளைத் தேடவேண்டிய மனோநிலையும் அவளுக்கு இல்லாததனால் தோட்டம் குப்பைகள் நிறைந்து செடிகள் கண்டபடி வளர்ந்து தோட்டத்தின் அழகைக் கெடுக்கிறதுதான். இருந்தும் மது அதைப்பற்றி அக்கறையே இல்லாது மனதை எங்கோ விட்டபடி யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

விடாது அழைத்த தொலைபேசி அழைப்பு அவளை நிகழ்வுக்குக் கொண்டுவர, எழுந்து சென்று

தொலைபேசியை எடுக்கு முன்னர் அது நின்றுபோய் இருந்தது. திரையைப் பார்த்தவளுக்கு மனதில் குற்ற உணர்வு ஏற்பட உடனே வந்த இலக்கத்தை அழுத்தி, அந்தப்பக்கம் தொலைபேசி எடுக்கப்பட "மன்னிச்சுக் கொள்ளுங்கோ அக்கா. எதோ நினைப்பில இருந்திட்டன். உடன வாறன்" என்றபடி சப்பாத்தைக் கொழுவிக்கொண்டு காரில் ஏறி அமர்ந்தாள்.

பள்ளி முடிந்து வந்ததும் பிள்ளைகளுக்கு கொறிக்க ஏதாவது கொடுத்து ஒருமணிநேரம் தொலைக்காட்சி பார்க்க விட்டுவிட்டு ஐந்து மணி தொடக்கம் ஏழு மணிவரை ஒரு தமிழ் பெண்ணிடம் ஆங்கில ரியூசனுக்கு விட்டுவிட்டு இவள் திரும்பிவந்து இரவு உணவைத் தயாரித்து பிள்ளைகளின் உடைகளை எடுத்து கூடையில் போட்டுவிட்டு வீட்டையும் கூட்டி எல்லாம் ஒழுங்காக்கிவிட்டு பிள்ளைகளைத் திருப்பிக் கூட்டிவந்து இரவு உணவை உண்பதற்கு மேசைக்கு அழைக்கிறாள்.

"அப்பா எங்கை அம்மா?"

"அவருக்கு வேலை கூடவாம். கொஞ்சம் பொறுத்துதான் வருவார் அப்பா. நீங்கள் சாப்பிடுங்கோ"

"நீங்கள் சாப்பிடேல்லையே?"

"அப்பா வந்தபிறகு அவரோட சேர்ந்து சாப்பிடுறன்" என்றவள் மகனின் அன்பில் நெகிழ்ந்து போகிறாள்.

"அப்பா சொக்லற் கொண்டு வருவாரோ?" மகள் கேட்கிறாள்.

"அப்பான்ர செல்லமெல்லோ நீங்கள். கட்டாயம் கொண்டு வருவார்"

"நேற்று அப்பா கொண்டுவரேல்லையே"

"அப்பா கொண்டுவந்து குசினி மேசையில் வச்சவர். நரி வந்து கொண்டு போட்டுது. இண்டைக்கு கட்டாயம் கொண்டருவார்"

பிள்ளைகளிடம் பொய் சொல்கிறோமே என்ற வேதனையும் வெட்கமும் அவள் மனதைச் சூழ்கிறது.

நாளை நான் கட்டாயம் இருவருக்கும் சொக்ளற் வாங்கிக் கொடுக்கவேண்டும். அல்லது அவர்களுக்கு இவளின் மேல் நம்பிக்கையே இல்லாது போய்விடும்.

தனக்குள் தீர்மானித்தவளாக மிகுதி வேலைகளை முடித்து பிள்ளைகளைப் படுக்கைக்கு அழைத்துப் போய் தூங்க வைத்தபின்னும் அடுத்தநாட் காலை வெள்ளன எழுந்து சமைத்து வைத்துவிட்டு வேலைக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணமும் எழ, சாப்பிட வேண்டும் என்ற நினைப்பேயின்றி படுக்கைக்குச் செல்கிறாள் மது.

***

பிரான்ஸ்சில் பிறந்த மது படிப்பில் கெட்டிக்காரி மட்டுமன்றி

அழகிலும் குறைந்தவளல்ல. அவளின் பன்னிரண்டு வயதில் சராசரித் தமிழ்ப் பெற்றோரின் ஆசைக்கிணங்க லண்டனுக்குப் பெற்றோரோடு இடம்பெயர்ந்த வளுக்கு முதலில் லண்டன் பிடிக்காவிட்டாலும் போகப்போக யூனியில் இடம் கிடைத்து படிக்கவாரம்பித்ததும் பிடித்துப்போய்விட்டது.

பெற்றோர்கள் அங்கு கஷ்டப்பட்டுச் சேர்த்த காசைக் கொண்டுவந்து ஒரு கடை எடுத்து நடத்தவாரம்பிக்க இவளுக்கு அவர்களின் தலையீடு குறைய நிம்மதியாகப் படிக்கவாரம்பித்து தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க ஆரம்பித்தாள். இரவில் அவள் பெரிதாக வெளியே சென்ற தில்லை. ஆனாலும் ஒரு கூடப் படிக்கும் நண்பியின் பிறந்தநாள் கொண்டாட்டம் என்ற அழைப்பை ஏற்று தாயிடம் கெஞ்சி மண்றாடி இரவு வரப் பிந்தும். அவளின் தந்தையே எல்லாம் முடியக் கூட்டிக்கொண்டு வந்து விடுவார் என்று தாயைச் சம்மதிக்க வைத்தபோது “இதுதான் கடைசி. இனி மேல் இப்பிடிக் கண்டபடி திரிய அப்பா சம்மதிக்க மாட்டார்” என்ற எச்சரிக்கை யோடு தாய் அனுமதிக்க நண்பியுடன் சென்றவள், பிறந்தநாள் கொண்டாட்டம் பப் ஒன்றில் என்றதும் நடுங்கித்தான் போனாள்.

“எனக்குப் பயமாய் இருக்கு டொரத்தி, அம்மாக்குத் தெரிஞ்சா பிரச்சனை” என்று முணுமுணுதத்தவளை “கேய் யு ஆர் நொட் எ சைல்ட் ” என்று நகைத்தபடி கேலி செய்தாள் டொரத்தி. அங்குதான் நவீனை முதல் முதலில் சந்தித்தது. கண்டதும் காதல் என்று ஒன்றும் ஏற்படாவிட்டாலும் அவனும் அதே யூனியில் படித்ததால் அதன்பின் தானாகவே நிகழ்ந்த சந்திப்புக்களும் அவனின் கண்ணியமும் அவளைக் கவர அவனே “நாளை என்னுடன் ரெஸ்ரோரன்ற் வருகிறாயா” என்று அழைத்தான்.

ஒருநாள் கதைத்துக் கொண்டிருந்த போதுதான் என்னைப் போலத்தான் உனக்கும் இரவிலே தூக்க முடியாமலிருக்கா என்று அவன் கேட்டு தன் காதலை வெளிப்படுத்த, நிறையத் தமிழ்ப் படம் பார்க்கிறாயா என்று சினிமாப் பாணியிலேயே அவளும் வெட்கப்பட்டு காதலை வெளிப் படுத்த காலம் எப்படித்தான் விரைதோடியதோ இருவருக்கும் தெரியவில்லை.

பெற்றோருக்குச் சொல்லாமல் இரவில் அதிகம் வெளியே தாங்காமல் படிப்பையும் காதலையும் சமமாகப் பார்த்துக்கொண்டதால் எந்தத் தடங்கலும் ஏற்படாது போனது. படித்து முடித்த கையோடு பிரெஞ்சு விமான சேவை ஒன்றில் நல்ல ஊதியத்துக்கு உடனேயே அவளுக்கு வேலையும் கிடைத்தது. அவன் எத்தனை முயன்றும் ஒரு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கவே இல்லை.

“உமக்கு என்ன. நல்ல வேலையும் சம்பளமும். ஆண்களுக்கு ஏன் வேலை தரப்போறாங்கள்” என்பதாய் சலிப்புடன் அவன் கதை நீளும்.

“நவீன், மனத்தைத் தளர விடவேண்டாம். எதுக்கும் சும்மா இருக்காமல் மாஸ்ரேஸ் செய்யுங்கோ”

“மூண்டு வருடங்கள் படிச்சே அலுத்திட்டுது. இன்னும் ஒரு வருடமா?”

“கட்டாயம் அதுக்குப் பிறகு வேலை கிடைக்கும். ஒரு பகுதி நேர வேலை செய்து கொண்டு படியுங்கோ”

நவீனுக்கு நண்பர்களூடாக மதுவே வேலையும் ஒழுங்குசெய்து அவனுக்கு பலவகையிலும் உதவியாக இருந்ததுமல்லாமல் வாரம் ஒருதடவை இருவரும் நாள் முழுதும் எங்காவது சுற்றிவிட்டு வீடு வருவதுமாக காதலையும் தக்க வைத்துக் கொண்டிருக்க மதுவின் வீட்டில் பிரச்சனை ஆரம்பித்தது.

“மது, இங்க இந்தப் படத்தைப் பார். பெடியன் இன்ஜினியர். இரண்டே இரண்டு பெடியள்”

படத்தை மறுக்காமல் வாங்கி இரண்டு நாள் வைத்திருந்துவிட்டு “எனக்குப் பிடிக்கேல்லை” என்றவளை ஏன் எதுக்கு என்று கேள்வி கேட்டுத் துளைத்துவிட்டனர். ஒன்று இரண்டாகி நான்காகி ஒவ்வொருவருக்கும் ஏதோ வொரு நொண்டிச் சாட்டுச் சொல்லிக் காலங்கடத்தி, நவீன் படித்து முடித்ததும் இனிச் சொல்லித்தான் தீரவேண்டும் என்று இருவரும் முடி வெடுத்துத் தாயிடம் வருகிறாள் மது. எல்லா விசாரணைகளும் முடிந்த பின்னர்

“உது சரிவராது. உந்த ஊர்ல செய்தால் எங்கட மானம் போயிடும்”

“நாங்கள் இரண்டுபேரும் லவ் பண்ணுறம். அவரை விட்டுட்டு வேற யாரையும் நான் கட்ட முடியாது”

“உதுக்குத்தான் நாங்கள் பெத்து வளர்த்தனாங்களோ”

“அம்மா எனக்கு இப்ப 24 வயது”

“அதுக்காக கண்டவனையும் கட்டப்போறன் எண்ணுவியோ?”

“உங்கட சம்மதத்தோட தான் கட்டவேணும் எண்டுதான் எங்களுக்கும் விருப்பம்”

“கடைசிவரை நாங்கள் சம்மதிக்கமாட்டம்”

“சரியம்மா இனி உங்கடை விருப்பம்”

அடுத்த ஒருவாரம் தாயோ தகப்பனோ இவளோடு கதைக்காமல் இவளை உதாசீனம் செய்ய, அடுத்தடுத்த நாட்களில் நவீனுடன் கதைத்து அவனை ஒருவாறு சம்மதிக்க வைத்து அவன் பெற்றோருடன் கதைக்க வைத்து எல்லாம் தோல்வியில் முடிய, “மது நாங்கள் அடுத்த மாதமே கலியாணம் கட்டுவம் என்று இவளுக்கு நம்பிக்கை குடுத்து இருவரும் பதிவுத் திருமணம் செய்த பின்னரும் இரு பக்கத்தாரும் இவர்களை ஒதுக்கி வைக்க,

நவீன் இவளை கவலை கொள்ளவிடாது தாங்கிப்பிடித்தான் என்றுதான் சொல்லவேண்டும். அவனுக்கும் வேலை கிடைத்து இரண்டு ஆண்டுகளில் இருவர் பேரிலும் வீடு ஒன்றையும் வாங்கிய பின்னர்தான் அடுத்ததாக குழந்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என்று இருவரும் முடிவெடுத்ததும்.

குழந்தை வயிற்றில் வளர வளரப் பெற்றோரைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையும் எழுந்ததை உணர்ந்தும் இவள் அடக்கிக்கொண்டாள். முதல் ஆண்குழந்தை பிறந்தபோது எல்லாவற்றையும் ஓரங்கட்டி வைத்துவிட்டு நவீன் சென்று தன் பெற்றோரை மட்டுமன்றி மாமன் மாமியைச் சந்தித்ததில் பெற்றோரின் மனம் பெரிதாக இளகாவிட்டாலும் மதுவின் பெற்றோர் உடனே வந்து பேரப்பிள்ளையைப் பார்த்தது மதுவுக்கும் இவனுக்கும் ஆறுதலாகிப் போனதுதான்.

ஒருமாதம் செல்ல பிள்ளையையும் தூக்கிக்கொண்டு பெற்றோர் வீட்டுக்குப் போன நவீனையும் மதுவையும் மன்னிக்க மனமில்லை தான் அவர்களுக்கு. ஆயினும் பேரனைப் பார்த்தபின் மனம் இளகியதில் உள்ளே வாங்கோ என்று கூப்பிட்டு இருக்க வைத்தாலும் பெரிதாக அவர்களுடன் ஒட்ட மனம் ஒப்பவில்லை மதுமிதாவால்.

நவீன் அடிக்கடி பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவந்தாலும் இவள் எப்பவாவதுதான் சென்றுவருவாள். அவவின்ர சாதித் தடிப்பைப் பாரன் என்று நவீனின் தாய் கூறுவதை நவீன் ஏற்காது அவள் அப்பிடிப் பட்டவள் இல்லை அம்மா. நீங்களும் தானே அவள் வந்தால் முகம் குடுத்து பெரிசாக் கதைக்கிறேல்லை என்பான்.

இரண்டாவது பெண் குழந்தை பிறந்த பின் பெற்றவளே மதுவைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக்கொண்டாள். ஆனாலும் பேர்த்தியைப் பார்க்க நவீனின் பெற்றோர் வந்தபோது கதவைத் திறந்துவிட்டு வாங்கோ என்றுகூடச் சொல்லாமல் உன்ர மாமனும் மாமியும் வந்திருக்கினம் போய்ப் பார் என்றுவிட்டு சமையல் அறையில் போய்நிற்க, மதுவுக்குத் தாயின் மேல் கோபம் வந்ததுதான்.

எப்பிடிச் சொன்னாலும் அம்மா விளங்கிக் கொள்ளப்போவதில்லை. ஆனாலும் ஆறுதலா அம்மாவுக்கு விளங்கப்படுத்தவேணும் என எண்ணிக் கொண்டாள். அந்த நேரம் பார்த்து நவீனின் நண்பன் வேணுவும் மனைவியும் வீட்டுக்கு வந்ததில் நிலமை மோசமடையவில்லை. மதுவின் பெற்றோருடன் கதைத்துக்கொண்டு இருந்துவிட்டு எங்கே நவீன் என்கிறாள் வேணுவின் மனைவி கலா. வேணு கேட்க வேண்டிய கேள்வியை இவள் ஏன் கேட்கிறாள் என்னும் நெருடல் மதுவுக்கு எழுந்தாலும் அவருக்கு இண்டைக்கு அரைநாள் வேலை. இன்னும் ஒரு மணித்தியாலத்தில வந்திடுவார் என்று மது

கூறியவுடன் சரி அவர் வரும்வரையும் இருந்திட்டுப் போவம் என்கிறாள் கலா.

அவளின் நடவடிக்கை மதுவுக்குப் பெரிதாகப் பிடிப்பதில்லை. ஆரம்பத்தில் திருமணமான புதிதில் இவர்கள் மனதை ஆற்றிக்கொள்ள நண்பன் வேணுவின் வீட்டுக்குப் போவார்கள். மது இருப்பதைப் பற்றி எள்ளளவும் கவலை கொள்ளாமல் நவீனுடனேயே அவள் கதைத்துக் கொண்டே இருப்பாள். ஆரம்பத்தில் அது சாதாரணம் என்றுதான் மதுவும் எண்ணினாள். ஆனால் போகப்போக மது அவதானித்துப் பார்த்ததில் நவீனைக் கண்டவுடன் அவள் கண்களில் ஒரு ஒளிர்வை அவதானித்தபின் மது அவர்கள் வீட்டுக்குச் செல்வதை குறைத்துக்கொண்டாலும் தொலை பேசியில் நவீனும் வேணுவும் கதைத்துக் கொள்வதை நிறுத்தவில்லை.

மாமியும் மாமாவும் வந்திருக்கும்போது தாம் வந்தது எத்தனை இடைஞ்சல் என்று விளங்காமல் நவீனைப் பார்த்துவீட்டுப் போவோம் என்றது எரிச்சலைக் கிளப்பியதுதான். ஆயினும் போங்கோ என்று சொல்லவா முடியும்? வேணு மிகவும் நல்லவர். மதுவைத் தன் தங்கை என்று கூறி நாகரீகமாக நடந்து கொள்வார். ஆனால் இவள் கலாதான் சரியில்லை என்று மதுவின் மனம் சொல்லிக்கொண்டே இருக்குது.

நவீன் வேலையால் வந்தவுடன் அவன் பெற்றோருடன் கதைக்கக்கூட விடாது. கலாவே அவனுடன் கதைத்துக்கொண்டிருக்க மதுவின் தாய்தான் இவளைக் குசினிக்குள் அழைத்துச்சென்று உவளை முதல்ல வெளியில கலை. மருமேன் வந்தநேரம் தொடக்கம் விடாமல் கதைச்சுக்கொண்டிருக் கிறாள். எனக்கெண்டால் நல்லதாப் படேல்லை என்றபின் இவள் சென்று நவீன் நீங்கள் குளிச்சிட்டு வந்து கதையுங்கோ என்று சொல்ல, நவீனின் தாயும் “தம்பி அவையை அனுப்பிப்போட்டு வந்து குளிக்கட்டன்” என்று சொன்னதுமில்லாமல் “நீங்கள் என்னொருநாள் வந்து ஆறுதலாக கதையுங் கோவன்” என்றதும் வேணு ஓமம்மா இன்னொரு நாளைக்கு வாறம் என்றபடி எழ, கலாவும் எழும்பவேண்டியதாகிவிட்டது.

***

பிள்ளைகள் இருவரிலும் நவீன் உயிரையே வைத்திருக்கிறான். மூத்த மகன் பள்ளி செல்லும் வரையிலும் மதுவுக்கு எல்லா உதவிகளையும் பார்த்துப் பார்த்துச் செய்தது நவீன்தான். அவனின் பெற்றோர் அங்கு வருவதற்கு முன்னர் அவன் இன்னொரு குடும்பத்தினருடன் தான் ஒரு அறையில் வசித்தான். அவர்களே இரண்டு நேர உணவும் கொடுத்து அவனை குடும்பத்தில் ஒருவனாக நடத்தினர். அவர்களின் இரு குழந்தைகள் கூட மாமா மாமா என்று இவனுடன் மிகவும் இயல்பாகப் பழகுவதில் இவன் தனிமையை உணர்ந்தது கூட இல்லை. அவர்களைவிட இன்னும் இரண்டு

நண்பர்களின் குடும்பங்களும் இருந்ததில் அவன் பொழுது மதுவைத் திருமணம் செய்த பின்னரும் நன்றாகவே போய்க்கொண்டிருந்தது.

இப்ப ஒரு ஆண்டாக அவனுக்கும் வேலை வேறு இடத்தில். போவதற்கும் வருவதற்குமே இரண்டுமணிநேரம் எடுப்பதாக சொல்லிச் சலித்துக் கொண்டாலும் இவளும் கார் எடுத்தபடியால் இவளே பிள்ளைகளை நேசறிக்கும் பள்ளிக்கும் ஏத்தி இறக்குவதில் இவள் நேரம் போய்விடுகிறது. அடுத்தடுத்து இரண்டு குழந்தைகள் பிறந்தபின் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என்று இவள் வேலையை விட்டுவிட்டாள். இப்ப அவர்கள் பள்ளிக் குச் செல்வதால் அவள் மீண்டும் வேலைக்குச் செல்லலாம் என எண்ணி அவள் இணையவெளியில் தேடி ஒரு தனியார் வைத்திய நிலையத்தில் வரவேற்பாளராக வேலையைப் பெற்றுக்கொண்டு வெளியே வந்து நவீனுக்கு போன் செய்ய எண்ணி போனை எடுத்தால் அவன் போன் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கு. சரி அவனுக்கு வேலையில் பிஸி போல என்று எண்ணியபடி தன் காரில் ஏறி அமர்ந்து அதை செலுத்தத் தொடங்குகிறாள்.

மூன்று சந்திகள் கூடுமிடத்தை அடைந்து பச்சை விளக்குக்காய் காத்திருக்கிறாள். இவளின் முன்னே நான்கு கார்கள் நிற்க அந்தச் சுழற்சி வீதியில் பல கார்கள் வந்து வளைந்து செல்ல, இது நவீனின் கார் போல இருக்கே. பக்கத்தில் கலா இருக்கிறாள். என்ன நடக்குது! இவர் எனக்கு ஒன்றும் சொல்லாமல் எதுக்கு அவளை ஏற்றிக்கொண்டு போறார் என்று எண்ணியபடி உடனே மீண்டும் அவனுக்கு போன் செய்ய அது அப்பவும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்க மதுவின் மனதில் ஏதேதோ எண்ணங்கள் தோன்றி மறைகிறது.

சைக் எனக்கு முன்னால் வாகனம் இல்லாவிட்டால் பின்னால் போய் பார்த்திருக்கலாம். சீச்சீ நவீன் அப்படிப்பட்டவர் இல்லை என்று மனம் கூறினாலும் நிலைகொள்ளாமலும் அவன் வீடுவந்து சேரும்வரை தவித்தது தான். அவளுக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சியே தொலைந்துபோயிருக்க இரவு அவன் வீடுதிரும்பும் வரை ஒரு வாய் உணவு கூட உள்ளே செல்ல மறுத்தது.

வழமைக்கு மாறாக ஒரு மணிநேரம் பிந்தித்தான் அவன் வந்திருந் தான். அவள் அவசரப்படாமல் அவனுக்கு உணவைப் பரிமாற அவனும் உண்டுமுடித்துக் கைகழுவி வருமட்டும் பொறுமை காக்கிறாள்.

ஏன் நவீன் இண்டைக்கு லேட்?.

கொஞ்சம் வேலைகூட. அதுதான் முடிச்சிட்டு வந்தனான்.

நான் பதினொரு மணிக்கு உங்களுக்கு மூன்றுதரம் போன் செய்தனான். சுவிச் ஓ.ஃப் என்று சொல்லிச்சு.

போன் அடிச்சனீரே. இரவு நான் சார்ச் போட மறந்திட்டன்.

பதினொரு மணி போல சட்டன் சிற்றிப்பக்கம் வந்தீங்களா?

ஓம் மது. உவன் வேணு போன் செய்து கலாவுக்கு கொஸ்பிற்றல்ல ஒரு அப்பொயின்ற்மென்ட் இருக்கு. ஒருக்காக் கூட்டிக்கொண்டு போய் விடுறியோ எண்டு கேட்டவன். அவன் ஏதோ அலுவலா மன்சஸ்ரர் போக வேண்டி வந்திட்டுதாம். நான் முதல்ல மாட்டன் எண்டுதான் சொன்னனான். அவன் டேய் மச்சான் கெல்ப் பண்ணடா எண்டு கெஞ்சினதாலதான் வேற வழியில்லாமல் ஓம் எண்டனான்.

ஏன் கலா சின்னப் பிள்ளையே? அவவுக்குத் தனியப் போக ஏலாதாமா?

நான் நெடுகவே கூட்டிக்கொண்டு போறன். ஒருக்காக் கேட்டான். மறுக்க முடியேல்லை.

போனுக்கு சார்ச் இல்லை எண்டு சொன்னியள். எப்பிடி வேணு போன் செய்தவர்?

அவன் விடிய போன் செய்த உடனதான் போன் நிண்டது. அவன்ர வீடு தெரிஞ்சதால அவன் இத்தனை மணிக்கு எண்டதும் நான் புறப் பட்டிட்டன். என்னை நீர் சந்தேகப்படுறீரோ?

நான் உங்களை சந்தேகப்படேல்லை. ஆனால் உப்பிடி இனிமேல் யாரையும் உங்கட வாகனத்தில ஏத்திக்கொண்டு திரியவேண்டாம். எனக்கு அது பிடிக்கேல்லை.

சரியெடா செல்லம். இனிமேல் உம்மைக் கேட்காமல் எந்த முடிவும் எடுக்கமாட்டன்.

எனக்கு வேலை கிடைச்சிருக்கு. காலை ஒன்பதில் இருந்து பன்னிரண்டு வரை. அந்த நேர்முகத் தேர்வுக்குப் போட்டு சிக்னலில நிக்கேக்குள்ள தான் உங்களைக் கண்டனான்.

ஓ செல்லத்துக்கு வாழ்த்துகள். நீர் கட்டாயம் வேலைக்குப் போக வேணும் எண்டு இல்லை மது. என்ர சம்பளம் தாராளமாய்க் காணும்தானே.

எனக்கு வீட்டில இருக்க போரடிக்குது. பிள்ளையளைப் பள்ளிக்கு விட்டிட்டு நான் சும்மாதானே இருக்கப்போறன். வேலைக்குப் போனால் மனதுக்கு இதமாய் இருக்கும்.

உமக்கு வேலைக்குப் போறது மகிழ்ச்சி எண்டால் நான் தடுக்கேல்லை. என்ஜோய் என்கிறான்.

மதுவுக்கு அவனைப்பார்க்கப் பாவமாக இருக்கு. அவர் எனக்குப் பொய் சொல்லேல்லை. நான் கேட்டது ஓம் என்று சொல்லிட்டார். நான் தான் அவரை வீணா சந்தேகப்பட்டிட்டன் என மனதுள் எண்ணியபடி அவனுடன்

செல்கிறாள்.

நல்ல காலம் நான் மதியம் கலாவைக்கூட்டிக்கொண்டு போனது மதுவுக்குத் தெரியாது என எண்ணி இல்லை என்று பொய் சொல்லியிருந்தால் நல்லா மாட்டுப்பட்டிருப்பன். கடவுள்தான் என்னைக் காத்தது என மனதுள் எண்ணிக் கொள்கிறான்.

***

அதன் பின் நான்கைந்து மாதங்கள் எல்லாமே மகிழ்வாய்தான் போய்க்கொண்டிருந்தன. அவளும் வேலை பிள்ளைகள் சமையல் என பிசியாகிவிட ஒருநாள் வேலை முடிந்து வரும்போது உணவுப்பொருட்களை வாங்குவதற்காக கடைக்குச் செல்லும்போது நவீனின் இன்னொரு நண்பனின் மனைவி சுகியை கடை வாசலில் பார்க்கிறாள். இருவரும் சுகநலம் விசாரித்தபின் “நான் கேட்கிறேன் என்று குறை நினைக்காதையும். எனக்கு உம்மைக் கண்டபிறகு சொல்லாமலும் இருக்கமுடியேல்லை” என்கிறாள் சுகி.

“புதிர் போடாமல் விஷயத்தைச் சொல்லும்” என்கிறாள் மது சிரித்தபடி.

“உமக்கும் நவீனுக்கும் ஏதும் பிரச்சனையா”

“இல்லையே. ஏன் அப்பிடிக்க கேட்கிறீர்”

“சுதனும் நானும் இரண்டுதரம் இதுபற்றிக் கதைச்சனாங்கள். ஆனாலும் என்ன எண்டு தெரியாமல் உம்மோடை கதைக்கிறது எண்டு நான் பேசாமல் விட்டிட்டன்”.

“ஐயோ எனக்கு டென்சனாக்குது. முதல்ல என்ன எண்டு சொல்லும்”

எனக்கு வேணுவின் வைஃப் கலாவைப் பிடிக்கிறேல்லை. ஆனால் அதுக்காக நான் இதைச் சொல்லேல்லை

“என்ன விசயம் எண்டு சொல்லாமல் என்ன பீடிகை. நேரா விசயத்தைச் சொல்லும்”

“சுதன் இரண்டு தடவை கலாவையும் நவீனையும் கண்டவராம். ஒருக்கா சொப்பிங் மோலுக்குள்ள, மற்றத்தரம் பக்கத்து சிற்றியில் உள்ள உணவகத்தில, நவீனைக் கேட்டவராம். அவர் ஏதோ சாக்குப்போக்குச் சொன்னவர் எண்டு சுதன் சொல்ல நீங்கள் உங்கட அலுவலைப் பாருங்கோ என்று நான் சொல்லீற்றன்”

“ஓ அப்பிடியே. சிலவேளை வேணு கேட்டால் கூட்டிக்கொண்டு போறவர்தான். எனக்கும் சொல்லுறவர்”

“எனக்கு ஒண்டும் இல்லை மது. வேணு நல்லவர்தான். ஆனால் கலா சரியில்லை. எதுக்கும் கவனமா இருங்கோ. உங்கட நன்மைக்குத்தான்

சொல்லுறன். நான் வாறன்"

சுகி சென்றபின்னும் மதுவால் அந்த இடத்தை விட்டு நகர விடாமல் கால்கள் இறுகிப்போயின. அடி வயிற்றிலிருந்து எதுவோ உருண்டு பிரண்டு நெஞ்சில் வந்து அடைத்ததுபோல் இருக்க சுவாசத்தை ஐந்துமுறை ஆழமாக இழுத்து காற்றை உள்வாங்கி வெளியே விட மனது சிறிது தளர்ந்ததுபோல் இருக்க, திரும்ப வீட்டுக்குப் போவோமா என எண்ணியவள் வேண்டாம் வந்த அலுவலை முடித்துவிட்டே செல்வோம் என மனதை ஒருநிலைப்படுத்தியபடி கடைக்குள் செல்கிறாள்.

வீட்டுக்கு வந்தபின் பொருட்களை அந்தந்த இடத்தில் அடுக்கி வைத்தபின் மனதைக் குவித்து அவசரப்படவோ கோபப்படவோ கூடாது. என்ன செய்யலாம் என்று யோசித்ததில் முன்னர் இவள் குழந்தை வயிற்றுடன் இருந்தபோது இவளின் பாதுகாப்புக் கருதி இவள் போனிலும் தன் போனிலும் நவீன் லைப் லொகேஷன் போட்டிருந்தான். குழந்தைகள் வளர்ந்தபின் தேவையில்லை என அதை இவளே நிறுத்தி வைத்திருந்தாள்.

மாலையில் அவன் வீட்டுக்கு வந்தபின் குளித்துவிட்டு வந்துதான் பிள்ளைகளுடன் விளையாடுவான். வெளியில் பல இடங்களுக்கும் செல்வதனால் பிள்ளைகளுக்கு நோய் தொற்று ஏற்படக் கூடாது என்பான். அத்தனை கவனம் குடும்பத்தின் மேல். அவன் வாங்கிக்கொண்டு வரும் சொக்ளற் மற்றும் விளையாட்டுப் பொருட்களுக்காக மட்டுமன்றி அவனிட முள்ள அதீத விருப்பத்தில் எப்ப அப்பா வருவார் என்று இரு குழந்தைகளுமே தாயைக் கேட்டுக்கொண்டே இருப்பார்கள்.

இன்று அவன் வந்ததும் எதையும் முகத்தில் காட்டிக்கொள்ளாது குளிச்சிட்டு வாங்கோ என்று துவாயைக் கொடுத்துவிட்டு அவன் உள்ளே சென்றதும் அவனது போனை எடுத்து லைப் லொகேசனை அக்ரிவ் ஆக்கி விட்டு திரும்ப வைத்துவிட்டு இருந்துவிட்டாள். அவனுடன் எதுவுமே நடக்காததுபோல சிரித்துக் கதைத்துவிட்டு தான் எத்தனை பொறுமையுடன் நவீனின் விடயத்தை கையாள்கிறேன் என்று தன்னைத்தானே மனதுள் மெச்சிக்கொள்கிறாள்.

அடுத்து இரண்டு நாட்கள் கண்காணித்ததில் அவன் வீட்டுக்கும் வேலைக்குமாகத்தான் செல்வது தெரிய சுகியின் கதையைக் கேட்டு நான்தான் வீணாக நவீன் மேல் சந்தேகப்பட்டுவிட்டேனோ என்ற சந்தேகம் கூட எழுகிறது அவளுக்கு. ஆனால் மூன்றாம் நாள் மதியம் அவனின் கார் வேணுவின் வீட்டு லொகேசனில் நிற்பது தெரிய மனதில் இனம்புரியாத குழப்பமும் கோபமும் எழுந்ததுதான். ஆனாலும் அங்கு வேணுவிடம் கூடப் போயிருக்கலாம் என்ற எண்ணம் எழ பதட்டப்படாது தொடர்ந்தும்

கவனிக்கலானாள். அடுத்த இரண்டு நாட்கள் எதுவுமற்றுக் கழிய அதற்கு அடுத்தநாள் வீட்டில் இருந்து புறப்பட்ட கார் நேரே வேணுவின் வீட்டுக்குச் சென்றது மட்டுமன்றி கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் அந்த இடத்திலேயே நிற்க, இவளின் சந்தேகம் வலுக்க ஆரம்பித்தது.

அவசரப்பட்டு அவனை எதுவும் இப்ப கேட்டுவிடக் கூடாது என எண்ணியவள், அதற்கேற்றாற்போல் தன் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டாள். நவீனைக் கவனித்ததில் அவன் சாதாரணமாகத்தான் இருக்கிறான். ஆனாலும் யாரையும் நம்பமுடியாது என அவள் மனம் சொல்ல, தொடர்ந்தும் கண்காணிக்க இரு வாரங்களாக மதிய நேரத்தில் அவனின் கார் வேணுவின் வீட்டுக்குச் செல்வதும் போவதுமாக இருக்க இன்று அவனை அதுபற்றிக் கேட்பதென முடிவெடுத்துக் காத்திருக் கிறாள்.

வழமைபோல் அவன் குளியல் அறைக்குச் செல்ல அவனின் போனை எடுத்து லைப் லொகேசனை நிற்பாட்டிவிட்டு அவன் கதைத்த தொலைபேசி இலக்கங்களை பார்த்தபோது பெயர் இல்லாது ஒரு தொலை பேசி இலக்கம் பல தடவை அவனுக்கு வந்திருக்க, அந்த இலக்கத்தை அழுத்தி யார் என்று கேட்போமா என இவள் நினைத்த வேளை மீண்டும் அந்த போன் உயிர்பெற கலோ என்று பெண் குரல் ஒன்று கேட்கிறது. உடனே யார் நீங்கள் என்று கேட்போமா என்று எண்ணியவள் வேண்டுமென்றே மௌனம் காக்க, அந்தபக்கம் போன் கட்டாகிவிட இவள் போனை வைத்து விட்டு சமையல் அறைக்குச் சென்றுவிடுகிறாள்.

நவீன் உணவு அருந்தி முடிய பிள்ளைகளுடன் விளையாடி அவர்களும் களைப்புடன் தூங்கச் சென்ற பிறகு என்ன நவீன் வேணு வீட்டுக்கு அடிக்கடி உங்கட கார் போய்வருதாம். சிலபேர் பார்த்திட்டு எனக்கு போன் பண்ணிச் சொல்லிச்சினம் என்கிறாள்.

அவனின் கண்களில் ஒரு திடுக்கிடல் தெரிய உடனேயே தன்னை இயல்பாக்கிக்கொண்டு அவனும் நானும் ஒரு புரொஜெக்ட் சேர்ந்து செய்யிறம். அதுதான் அவனைச் சந்திக்க அவன் வீட்டுக்குச் செல்ல வேண்டியதாப் போச்சு என்கிறான். ஓ அப்பிடியா என்றுவிட்டு அவள் ஏதும் பேசவில்லை. உங்கள் போன் றிங் பண்ணினது. துவா எடுத்திட்டா. ஏன் அப்பாவின் போனை எடுத்தீங்க என்று அவவை ஏசீற்று இனிமேல் எடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறன். சொல்லிவிட்டு கட்டிலில் அமர அவன் பதைப்புடன் போனை எடுத்துப் பார்த்துவிட்டு, புது இலக்கமாக இருக்கு. யார் என்று தெரியேல்லை. காலமைதான் அடிச்சுப் பார்க்கவேண்டும் என்கிறான். அந்த இலக்கத்தில் இருந்து பலதடவைகள் போனில் பேசப்பட்டிருப்பது

தனக்குத் தெரியாது என்று நினைத்துக் கூறுகிறான். தீர விசாரிக்காது கதைப்பது சரியல்ல என எண்ணி மனதை அடக்கியபடி அடுத்தநாள் விடியலுக்காகக் காத்திருந்தாலும் எப்படி அதை அறிந்துகொள்வது என்று மனம் விடாப்பிடியாக யோசிக்க அவளுக்கு ஒரு வழி புலப்படுகிறது.

காலை எழுந்து இயல்பாக எல்லாவற்றையும் செய்து நவீனுக்கு உணவும் கட்டிக் கொடுத்து அவனுக்குத் தெரியாமல் வேணுவின் தொலைபேசி இலக்கத்தை எடுத்துவிட்டு மீண்டும் தொலைபேசியை அவன் வைக்குமிடத்தில் வைத்து சிரித்த முகத்துடன் அவனை வழியனுப்பி வைத்து விட்டு யன்னலில் நின்று அவன் போவதை உறுதி செய்துவிட்டு உடனே வேணுவின் இலக்கத்தை அழுத்துகிறாள்.

மூன்று நான்கு தடவை போன் அடிக்கும் சத்தம் கேட்டும் அவன் எடுக்கவில்லை. விடாமல் தொடர்ந்தும் அடித்துக்கொண்டிருக்க மூன்றாம் தரம் தொலைபேசி எடுக்கப்பட்டு கலோ என்று கிணற்றுக்குள் இருந்து கதைப்பதுபோல் குரல் கேட்கிறது.

“வேணுவா கதைக்கிறீர்கள்?”

“ஓம் நான்தான் நீங்கள் யார்?”

“சொறி நீங்கள் இன்னும் எழும்பவில்லைப் போல. நான் நவீனின் வை.்.ப் மது”

“ஓ ஓ சொறி போனில் நாங்கள் கதைக்காதபடியால் உங்கட குரல் விளங்கேல்லை. ஏதும் அவசரமோ?

“உங்கட வை.்.ப் கலாவிட போன் நம்பர் வேணும்”

“ஓ நான் உங்களுக்குப் போட்டுவிடுறன். நவீன் உங்களுக்குச் சொல்லேல்லையா? நான் இப்ப ஒரு வாரமாக் கனடாவில நிக்கிறன். நாளையிண்டைக்கு வந்திடுவன்”

“எனக்கு அவர் சொல்ல மறந்திட்டார். சரி நீங்கள் போட்டுவிடுங்கோ”

போனை வைத்தவுடன் அவளுக்கு ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று புரிய நெஞ்செங்கும் எரிகிறது. நவீன் நல்லவர்தான். அந்தக் கலாதான் வலியப் போய் அவர் மனதைக் கெடுத்திருப்பாள். அவசரப்படவே கூடாது. இன்னும் கொஞ்சம் பொறுமையாய் இரு என மனம் கூற என்ன செய்வது என்று பலவாறு யோசித்தும் விடை கிடைக்காது பிள்ளைகளை எழுப்பி அவர்களுக்கு எல்லாம் செய்து பள்ளிக்குக் கொண்டுசென்று விட்டபின் தன் வேலையில் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று விடுப்பு எடுத்துவிட்டு வந்து கட்டிலில் சரிய, கோகிலா அக்கா தொலைபேசியில் அழைக்கிறார்.

ஆரம்பத்தில் நவீன் இந்தக் கோகிலா குடும்பத்துடன் தான் வசித்தது. குழந்தைகள் பிறந்தபின்னர் அவர்கள் வீட்டுக்குப் போவது குறைந்

தாலும் அவர்களுடனான உறவு பலமாகவே இருந்தது. நாளை அவர்கள் மகளுக்குப் பிறந்தநாள். அதனால் மாலை அந்நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள் என்று உரிமையுடன் கோகிலா அழைக்க சரி என்கிறாள். நவீன் வந்தவுடன் கோகிலா அக்காவின் அழைப்பு பற்றிக் கூற முதலில் ஏதோ எண்ணியவன் பின் “நீர் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போம். நான் வேலை முடிய அப்பிடியே வாறன்” என்கிறான்.

அடுத்தநாள் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு இவள் முன்னரே செல்ல அங்கு இன்னும் இவளுக்குத் தெரிந்த சிலரும் தெரியாதவர்களும் இருக்கின்றனர். மற்றவர்களுடன் கதைத்துக்கொண்டே அப்பப்ப தொலை பேசியில் பார்க்கிறாள். காலையில் திரும்பவும் நவீனின் தொலைபேசியில் லை:.ப் லொக்கேசனை அக்ரிவ் ஆக்கியிருந்தாள். நவீனின் கார் இன்று பகல் எங்குமே செல்லாமல் நேரே வேலையிடத்துக்குச் சென்று நின்றதுதான். ஆனால் இப்ப பத்து நிமிடத்துக்கு முன்னர்தான் மீண்டும் கிளம்பி வேணு வின் வீடு இருக்கும் பக்கமாகச் செல்லத் தொடங்க இவளுக்கு மனம் பரபரப்பாகிறது.

உடனே நவீனுக்குப் போன் செய்ய நான் வேலையில் தான் நிற்கிறன். இன்னும் அரை மணித்தியாலத்தில் வந்திடுவன். நீர் போட்டீரோ என்கிறான். நான் இப்பதான் வந்தனான். எல்லாரும் வந்திட்டினம் கெதியா வாங்கோ என்றுவிட்டு மற்றவர்களுடன் கதைத்துக்கொண்டு இருந்துவிட்டு அரை மணி நேரம் செல்ல மற்றவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் மகனிடம் “அம்மா ஒருக்கா வெளியே போட்டு உடன வாறன். தங்கச்சியைப் பார்த்துக் கொள்ளுங்கோ” என்றுவிட்டு தன் காரின் பின் இருக்கையில் அமர்ந்து வீதியைப் பார்த்தபடி இருக்க, ஒரு ஐந்து நிமிடத்தின் பின் நவீனின் கார் வருவது தெரிகிறது.

இரவு ஏழு மணியாகிவிட்டதில் இருள் எங்கும் சூழ்ந்திருக்க கண் களைப் பூதக்கண்ணாடியாக்கிப் பார்த்துக்கொண்டே இருக்க நவீனின் காரின் பின் கதவைத் திறந்து கலா இறங்கி அக்கம்பக்கம் ஒருமுறை பார்த்து விட்டு கடகடவென கோகிலா அக்கா வீட்டுக்குச் செல்ல நவீன் காரிலேயே இருக்கிறான். இவள் நினைத்ததுதான் அங்கு நடந்துகொண்டிருக்க இவளும் அசையாது பார்த்துக்கொண்டிருக்க, சிறிது நேரத்தில் நவீனும் இறங்கி உள்ளே செல்ல, இவளும் இறங்கி காருக்குள்ளேயே வைத்துவிட்டு வந்த பரிசுப் பொதியை எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிறாள்.

இவளைக் காணாமல் தேடிக்கொண்டிருந்தவன் பிள்ளைகள் ஓடிவந்து அப்பா என்று கட்டிக்கொள்ள அவர்களைத் தூக்கி மடியில் வைத்துக்கொள்ள இவளும் வர சரியாக இருக்கிறது. சாப்பிட ஏதும் கொண்டு

வரவா என்கிறாள் நவீனைப் பார்த்து. இப்ப வேண்டாம் என்று அவன் கூறும்போதே கோகிலா அக்கா பலகாரத் தட்டுடன் வந்து இவனுக்கும் கொடுத்துவிட்டு அந்தப் பக்கம் இருந்த கலாவுக்கும் கொடுக்கிறார்.

அவர்கள் இருவரையும் கண்காணித்தபடியே இவளும் இருக்கிறாள். கலாவோ அவனோ ஒருவரையொருவர் பார்க்கக்கூட இல்லை. நல்லா நடிக்கிறீர்கள் என இவள் மனம் எண்ணிக்கொள்கிறது. பிறந்தநாள் கேக் வெட்டி எல்லாரும் சேர்ந்து பாட்டுப்பாடி.. பிள்ளைகள் எல்லோரும் குதூகல மாக இருக்கின்றனர். கோகிலாவின் வீட்டு வரவேற்பறை மிகப் பெரியது. அதனால் சிறுவர்கள் எல்லோருக்கும் சங்கீதக் கதிரை விளையாட வருமாறு அழைக்க அவர்களும் ஆரவாரித்தபடி ஓடிவருகின்றனர். சிறுவர்கள் விளை யாட பெற்றோர் தாங்களே விளையாடுவதாய் எண்ணி அவர்களை உற்சாகப் படுத்த விளையாட்டு சூடு பிடிக்கிறது. கடைசியில் இவர்கள் மகனே வெற்றி பெற இவள் மகிழ்ச்சியில் மகனைக் கட்டி அணைத்து முத்தமிடுகிறாள். நவீனும் அதையே செய்ய இவள் நிமிர்ந்து பார்க்கும்போது இவர்களையே பார்த்தபடி இருந்த கலா உடனே தலையைத் திருப்பிக்கொள்ள மதுவுக்கு சிரிப்பு வர அடக்கிக் கொள்கிறாள்.

அடுத்து “பெரியாக்களுக்கும் சங்கீதக் கதிரை உண்டு” என்று ஒருவர் கூற கோவெனச் சிலர் ஆர்ப்பரிக்க, வேண்டாம் நான் வரமாட்டான் என்றும் கட்டாயம் எல்லாரும் விளையாடவேணும் என்றும் மாறிமாறிக் குரல் ஒலிக்க ஆர்வமுள்ள பலரும் வந்து கதிரைகளுக்கு முன்னால் நிற்கிறார்கள். இவள் நவீனைப் போகச் சொல்ல நவீன் நீரும் வாரும் என்கிறான். நீங்கள் விளையாடுங்கோ. நான் வரேல்லை என்று ஒதுங்க ஆண்களும் பெண்களும் கலந்து நிற்க கலாவும் வந்து நிற்கிறாள்.

பாட்டைப் போட்டவுடன் சிறு பிள்ளைகளின் குதூகலத்துடன் பெரியவர்கள் கதிரை பிடிப்பதில் குறியாக இருக்கின்றனர். இத்தனைக்குப் பிறகுகூட மது நவீன் வெல்லவேண்டும் என மனதில் எண்ணியபடி அவனை உற்சாகப்படுத்த பிள்ளைகளும் சேர்ந்து ஆரவாரம் செய்கின்றனர். கலா அவுட் ஆகவேணும் என மது மனதில் நினைத்தது நடக்காது கடைசியில் எல்லாரையும் பின்தள்ளி நவீனும் கலாவும் மட்டும் கதிரையை சுற்று கின்றனர். எல்லோரும் பலமாகக் கை தட்டி ஆரவாரிக்க அவள் வெல்லக் கூடாது எனக் கடவுளை வேண்டியபடி நிற்க, இசை நின்றுபோகிறது.

கலா கதிரையில் இருக்க எத்தனிக்க நவீன் அவளைத் தள்ளிவிட்டுத் தான் இருக்க முயல அவளும் விடாமல் இருக்க எத்தனிக்க எல்லாம் ஒரு நிமிடத்தில் நடந்துமுடிந்திருக்க நவீனின் மடியில் கலா இருப்பதைக் கண்ட மதுவின் தலையில் இடிவிழுந்தது போலாகி அவமானத்திலும் கோபத்திலும்

முகம் வெடிப்பது போலாகி நவீன் என்று அவள் கத்திய கத்தில் நவீன் கலாவை அணைத்துப் பிடித்தபடி இருந்த கையை அகற்ற, கலாவும் எழுந்து கொள்கிறாள். அங்கு அப்படி ஒரு அமைதி. தலை குனிந்தபடி நவீனும் செய்வதறியாது சொறி மது என்கிறான். மது இரு பிள்ளைகளின் கைகளைப் பிடித்துக்கொண்டு விடுவிடுவென அங்கிருந்து வெளியேறி காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவள்தான். அதன்பின் நவீனை வீட்டுக்குள் விடவே இல்லை.

அதன்பின் கோகிலா அக்காதொட்டு இன்னும் சிலரும் கூட அது விளையாடும்போது வெல்லவேணும் என்று நிகழ்ந்தது. அதைப் பெரிது படுத்தாதேயும் என்று எத்தனையோ சொல்லிப் பார்த்தும் மதுவின் மனம் அசையவே இல்லை. நவீன் பள்ளிக்கூட வாசலில் வந்து நின்று இவளிடம் கெஞ்சிப் பார்த்ததும் பயனில்லை. விவாகரத்துக்குப் பதிந்து இவளின் பெண் லோயர் மேலதிக ஆதாரங்களைக் கேட்டபோதுதான் தான் அத்தனை நாட்கள் பத்திரப்படுத்தியிருந்த அவனும் கலாவும் வற்சப்பில் பரிமாறிய செய்திகளை அவளிடம் கொடுக்கிறாள்.

அவளுக்கு அவனிடமிருந்து விடுதலை கிடைத்துவிடும். ஆனால் வாரத்தில் இரண்டு நாட்கள் பிள்ளைகளை அவனிடம் விடும்படி அல்லது அவன் பார்த்துவிட்டுப் போக கோட் அனுமதிக்கும்தான். ஆனாலும் அவன் கண்ணில் படாமல் எப்படிப் பிள்ளைகளை வளர்ப்பது என்பதிலேயே அவள் சிந்தனை எல்லாம் செலவழிய அலங்கோலமாகிப் போயிருக்கும் அழகிய தோட்டத்தைப் பெருமூச்சுடன் பார்த்துக்கொண்டு நிற்கிறாள் மது.

# மன வாழ்வு

வழமைபோலவே காலைக் கதிரவன் குதூகலத்துடன் தன் கதிர்பரப்பிப் பூமியின் வெப்பத்தை அதிகரிக்க ஆரம்பித்துவிட்டான். இரண்டு நாட்கள் பெய்த கடும் மழையில் நிலமும் மரங்கள் செடிகளும் மகிழ்வுடன் காலை வெய்யிலை வரவேற்றுக் குதூகலிக்க ஜீவாவின் மனம் மட்டும் மகிழ்விழந்து போர்களமாகி எதிரும் புதிருமான நிகழ்வுகளை அசைபோட்டு சலிப்படைந்திருந்தது. இனியும் நான் இப்படியே இருக்கமுடியாது. எனக்கும் ஒரு வாழ்வு இருக்கிறது. கானல் நீரை நம்பி எத்தனை நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் காத்திருப்பது?? பண்பாடு கலாசாரம் எல்லாம் முக்கியம் தான். ஆனால் அவற்றுக்காக என் வாழ்க்கையை நான் வாழாது ஏன் சமூகத்துக்குப் பயந்து காலத்தை வீணடிக்கவேண்டும். இப்பவே வயது முப்பதாகிவிட்டது அரைவாசி இளமையைத் தொலைத்தாகிவிட்டது. இனியும் அம்மா, அப்பா, அயலட்டை எண்டு பார்ப்பது என் விசர்த்தனம்.

இன்றே ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திடவேணும் என்று எண்ணியபடி கட்டிலை விட்டு எழுந்தாள் ஜீவா.

தாயார் சமையலறையில் சம்பல் செய்துகொண்டிருப்பது சம்பல் வாசத்திலேயே தெரிந்தது. தானும் வெள்ளண எழுந்து தாய்க்கு உதவி செய்யாததை இட்டு மனதிலொரு குற்ற உணர்வும் எட்டிப்பார்த்தது. ஆனாலும் அவளின் பிரச்சனை அதைவிடப் பெரிதே என்றும் திரும்பக் கேள்வி கேட்டது. அம்மாவிடம் விஷயத்தைக் கதைத்துப் பார்ப்போமா என்று எண்ணினாலும் ஒரு தயக்கமும்

இருந்துகொண்டேதான் இருந்தது.

எதற்கும் வாகீசனிடம் கதைத்துவிட்டே பெற்றோருடன் கதைக்கலாம் என்று எண்ணியபடி குளியலறைக்குள் புகுந்துகொண்டாள் ஜீவா. வாகீசன் இவளிடம் அக்கறை கொண்ட ஒரு நல்ல நண்பன். சிறுவயது முதலே இருவரும் ஒன்றாகப் படித்ததில் உரிமையுடன் அவள் வீடுவரை வந்து கதைக்கும் உரிமையும் பெற்றவன்.

முன்னர் பொதுக் கிணற்றடியில் இவர்கள் வளவுக்குள் கட்டியிருக்கும் தொட்டியில் மோட்டார் போட்டு நீர் நிரப்பிக் குளிப்பது. அறை யுடன் சேர்ந்த இந்த பாத்ரூம் ரொய்லற் கட்டி எட்டு ஆண்டுகள் தான். அதுவும் இவள் திருமணம் முடிவானதும் வெளிநாட்டிலிருந்து வரும் மாப்பிள்ளைக்கு வசதியாக இருக்கட்டும் என்று தந்தைதான் கட்டுவித்தது. அப்பவே 75 ஆயிரம் ரூபா முடிந்தது. அப்பாவுக்கு காசுப் பிரச்சனை இருக்கேக்குள்ள இது தேவைதானா என இவளும் ஆரம்பத்தில் வேண்டாம் அப்பா என்று சொல்லிப் பார்த்தாள் தான். ஆனாலும் அது வெளிநாட்டில பிறந்த பிள்ளையாம். வந்து மூன்று மாதங்கள் நிக்கேக்குள்ள நின்மதியா மலசலம் கழிக்க வேணுமெல்லோ என்றவுடன் இவளுக்கும் சரி என்று பட பேசாமல் இருந்து விட்டாள். இன்றுவரை அவள் அறையுடன் சேர்த்துக் கட்டியதை இவளைத் வேறு யாரும் பயன்படுத்துவதில்லை.

நினைவுகளைக் கலைத்துவிட்டு குளித்து முழுகி வேலைக்குப் போவதற்கான சேலையையும் கட்டிக்கொண்டு குசினிக்குள் எட்டிப் பார்த்தாள். இவளின் குரல் கேட்குமுன்னரே இவள் வருகையை உணர்ந்த தாய் இடியப்பம் போட்ட தட்டை இவளுக்கு நீட்ட, இவள் வாங்கிக்கொண்டு மேசையில் போய் அமர்ந்து சம்பலைத் தொட்டு உண்கிறாள். சொதி கொஞ்சம் விடட்டே என்று தாய் கேட்க, ஓம் என்று தலையாட்டுகிறாள். உரல்ல இடிச்ச சம்பலும் சொதியும்... அதன் சுவைக்கு ஈடில்லை என மனம் சொல்கிறது.

பின்னாலேயே இவளின் சாப்பாட்டுப் பெட்டியைக் கொண்டு வந்து இவளருகில் வைத்தபடி “உருளைக்கிழங்குப் பிரட்டலும் முட்டையும் பொரிச்சு வச்சிருக்கிறன்” என்கிறார் தாய்.

“நீங்கள் கஷ்டப்படாதேங்கோ எண்டு எத்தனை தரம் சொல்லிப் போட்டன். பாங்குக்குப் பக்கத்தில எத்தினை சாப்பாட்டுக்கடை இருக்கம்மா. அங்க வாங்கிச் சாப்பிடுவன் தானே” என அலுத்துக்கொண்டாள்.

இவள் வேலை செய்வது வங்கி ஒன்றில். ஒரு மணிநேர பிரேக்கில்

அருணுடன் வெளியே சென்று உண்பது இப்போதெல்லாம் அவளுக்கு மனத்துக்குப் பிடித்ததொன்றாகி இருந்தது. அதற்குள் அம்மா சாப்பாடு தந்து அதை வீணாகக் கொட்டிவிட்டு சாப்பிட்டதாக அம்மாவுக்கு நடிக்கவேணும் என்று எண்ண உணவு விரயமாகிறதே என்பதுடன் அம்மாவை ஏமாற்று கிறோம் என்னும் குற்ற உணர்வும் சேர்ந்துகொள்ள, தயவுசெய்து இனிமேல் எனக்குச் சாப்பாடு கட்ட வேண்டாம். கட்டினாலும் நான் கொண்டுபோக மாட்டன். ஆறின சாப்பாட்டைச் சாப்பிட ஏலாதம்மா என்று கூறுபவளை பெரு மூச்சுடன் பார்த்துவிட்டு தாய் அகன்றாள்.

தந்தை தோட்டத்து மரக்கறிகளைச் சந்தைக்கு கொண்டுபோய் விற்று விட்டு வீட்டுக்கு வரப் பத்துமணி ஆகும். தான் வெளிநாடு சென்றலா வது அப்பாவைத் தோட்டம் செய்யாதேங்கோ என்று சொல்லலாம் என்று இவள் எண்ணியிருந்ததெல்லாம் கனவாகவே போய்விட்டதே என எண்ணியவுடன் துக்கமும் வந்து நெஞ்சை அடைப்பதுபோல் இருக்க “என்ன அக்கா கிளம்பீடியே” என்றபடி வந்த தங்கைக்கு “ஓம்” என்று மட்டும் சொல்லிக்கொண்டு தன் ஸ்கூட்டியை வெளியே எடுத்து அதைக் கிளப்பி விட்டு ஏறி அமர்ந்தாள்.

***

தினேசின் படத்தை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஜீவா. பார்க்கப் பார்க்க உணர்வுகள் கட்டுக்கடங்காமல் ஓடின. இன்னும் பத்தே பத்து நாட்களில் அவளுக்கும் தினேசுக்கும் திருமணம். இரண்டு நாட்களில் தினேஷின் குடும்பம் வெளிநாட்டிலிருந்து வருகின்றனர். இவள் பெற்றோருக்கு அளவில்லாத மகிழ்ச்சிதான். வெளிநாட்டில் பிறந்த பெடியன். பொருத்தம் பாக்கிற விநாசித்தம்பியர் தான் இவரைக் கோவிலில் கண்ட போது கேட்டது. கொக்குவில் மாப்பிளை ஒண்டு வந்திருக்கு. தாய் தகப்பன் வெளிநாட்டில. ஒரேயொரு தங்கச்சி. அதுவும் கலியாணம் கட்டீட்டுதாம். நல்ல ஆக்கள். பெடிக்கு முப்பது வயது. சோலி சுரட்டில்லை என்றதும் கணபதிப்பிள்ளைக்கும் ஆசை எட்டிப்பார்த்ததுதான். என்ர மகளுக்கு 23 தான் அண்ணை. வயது கொஞ்சம் கூடிப்போச்சுப் போல என்று இழுக்க, நல்ல சம்பந்தம் எண்டதாலைதான் உனக்குச் சொன்னனான். வெளிநாட்டு மாப்பிளைக்கு உங்க கியூவில் நிக்கிது சனம். எனக்கும் மனிசிக்கும் 12 வயது வித்தியாசம். நாங்கள் சந்தோசமா வாழேல்லையே? ஏழு வயதெல்லாம் ஒரு பிரச்சனையே என்றார்.

விநாசித்தம்பியரின் முகத்தை முறிக்காமல் எதுக்கும் பிள்ளை ஓம் எண்டால் எனக்குப் பிரச்சனை இல்லை. நான் பிள்ளையிட்டையும்

மனிசியிட்டையும் கதைச்சிட்டு நாளைக்கு முடிவைச் சொல்லட்டோ என்று கேட்க, நாளைக்குச் சொல்லிப்போடு. தவறினால் என்னைக் குற்றம் சொல்லக் கூடாது சொல்லிப்போட்டன் என்றபடி விநாசித் தம்பியர் செல்ல, எதுக்கும் இதை விடக்கூடாது என்று மனதில் எண்ணியபடி வீட்டுக்கு வந்த கணபதி, மனைவியைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்கிறார். வெளிநாட்டுச் சம்மந்தம் எண்டால் ஏன் விடுவானப்பா? சாதகத்தை உடன கொண்டுபோய் சாத்திரியிட்டைக் குடுங்கோ என்றவுடன், “எனக்கும் உனக்கும் எட்டு வயது வித்தியாசம். உன்ர கொப்பர் ஏமாத்திக் கட்டி வச்சிட்டார் என்று நீ அப்பப்ப எனக்குச் சொல்லுறணியெல்லோ. அதுதான் இது ஏழு வயது வித்தியாசம். எதுக்கும் பிள்ளையிட்டைக் கேட்டிட்டு சாதகத்தைக் குடுப்பம்” என்கிறார்.

எந்த நேரத்தில என்ன கதைக்கிறது எண்டில்லை. முதல்ல சாதகத்தைக் குடுங்கோ. பொருத்தம் எண்டால் பெடியின்ர படத்தைக் கேளுங்கோ. ஜீவான்ர படத்தையும் குடுப்பம். பெடியனும் ஓமெண்டால் பிறகு இவளிட்டைக் கதைச்சு சம்மதிக்க வைக்கிறது என் பொறுப்பு என்று கோமதி கூறியவுடன் எல்லாம் கடகடவென்று நடந்து முடிந்து, போனிலும் ஒரு மாதமாக இருவரும் பேசி, இன்னும் இரண்டுநாளில் தினேசை நேரில் பார்க்க லாம் என்றவரை வந்துநிற்க, எப்ப அந்த நாள் வரும் என்ற ஆசையுடன் காத்திருக்கிறாள் ஜீவா.

இரண்டு நாட்களில் தினேசின் பெற்றோரும் தங்கையும் காரில் வந்திறங்க, இவள் கதவோரத்தில் நின்று துடிப்புடன் பார்க்கிறாள். அவனின் கண்களும் இவளைத் தேடிக் கண்டு கொண்டதில் மகிழ்ச்சி மனதை நிறைக்க, அவர்களை உள்ளே வரும்படி பெற்றோர் அழைத்துவர, அவர் களின் இயல்பு எல்லோருக்கும் பிடித்துப் போகிறது. அதன்பின் திருமணம் வரையும் அவன் போனில் இவளுடன் பேசுவதோடு நிறுத்திக் கொள்ள, அவன் தன்னை வந்து பார்க்க ஆசை கொள்ள மாட்டானா என இவள் மனம் ஏங்குகிறது. மீண்டும் இவள் அவனைப் பார்த்தது திருமணத் தன்றுதான். இவர்கள் ஊர் அம்மன் கோவிலில் திருமணம் நடந்து ஒரு வாரத்தின் பின்னர் அவனின் பெற்றோர் திரும்ப வெளிநாடு போனபின்னர் தான் இவளால் இயல்பாக இருக்க முடிந்தது. அவனின் பெற்றோர் போனபின்னர் தான் இவனும் அவளுடன் கொஞ்சம் ஆசையாக இருந்தது.

அந்த மூன்று மாதங்கள் இருவரும் சினிமா, கசோரினாக் கடற்கரை, காங்கேசன்துறைக் கடற்கரை, பூங்கா என்று போனதும் குளித்ததும், வீட்டுக்கு தொலைக்காட்சி, குளிரூட்டி எல்லாம் வாங்கிக்கொடுத்து இவளை மகிழ்வித்ததும் அவள் வாழ்வில் மறக்க முடியாத நாட்கள்.

இவள் இன்று வங்கிக்கு வந்ததும் ஆர்வமாக கண்கள் அருணைத் தேடின. அவன் நேரம் தவறாதவன். ஒருநாள் கூடப் பிந்தி வந்ததில்லை. இன்று அவள் தன் முடிவைக் கூறுவதாகவும் சொல்லியிருந்தாள். ஆனால் அவன் ஏன் இன்னும் வரவில்லை என்னும் கேள்வி மனதைப் பிசைய வைத்தது. அவனுக்குப் போன் செய்தபோது போன் கூட நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது.

ஏதேதோ எண்ணி மனம் பரபரப்பும் பயமும் கொண்டது. ஏதும் விபத்து ஏற்பட்டுவிட்டதோ? அவனின் நண்பன் ரவியைக்கூடக் காணவில்லை. இருவரும் எங்காவது போய்விட்டார்களோ என்று மனம் எண்ண, சரி பார்ப் போம் என்று எண்ணியபடி வேலையில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள். ஆனாலும் ஒவ்வொரு நிமிடமும் அருணின் வருகையின்மை மனதுள் எத்தனையோ சந்தேகங்களை எழுப்பியபடியேதான் இருக்க வலிந்து மனதைத் திடப்படுத்தி வேலையைச் செய்துகொண்டிருந்தாள்.

மதிய உணவு வேளையில் அருண் இல்லாமல் அம்மாவின் உணவும் இல்லாமல் தனியாக வெளியே சென்று கடையில் உண்பதற்கு மனமின்றி மீண்டும் ஒருமுறை அருணுக்குத் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினாள். இம்முறை அவனின் தொலைபேசி ஒலித்தது. ஆனால் அவன் எடுக்கவில்லை.

என்ன நடந்தது இவனுக்கு? என் அழைப்புக்குக் கூடப் பதில் இல்லை என்று எண்ணியவளாய் மீண்டும் தன் வேலையில் கவனம் செலுத்த ஆரம்பித்தாலும் மனம் ஒத்துழைக்க மறுத்தது. இத்தனை ஆசையாக என் முடிவை அருணுக்குச் சொல்லுவோம் என்று வந்தால் அவன் ஏமாற்றி விட்டானே என்று அவனில் கோபமும் ஏற்பட வேறு வழியே இன்றித் தன் வேலையில் மனதைத் திருப்ப முனைந்தாள்.

உணவு இடைவேளையின் பின்னரே அருணின் நண்பன் ரவி வந்து சேர்ந்தான். இவளைக் கண்டவுடன் மகிழ்வாய் வணக்கம் சொல்பவன் இன்று இவளைக் காணாததுபோல் அப்பால் செல்ல இவளுக்கு ஏன் இவனும் என்னைக் கடுப்பேற்றுகிறான் என்று எண்ணியபடி

“ரவி! ஏன் இன்று காலை உங்களைக் காணவில்லை. உங்கள் நண்பரையும் காணவில்லை. பார்த்தும் பார்க்காததுபோல் செல்கிறீர்கள்” என்றாள் ஆதங்கத்துடன்.

“ஏதோ யோசனையில் உன்னைக் கவனிக்கவில்லை ஜீவா” என்றவன் கதிரையில் அமர “ஏன் அருண் இன்று வேலைக்கு வரவில்லை”

என்கிறாள்.

“அவன் உன்னிடம் கூறவில்லையா? இன்று மாலை அவனுக்கு கலியாணம் நிட்சயம் செய்யப் போகிறார்கள். அதுதான் பெண்ணுக்குச் சேலையும் ஒரு சங்கிலியும் வாங்கவேணும் என்று என்னையும் வரச் சொன்னவன். அங்க போட்டு இப்பத்தான் வாறன்” என்று அவன் கூற, “ஓ” என்று ஒற்றைச் சொல்லில் கூறிவிட்டு தான் இருக்கைக்கு வந்தவளின் கண்களில் அவளை அறியாது கண்ணீர் முட்டுகிறது.

மற்றவர் பார்க்காதிருக்க தன் லேஞ்சியினால் கண்களைத் துடைத்துக் கொண்டவளுக்கு எப்படித் தன்னை அடக்கிக்கொள்வது என்று இருந்தது. மனம் எங்கும் வெறுமை சூழ்ந்து நெஞ்சக் கூட்டில் எதுவுமே இல்லாதது போல் தோன்ற ரொயிலற்றுக்குள் போய் அழுதுவிட்டு வர வேண்டும் போல இருந்த எண்ணத்தையும் அடக்கிக்கொண்டு முன்னா லிருந்த கணனியைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

எலியைப் பற்றியிருந்த கைகள் தொய்ந்துவிட்டதாகத் தோன்ற இரு கைகளையும் சேர்த்துப் பிசைந்து வலுவேற்றிக்கொண்டாள். ஆனாலும் தொய்ந்துபோயுள்ள மனதையும் கால்களையும் எப்படித் தேற்றுவது என்று ஒன்றும் புரியவில்லை.

கடைசியில் என்னிடம் சும்மாதான் பழகினானா அருண்? நான் தான் தேவையில்லாமல் அவன் என்னிடம் காதலாய் இருக்கிறான் என்று எண்ணிவிட்டேனா? இல்லையே என்னைப் பார்த்ததும் அவன் கண்களில் ஏற்படும் மலர்வு பொய்யில்லையே.

“உப்பிடியே எத்தனை நாளைக்கு தினேஷ் வருவான் வருவான் என்று பார்த்துக்கொண்டே இருக்கப்போறீர்? ஓம் எண்டு ஒரு வார்த்தை சொல்லும் கலியாணத்துக்கு நாள் பார்த்திடுவன்” இப்பிடி எல்லாம் கதைச்சதுகூடப் பகிடிக்குத் தானோ? நான் தான் அதை எனக்கு சாதாகமாய் எண்ணிட்டனோ என என்னும்போதே அவளுக்கு அவமானமாக இருந்தது.

மூன்றே மாதங்கள் தான் இன்னொருத்தனோட வாழ்ந்திருந்தாலும் ஏற்கனவே திருமணமான ஒருத்தியை திருமணம் செய்ய எந்த ஆம்பிளை தான் ஆசைப்படுவான். அதை நான் எல்லோ யோசிச்சிருக்க வேணும். அருண் விழுந்து விழுந்து என்னோட கதைச்சதைக் கண்டு என் மனம் தான் தப்புக்கணக்குப் போட்டிட்டிது. அவன் ஆசை கொண்டாலுமே அவனின் தாயார் சம்மதிப்பாவோ எண்டு யோசிச்சுப்போடு என்ர ஆசையை வளர்த்திருக்க வேணும். பெண்கள்தானே பெண்களுக்கு எதிரி இந்த

சமூகத்தில என எண்ணியவளுக்கு இப்போது மனம் கொஞ்சம் சமப் பட்டிருந்தது.

இருந்தாலும் அருண் தன்னைக் காதலிக்கவில்லை என்பதும் தன் வாழ்வு கடைசிவரை இப்பிடியே தானா என எண்ணப் பெரும் சலிப்பொன்றும் மனதில் எழ, இன்று இனி என்னால் இதைப்பற்றி எண்ணியபடி வேலையில் கவனம் செலுத்த முடியாது என எண்ணியவள், பொறுப்பாளரின் அறைக்குச் சென்று தனக்கு முடியாமல் இருப்பதாகக் கூறி அரை நாள் விடுப்பை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள்.

வீட்டுக்கு இப்ப செல்ல முடியாது. என்ன என்று அம்மா தூலாவும் தூலாவலில் நான் அம்மா முன் அழுதாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என எண்ணியபடி கால் போனபோக்கில் நடக்கத் தொடங்கினாள்.

யாழ்ப்பாணம் சனநெரிசலில் சிக்கித் தவித்தபடி இருக்க ஆஸ்பத்திரி வீதியில் ஊரிப்பட்ட ஓட்டோக்களும் மோட்டார் சைக்கிள்களும் வரிசையாய் அடுக்கி நிறுத்தப்பட்டிருந்தன. அருண் கூட தன் மோட்டார் சைக்கிளில் மிக அழகாக இருந்து ஓட்டிவருவான். தானும் அவன் தோளைப் பிடித்தபடியோ அல்லது முதுகோடு அணைத்தபடி போகவேண்டும் என எண்ணியது மனதில் எழ, ஒருவித ஏக்கமும் கூச்சமும் ஏற்பட பெருமூச்சை நன்றாக விட்டு தன்னை அசுவாசப் படுத்திக் கொண்டாள்.

தன் ஸ்கூட்டியை வேலை செய்யுமிடத்திலேயே விட்டுவிட்டு வந்தது நினைவில் வர, தன்னை எண்ணி நொந்தபடி மீண்டும் வேலைத் தலத்துக்கு வந்து ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு சோர்வுடன் வீடு நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

வீதியால் வரும்போது பலவற்றையும் பார்த்து இரசித்தபடி வருபவளுக்கு இன்று ஸ்கூட்டியே பெரும் பாரமாக இருந்தது. அம்மாவுக்கு என்ன சொல்லிச் சமாளிப்பது என்றுகூடப் புரியவில்லை. எப்படித்தான் வீட்டுக்குவந்து சேர்ந்தாள் என்று கூடப் புரியவில்லை. எப்போதும் பூட்டிக் கிடக்கும் கேற் திறந்தே கிடக்க, அம்மா பூட்ட மறந்துபோனா போல என்று எண்ணியவளாய் ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு வர டோனி பாய்ந்து வந்து இவள் மேல் தாவியது.

நான் வெள்ளன வந்தது உனக்குச் சந்தோசமே என்றபடி அதை வருடிக் கொடுத்தபடி உள்ளே சென்றவளுக்கு அதிர்ச்சி காத்திருந்தது அருண் வடிவில்.

வா ஜீவா. இவர் உன்னோட வேலை செய்யிறவராம். இவ அவற்றை

தாய். இவருக்கு உன்னைப் பிடிச்சிருக்காம். தன்ர மகனுக்கு உன்னை செய்து தரச் சம்மதமோ எண்டு கேக்கிறா. உன்னைக் கேட்டுத்தான் சொல்ல வேணும் எண்டு சொன்னனான். ஜீவா வருமட்டும் தாங்கள் இருந்து கேட்டு விட்டே போறம் எண்டிட்டுக் கதைச்சுக்கொண்டு இருக்கிறம் என்று வாயெல்லாம் பல்லாகத் தாய் கூற, மனதில் பொங்கி எழுந்த அடங்க மாட்டாத மகிழ்ச்சியை கஷ்டப்பட்டு அடக்கியபடி ..

"அம்மா எனக்கு யாரையுமே இன்னொரு தடவை கலியாணம் கட்ட விருப்பமில்லை" என்கிறாள்.

கதிரையில் இருந்த அருண் பதைப்புடன் எழுந்து

"ஜீவா அவசரப்படாதையும். நான் அம்மாட்டை எல்லா விடயமும் சொல்லித்தான் கூட்டிக்கொண்டு வந்தனான். அவவுக்கு முழுக்க சம்மதம். உமக்கு சப்றைசா இருக்கவேணும் எண்டுதான் நீர் போன் செய்ததுக்கும் எடுக்கேல்லை"

"அப்ப உங்கள் அம்மா வேண்டாம் என்றால் வந்திருக்கவே மாட்டியள். அப்பிடித்தானே அருண்"

"பிள்ளை ஜீவா! அருண் எனக்கு ஒரே பிள்ளை. அடிக்கடி உம்மைப் பற்றிக் கதைக்கிறவன். இப்ப காலம் மாறிப் போச்சு. பிள்ளையளின்ர சந்தோசத்துக்கு நாங்கள் மறுப்புத் தெரிவிச்சு என்னத்தைக் காணப்போறம். எனக்கு உம்மைப் பார்க்க முதலே அருண் சொல்லுறதைக் கேட்டு உம்மைப் பிடிச்சுப்போச்சு. இனி உம்மடை விருப்பம்".

"அத்தை எனக்கும் அருணைச் செய்ய விருப்பம் தான். ஆனால் விடியத் தொடக்கம் போனை நிப்பாட்டி வச்சு என்னை டென்சன் ஆக்கினதுக்கு பதிலுக்கு நானும் அப்பிடிக் கதைச்சனான்" என்றபடி மகிழ்வுடன் நிமிர்ந்து அருணைப் பார்க்கிறாள் ஜீவா.

# மனக் குரங்கு

அம்மன் கோவில் மணி அடிக்கத் தொடங்கீட்டுது. பின்னேரப் பூசை இப்ப. விதவிதமா சீலை உடுத்திக் கொண்டு பெண்கள் போவினம். எனக்கும் கோவிலுக்குப் போக ஆசைதான். ஆனால் உந்த விடுப்புக் கேட்கிற ஆட்களுக்குப் பதில் சொல்ல எரிசல் தான் வரும். ஏதோ உலகத்தில் யாரும் செய்யாததை நான் செய்தமாதிரி கூடிக் கூடிக் குசுகுசுப்பினம். மூன்று பிள்ளைகளுடன் நான் அம்மா வீட்டுக்கு வந்து பதினொரு மாதங்களாகின்றன.

நான்கு அண்ணன்களுடனும் ஒரு அக்காவுடனும் பிறந்த எனக்கு மட்டும் வாழ்வு ஏன் இப்பிடியானது. எல்லோருமே வெளிநாட்டில் இருக்க என் அவசர புக்தியால் வாழ்வு இப்பிடியாகிவிட்டதே. என்ன செய்வது? என் தலையில் இப்படி எழுதியிருக்கு என என்னை நானே தேற்றிக்கொண்டாலும் எதிர்காலம் கேள்விக்குறியோடு பூதமாய் என்னை பயமுறுத்தியபடி இருக்க வேறு வழிகள் எதுவும் தோன்றாமல் அந்த அந்திப் பொழுதின் அழகை வெறுமனே பார்த்துக்கொண்டிருந்தேன்.

முன்பொரு காலத்தில் இந்த இயற்கையை எப்படியெல்லாம் இரசித்திருப்பேன். மறையும் கதிரவனின் அழகை இதேபோன்றோரு மண் கும்பியின் மேலிருந்து நானும் ரவியும் இரசித்திருக்கிறோம். அதன் பின்னரும் வானில் பறக்கும் வவ்வால்களை எண்ணியபடி, நட்சத்திரக் குவியல்களை இரசித்தபடி... ஒரு ஆண்டு எத்தனை மகிழ்வாய்க் கழிந்தது. காதலிக்கும்போது எமக்கு ஏற்றாற் போல் இருக்கும் ஆண்கள் திருமணத்தின் பின்னர் ஏன்

முற்றிலுமாய் மாறிப்போகிறார்கள்?

என் கண்களின் வசீகரிப்பில் என்னிடம் வீழந்ததாகச் சொல்லிய ரவி அங்கை ஏன் பார்க்கிறாய்? அவனை ஏன் பார்க்கிறாய்? வாசல்ல ஏன் போய் நிக்கிறாய்? அவனோடை ஏன் பல்லைக் காட்டிக் கதைக்கிறாய் என்று.... அப்பப்பா நினைக்கவே அருவருக்கும்படி என்னைக் கேள்விகளால் துளைத்ததை இப்ப நினைத்தாலும் கோபம் தான் எனக்கு வருது. ரவியின் அக்கா கூட "மதுமிதாவை ஏன் சந்தேகப்படுறாய். உந்தக் குணத்தை மாத்திக்கொள்" என்று எத்தனையோ தடவை சொல்லியும் அவர் திருந்திற மாதிரித் தெரியேல்லை. தனியாகக் கடைகளுக்குப் போகக் கூட அனுமதி இல்லை. எப்போதும் அவர் சொல்வதைக் கேட்டு, என்ன சொல்வாரோ என்று பயந்து பயந்து, அவர் விரும்பிறமாதிரி உடை உடுத்தி.... அவர் விரும்பிறதை மட்டும் செய்து ஒரு பவுடர் போட்டாலும் ஆரைப் பார்க்கப் பவுடர் போட்டுக் கொண்டு வெளிக்கிடுறாய் என்று... ஒரு ஆடையைக் கூட ஆசைப்பட்டுக் கட்ட முடியாமல்... போதும்போதும் என்னுமளவு எல்லாக் கொடுமையும் அனுபவித்தாச்சு.

அதுக்குப் பிறகுதான் இனியும் அவரை சகிச்சுக்கொண்டு சேர்ந்து இருக்கிறது முடியாது என்று தனிய வந்து விவாகரத்துக்குப் போட்டது. சின்னனில இருந்தே உனக்குப் பிடிவாதம் அதிகம். கொஞ்சம் அனுசரிச்சுப் போனால் என்ன என்னும் அம்மாவுக்குப் பதில் சொல்ல எனக்கு முடி யேல்லைத்தான். "எங்களைக் கேட்காமல் உன்ர எண்ணத்துக்கு புருசனை விட்டிட்டு வந்திட்டாய். மூண்டு பிள்ளையளை வச்சுக்கொண்டு என்ன செய்யப்போறாய்" என்று இரு அண்ணன்களும் கேட்டாச்சு. எனக்கு முதல் பிறந்த அண்ணாதான் என்னோடை ஒட்டு. மாதாமாதம் ஒரு ஐம்பதாயிரம் அண்ணிக்குத் தெரியாமல் அனுப்பிக்கொண்டிருக்கிறார்.

அந்த பெண் வக்கீல் கூட உமக்கு மூன்று பிள்ளைகளையும் வைத்திருக்க முடியுமா என்று கேட்டதுக்கு "என்னால் பிள்ளைகளைத் தனிய வளர்க்க முடியும்" என்று வீம்பாகக் கூறினாலும் அது எத்தனை பெரிய துன்பம் என்று எனக்கு போகப்போகத்தான் விளங்கத் தொடங்கிச்சிது. அதுக்காக திரும்ப ரவியோடை போய் சேர்ந்து வாழவே முடியாது. இன்னும் ஒரு வருடம் பல்லைக் கடித்துக்கொண்டு இருக்கத்தான் வேணும் விவாகரத்துக் கிடைப்பதற்கு. அதுவரை அண்ணன் இருக்கிறார்தானே என்னைப் பார்த்துக்கொள்ள. நானே என்னைத் தேற்றிக்கொள்கிறேன்.

பிள்ளைகள் பள்ளிக்குச் சென்றுவிட்டார்கள். அம்மா வெங்காயத்தை உரிச்சு வையுங்கோ என்று சொல்லிவிட்டு நான் கூடையை எடுத்துக்கொண்டு

பிரான்சில் இருக்கும் அக்கா எனக்கு அனுப்பிய இரண்டரை இலட்சத்தில் வாங்கிய ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு சந்தைக்குக் கிளம்புகிறேன். போகும் போது தெரிஞ்ச சிலர் தலையாட்ட சிலர் பார்க்காதவாறு செல்வது மனதுக்குள் கோபத்தை வரவளைத்தாலும் அதை அடக்கியபடி நான் கடந்து செல்கிறேன்.

பக்கத்தில் சில சிறிய கடைகள் இருக்குத்தான். அம்மா கூட "உதில பக்கத்தில வாங்கிறதுக்கு எதுக்கு இப்ப அங்கை போறாய்" என்று என்னை வீட்டில் நிறுத்தி வைக்கப் பார்த்தாலும் நான் கேட்பதில்லை. பல நேரங்களில் பெண்களுக்குப் பெண்களேதான் எதிரிகள். நான் எதுக்கு மற்றவைக்குப் பயந்து வீட்டிலையே கிடக்கவேணும். எந்தக் காலத்தில இருக்கிறா அம்மா என எனக்குள் எண்ணிக் கொள்வேனே தவிர அவவுக்குப் பதில் எதுவும் கூறுவதில்லை. சரியான அமசடக்கி என்று அம்மா முணுமுணுப்பதும் கேட்பதுதான். ஆனாலும் அதற்கும் பதில் சொல்லாது சிரித்துவிட்டு என் அலுவலில் கண்ணாய் இருப்பதை வழமையாக்கிக் கொண்டேன்.

அன்று கொஞ்சம் பிந்திவிட்டது. சில மரக்கறிகள் முடிந்துபோய் இருக்கும். ஆனாலும் சிலது மலிவாயும் கிடைக்கும். நான் வெண்டைக் காய்களை ஒவ்வொன்றாய் முறித்துப் பார்த்துத் தட்டில் போட்டுவிட்டு நிமிர்ந்தால் என்னருகில் ஒருவர் என்னையே பார்த்துக்கொண்டு நிற்க எனக்கு ஒருமாதிரியாகிவிட்டது. எனக்கு அவரை அடையாளம் தெரிய வில்லை என்று புரிந்துகொண்டு "நான் தயாளன். சிதம்பரியின் மகன். கனடா வில இருக்கிறன்" என்று தானாகவே அறிமுகம் செய்கிறார். எனக்கோ பார்த்த முகமாய்ததான் இருந்தாலும் நினைவு வரவில்லை. அதை அவரிடமே சொல்கிறேன்.

"நீங்கள் முந்தியும் எங்களைக் கணக்கில எடுக்கிறேல்லை. அப்ப எப்படித் தெரியும்" என்கிறார். "இதென்ன தேவையற்ற குற்றச்சாட்டு" என்றபடி வெண்டைக்காய்க்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு அவருடன் கூடவே நடக்கிறேன். "நீங்கள் பள்ளிக்கூடம் போகேக்குள்ள நான் எத்தினை நாள் உங்களுக்குப் பின்னால திரிஞ்சனான்" என்று ஒருவித மனத்தாக்கலுடன் சொல்ல எனக்கு நினைவு வருகிறது. யாரை மறந்தாலும் எமக்குப் பின்னால் திரிஞ்சவர்களை மறக்காதுதானே.

லேடீஸ் கொலிச்சில் படித்த எனக்கு அப்போதெல்லாம் எம்மூரவர் கள் பெரிதாய்க் கண்ணுக்குத் தெரிவதில்லை.

நீங்கள் எங்க படிச்சனீங்கள்?

அவர் சொன்ன பள்ளிக்கூடம் எம்மூரில் தான் இருந்தது. அதனால் நான் அவரை நினைவில் வைத்திருக்க வேண்டிய தேவை இல்லைத்தானே என மனம் சமாதானம் சொல்ல “கனடாவில் இருந்து எப்ப வந்தீர்கள்? எத்தனை குழந்தைகள்” என்று கதையைத் திசை திருப்புகிறேன்.

“எனக்கு சந்திராவைப் பேசித்தான் செய்தது. நான் முதல்முதல் அவவைப் பார்க்கப் போகேக்குள்ள அவ சாதாரணமாத்தான் இருந்தவ. இரண்டு ஆண்டுகள் தான் மகிழ்வான வாழ்க்கை. கொஞ்சநாள் போகத் தான் தன்பாட்டில கதைக்கிறதும் வெறிக்கவெறிக்கப் பாக்கிறதும் ஏதோ தன்னுக்குள்ள பேசுறதும்... நானும் குணமாகிவிடும் எண்டுதான் பொறுத்துக் கொண்டு இருந்தன். சமையல் சாப்பாடெல்லாம் மாமிதான். இந்தியாவுக்குக் கொண்டு போய்கூட வைத்தியம் பார்த்தும் சரிவரேல்லை. கடைசியில நோய் முத்திப்போய் உடுப்புகளை கழட்டி எறிஞ்சிட்டு அம்மணமா நிக்கத் தொடங்க, மாமா மாமிதான் நீங்கள் இவ்வளவு காலம் துன்பப்பட்டது போதும் எண்டு சொல்லி விவாகரத்தும் எடுத்துத் தந்தவை. பாவம் நல்ல ஜீவன்கள். அதுக்குப் பிறகு இரண்டு வருடங்கள் ஓடிப் போச்சு. நானும் இப்பிடியே இருந்திட்டன். அப்பப்ப அம்மாவைப் பார்க்க இங்க வருவன்” என்று தயாளன் சொல்ல எனக்கு அவரைப் பார்க்கப் பாவமாக இருக்கிறதோட மட்டு மில்லாமல் நெஞ்சுக்கையும் ஏதோ செய்ய எப்பிடி ஆறுதல் சொல்லுறது எண்டு தெரியாமல் அவர் சொல்லுறதைக் கேட்டுக்கொண்டிருக்கிறன்.

அதன்பின் நாங்கள் இருவரும் அடிக்கடி பொது இடங்களில் சந்திக்கவும் மணிக்கணக்கில் கதைக்கவும் தொடங்கி அவர் கனடா போனபின்னும் தொடர்ந்து போனில வற்சப்பில எண்டு ஒருநாள் விடாமல் விவாகரத்து கிடைக்கும் வரைக்கும் கதைத்துக்கொண்டே இருந்தம். அதுக்குப் பிறகுதான் என் வாழ்க்கையில் மீண்டும் வசந்தகாலம் ஆரம்பிச்சது.

***

பார்க்கும் இடமெங்கும் வெள்ளைவெளேர் என்று பூம்பனி நிறைந்திருக்கு. சொல்வதற்கும் பார்ப்பதற்கும் தான் பூம்பனி அழகானது. ஆனால் கொடும்பனி என்றுதான் நான் சொல்வேன். பார்க்க அழகாக இருக்கும் இந்தப் பனித்துகள்கள் தாங்க முடியாத குளிரை ஏற்படுத்து கின்றன. பனி இறுகி எத்தனை விபத்துக்களை உண்டுபண்ணுகின்றன. என்னதான் குளிர் ஆடைகளை அணிந்து வெளியே சென்றாலும் கிடுகிடுத்து நடுங்க வைக்கின்றன. சில மனிதர்களும் இப்படித்தான். பார்க்க மிகவும் நல்லவர் போலத் தான் தெரிவார்கள். அவர்களோடு நெருங்கிப் பழகிய

பின்னர்தான் அவர்களின் உண்மை மனநிலைகளை அறிந்து கொள்ள முடிகிறது. சாளரத்தினூடாக வெளியே பார்த்துக்கொண்டு நின்ற என்னால் பனிப்பொழிவின் அழகை தொடர்ந்தும் இரசிக்க முடியவில்லை.

நான் கனடா வந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டதை என்னால் நம்பவே முடியவில்லை. எவ்வளவு விரைவாக ஓடிப்போகுது காலம். இப்ப தான் என்னால என் பிள்ளைகளில் இருவரை கனடாவுக்கு எடுக்க முடிந்தது. மூத்தவனுக்கு பதினாறு வயதானபடியால் அவனை மட்டும் எடுக்க முடிய வில்லை. அவன் இப்ப ரவியுடன்தான் இருக்கிறான். என்னதான் இருந்தாலும் பிள்ளைகளை விட்டுவிட்டு கனடா வரமுடியாதுதானே. அம்மாவும் எத்தனை நாள்தான் பிள்ளைகளைத் தனியாக வளர்க்க முடியும். நான் ரவியின் தமக்கையுடன் கதைத்ததும் எவ்வளவு நல்லதாகப் போய்விட்டது. அவவே தான் பிள்ளைகளை நான் பார்த்துக்கொள்ளுறன், நீர் போம் என்று சொன்னதால் தானே நான் நிம்மதியாய் இங்கு வரவும் இருக்கவும் முடிந்தது. வருவதற்கு முன்னர் விவாகரத்தும் கிடைத்ததுதான் என் அதிட்டம்.

எப்படியும் ஒரு ஆறு மாதங்களுள் மூத்தவனையும் கூப்பிட்டிடுவன். அதுவரை பொறுமையாய்த்தான் இருக்க வேணும். ரவிகூட இப்ப எவ்வளவு மாறிவிட்டார். முன்னர் என்னை எப்படி எல்லாம் சந்தேகப்பட்டார். இப்ப அதை உணர்ந்து அதுக்கெல்லாம் எத்தனைதரம் மன்னிப்புக் கேட்டிட்டார். மன்னிக்கிறதுதானே மனித மாண்பு. அதை விளங்கிக் கொள்ளாமல் "எதுக்கு ரவியோடை அடிக்கடி கதைக்கிறாய்" என்று ஏசும் தயாளனுக்கு எப்பிடி விளங்கப்படுத்திறது என்றே தெரியாமலிருக்கு. ஐந்து ஆண்டுகள் கணவ னாய் வாழ்ந்தவர் என்று ஏன் தயாளனுக்குப் புரியுதில்லை. வெளிநாடுகளில் பிரிந்த கணவனும் மனைவியும் சுமுகமாகப்பேசிக் கொள்வது இயல்புதானே என்று அவருக்குச் சொன்னாலும் நாங்கள் வெள்ளைக்காரர் இல்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்?

எப்படியோ மன நிம்மதியான இந்த வாழ்வு தயாளனால்தான் என நன்றியோடு எண்ணிப்பார் என உள்மனம் அடிக்கடி சொல்லும் போதெல் லாம் எனக்கு ஏற்படும் ஆயாசத்துக்கு அளவே இல்லை.

நான் கனடா வந்தபின் வேலைக்குப் போகும்படி தயாளன் என்னை வற்புறுத்தவில்லை. என்றாலும் அவர் வேலைக்குப் போனபிறகு வீட்டில் எட்டு ஒன்பது மணிநேரம் தனிய இருக்கவும் பிடிக்கவில்லை. தயாளனின் முதல் மனைவி இருந்த நிலையால் யாரும் அவர் வீட்டுக்கு வருவதில்லை என்று சொல்வதைவிட இவர்களே யாரும் தப்பித்தவறிக்கூட வீட்டுக்கு வாராதவாறு பார்த்துக்கொண்டனராம் என்று வேதனையுடன் தயாளன் சொல்லக்

கேட்டிருக்கிறேன். அப்படியே ஒருவித மன அழுத்தத்துள்ளும் தயாளனும் இருந்தபடியால் யாரையும் நண்பர்கள் என்று வீட்டுக்கும் அழைத்ததில்லை. அது இப்போதும் தொடர்கிறது.

இப்ப இருப்பது ஒரு படுக்கை அறை, ஒரு சமையலறை, ஒரு வரவேற்பறை மட்டும்தான். எங்கள் இருவருக்கும் அது போதும்தான் என்றாலும் பிள்ளைகளைக் கூப்பிட்டால் இது போதாதுதானே என நான் மட்டுமல்ல தயாளனும் யோசித்து என் பிள்ளைகளைத் தன் பிள்ளைக்களாய் எண்ணித்தான் இந்த பெரிய வீட்டை வாங்கினவர். தயாளன் தொடர்ந்து வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார். அவருக்கு நல்ல சம்பளம். என் உடல்வாகிற்கும் முகப் பொலிவுக்கும் நகை நட்டுகள் போடாமலே அழகாய் இருப்பதால் தங்கநகைகள் கூட நான் அதிகம் வாங்கிப் போடுவதில்லை.

தயாளன் தொடர்ந்து வேலை செய்ததாலும் அவரின் முதல் மனைவிக்குக் குழந்தைகள் இல்லை என்பதாலும் அவரிடம் சேமிப்பில் ஏற்கனவே இருந்த பணத்தைப் போட்டு இந்த வீடு வாங்கியது எத்தனை வசதியாக இருக்கு எங்களுக்கு.

பெரியவனுக்கும் ஸ்பொன்சர் சரிவந்திடும் என்றுதான் நம்பிக்கை யாய்ச் சொல்கிறார். நான் வேலை செய்யும் பணத்தைக் கூட அவர் கேட்பதில்லை. தன் வருமானத்திலேயேதான் என் இரு பிள்ளைகளையும் கூப்பிட்டவர். இவர் என்னைக் கலியாணம் கட்டினது என் அதிட்டம்தான். இருந்தாலும் என் அழகும் ஒரு காரணம் தானே என எண்ணியதில் ஏற்பட்ட பெருமிதத்தில் கண்ணாடியின் முன் சென்று என்னை நானே பார்க்கிறேன். என்னை அறியாது என் அழகில் நானே இலயித்து நிற்கிறேன்.

நாற்பது வயதானாலும் என் அழகு கூடியிருக்கிறதேயன்றிக் குறையவில்லை. மாருதியின் ஓவியப் பெண்ணின் உடல்வாகும் நெற்றியும் அதற்கும் மேலே தனித்துவமான உதடுகளும் புருவமும் வெள்ளை வெளேர் அல்லாமல் பளிங்குபோன்ற அந்த நிறமும் என்னை நானே பார்த்துப் பொறாமை கொள்ளவைப்பதாய் இருக்க என்னுள் சிரித்துக் கொள்கிறேன்.

திருமண வீடுகளுக்குப் போவதென்றாலோ அல்லது வேறு பொது நிகழ்வுகள் என்றாலோ எனக்குப் போவதற்கு ஒருமாதிரி இருக்கும். பெண்கள் பலரும் ஏதோ செய்யாத குற்றத்தைச் செய்ததுபோன்று என்னோடு பேசாமல் இருக்க பத்திக்கொண்டு வரும். தயாளனிடம் குறைப்பட்டுக் கொண்டபோது “அவர்களுக்கு உன் அழகின் மேல் பொறாமை. அதை இப்பிடித்தான் காட்டுவார்கள்” என்றதில் என மனமும் அமைதியானது.

அதுமட்டுமன்றி பெண்கள் தான் கதைப்பதில்லையே தவிர ஆண்கள் பலரும் வைத்தகண் வாங்காமல் என்னைப் பார்ப்பதை நான் கண்டுவிட்டுத் தெரியாதமாதிரி இருப்பன்.

நான் தயாளனைக் கட்டிக்கொண்டு வந்தபிறகு என் அண்ணன் மாரும் பிரச்சனை தீர்ந்ததாக எண்ணி என்னோட கதைக்கிறதை விட்டு விட்டார்கள். எனக்கது கவலைதான் என்றாலும் அவை ஒருத்தரும் கனடாவில் இல்லை என்றதில் சிறிது நின்மதியாகவும் இருக்கு.

என்ர மூத்தவனும் இப்ப கனடா வந்திட்டான். என் மனம் இப்ப எத்தனை நிம்மதியாய் இருக்கு என்று சொன்னால் உங்களுக்கு விளங்காது. பிள்ளைகள் மூவரையும் கொலிச்சுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் கூட்டிக் கொண்டு போய்வரவே நேரம் சரியாக இருக்கு. பெரியவனுக்கு இப்ப பதினேழு வயது. கொஞ்சம் வளர்ந்தபடியாலும் தகப்பனோட இருந்ததாலும் தயாளனோடை சேருகிறானே இல்லை. இப்ப எனக்கு அதுதான் பெரிய தலையிடியாக் கிடக்கு. ரவி என்னத்தைச் சொல்லி அவன் மனதைக் கலைத்துவிட்டிருக்கிறாரோ தெரியேல்லை. வேற வீட்டை போவமென்று ஒரே கரைச்சல். சொந்த வீட்டை விட்டுட்டு வாடகை வீட்டுக்குப் போனால் எவ்வளவு செலவு என்று அவனுக்கு எவ்வளவு சொல்லியும் விளங்கிக் கொள்கிறான் இல்லை.

தயாளன் எவ்வளவு காசைச் செலவழிச்சு அவனைக் கூப்பிட்டவர். என் பிள்ளைகளில அவருக்கு அத்தனை அன்பு. அவர் கதைக்கப் போனாக் கூட அவரை அலட்சியம் செய்திட்டு போயிடுறான். இப்ப நினைச்சால் அவனைக் கூப்பிடாமலே விட்டிருக்கலாம் போல கிடக்கு. ஆனாலும் அவனை மட்டும் அங்கை விட்டிட்டு நான்மட்டும் எப்பிடி நிம்மதியாய் இங்க இருக்கமுடியும்? “சொறி தயாளன்” எண்டு நான் சொன்னதுக்கு அவன் சின்னப்பிள்ளை. அதை நான் பெரிசா எடுக்கேல்லை. நீர் கவலைப்படாதை யும். போகப் போக மாறிடுவான் எண்டு எனக்கு ஆறுதல் சொல்லுறார்.

இப்ப சில மாதங்களாகப் பெரியவன் ஒழுங்காப் படிக்கிறான் இல்லை. எனக்கு அவனோடை பெரிய தலையிடியாய் இருக்கு. கொலிச் சுக்கும் போகாமல் இடையிடையே கட் அடிச்சுக்கொண்டு பெடியளோடை திரியிறான் எண்டு கேள்விப்பட்ட நேரம் தொட்டு மனமெல்லாம் ஒரே சஞ்சலாமாய்க் கிடக்கு. ஊரிலை எண்டாலும் கொஞ்சம் அடக்கி வைக்கலாம். இங்க ஒண்டும் செய்ய ஏலாமல் இருக்கு. இவனை என்ன செய்யிறது எண்டுதான் எனக்கு விளங்குதே இல்லை.

நீர் முன்னை மாதிரி இல்லை. என்னோட கதைக்கவே உமக்கு நேரம் இருக்கிறேல்லை என்ற தயாளனின் குற்றச்சாட்டுக்கும் என்ன சொல்லி அவரை சமாதானம் செய்வது என்று தெரியாமல் எனக்கு தலையெல்லாம் வலிக்க நான் மனச் சோர்வுடன் யோசிக்க யோசிக்க எனக்கு விடை எதுவுமே கிடைக்குதில்லை.

நண்பிகள் என்று கூட எனக்கு ஒருத்தரும் இல்லாதது ஒருவகையில் நல்லதுதான் என்றாலும் இந்த நேரத்தில் என் உள்ளக் கிடக்கையைச் சொல்லி ஆற முடியாமலும் இருக்கு. அக்காவிடம்தான் ஒருக்காக் கதைக்க வேணும். அவ சிலநேரம் நல்ல ஆலோசனை சொல்லுவா என எண்ணியபடி அவவுக்கு போன் செய்கிறேன்.

"உனக்கு நல்ல வாழ்க்கை ஒன்று கிடைச்சிருக்கு. தயாளன் உன்னை கனடாவுக்குக் கூப்பிடாட்டில் உன்ர நிலமை பிள்ளைகளின் நிலமை என்ன எண்டு யோசிச்சனியா? எத்தனை நாளைக்கு உனக்கு நாங்கள் காசு அனுப்பிக்கொண்டு இருக்கிறது. நாங்களும் எல்லாம் குடும்பக் காரர். கஷ்டப்பட்டுத்தானே வெளிநாடுகளில உழைக்கிறம். கடவுள் தந்த அதிட்டத்தை காப்பாற்றிக்கொள்ளப் பார். திரும்பவும் பாழும் கிணத்துக் குள்ள விழப்போறன் எண்டால் கடவுளாலகூட உன்னைக் காப்பாத்த ஏலாது".

அக்கா சொல்வது அத்தனையும் சரிதான். ஆனாலும் இவ்வளவு கடுமையா அவ கதைச்சிருக்கத் தேவையில்லை. அக்கா எனக்கு ஆதரவா இருப்பா என்று பார்த்தால் இப்பிடி முகத்தில அடிச்சமாதிரிச் சொல்லி இருக்கத் தேவையில்லை. ரவியோடை கதைக்கிறனான் எண்டு சொன்ன உடனையே அக்காக்கு சரியான கோபம் வந்திட்டிது.

அவரும் பாவம்தானே. என்னில அவருக்கு இன்னும் அன்பு நிறைய இருக்கு. எதை மறந்தாலும் முதல் காதல், முதல் கலியாணம் ஆருக்கும் மறக்குமே. கடவுளே ஏன் என்னை இப்பிடிச் சோதிக்கிறாய். என்னை இப்பிடி திக்குமுக்காட வச்சிட்டியே கடவுளே. என்ன முடிவை எடுக்கிறது எண்டு எனக்குத் தெரியேல்லையே. மூத்தவனோட திருப்ப ஒருக்காக் கதைச்சுப் பார்ப்பம் என்று எண்ணியதும் சிறிது நிம்மதி வருது எனக்கு.

இப்ப கொஞ்ச நாளா வானமெங்கும் ஒரே மேகமூட்டம். திட்டுத் திட்டாய் கருமேகங்கள் சூழ்வதும் குளிர் காற்று அடிப்பதும் இத்தனை ஆண்டு களாய் இல்லாமல் இதுதான் முதல் முறை. எத்தனையோ தடவைகள் குளிர் காலங்களில் புயல்க்காத்து வீசியிருக்குத்தான். இப்போது புதிதாய் இடிமுழக்கமும் மின்னலும் சேர்ந்து பயம் கொள்ள வைக்குது. முன்புபோல்

தயாளனுடன் கதைக்கவும் முடியுதில்லை. அவர் பட்டும்படாமலும் என்னோடு வாழ்வதுபோல் எனக்குத் தோன்றுவது எனது கற்பனையா என்றுகூட என்னால் உறுதியாகக் கூற முடியுதில்லை. எல்லாம் இன்னும் ஒரு வாரம் தான். அதுக்குப் பிறகு என் முடிவை நான் தயாளனுக்குச் சொல்லத்தான் போறன். தேவையான தருணத்தில சரியான முடிவை எடுத்திடவேணும். மனச்சாட்சிக்குப் பயந்து செய்யிறதா வேண்டாமா எண்டு யோசிச்சு யோசிச்சு தலையிடிதான் மிச்சம். என்ன செய்யப் போறன் நான்.

***

தயாளன் இரண்டு நாட்களாக பிந்தி வீட்டுக்கு வாறதுமில்லாமல் என்னோட பெரிதா முகம் குடுத்துக் கதைக்கிறார் இல்லை. இண்டைக்கு அவர் வேலையால வந்த உடன ஒருக்காக கதைச்சுப்போடவேணும். கொஞ்ச நாட்களா நானும் அவரைக் கவனியாமல் விட்டிட்டன். பாவம் அவர் எனக்காக எத்தனையைச் செய்திருக்கிறார். அவரை நான் ரவியைச் சந்திக்கிறதுக்கு முன்பே கண்டிருந்தால் என் வாழ்வு வேறு விதமாகப் போயிருக்கும். சரி இப்ப அதை நினைச்சு என்ன பயன். என் விதி இதுதான் என்று இருந்திருக்கு. சரி பிள்ளைகளை எடுக்கிற நேரமாப் போச்சு. ஆனால் என்றுமில்லாமல் மனம் ஏதோ சஞ்சலப்படுறமாதிரி ஏன் இருக்கு என்று விளங்குதில்லை. சுவாமி அறைக்குச் சென்று கண்மூடி நின்றுவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு கொலிச்சுக்குப் போகக் காரை எடுக்கிறேன்.

என்ன இன்னும் தயாளன் வரேல்லை. நானும் நேரத்தைக் கவனிக்கேல்லை. இப்ப ஒரு கிழமையா பிந்தித்தான் வாறார். ஆனாலும் இண்டைக்கு இரவு பதினொன்று ஆகப்போகுது. இவ்வளவுநேரம் என்ன செய்யிறார். போனைக் கூட நிப்பாட்டி வச்சிருக்கிறாரே. எதுக்கும் காலை வரை பார்ப்பம். எனக்கும் களைப்பா இருக்கு. எதுக்கும் போய் படுப்பம்.

நான் படுக்கையறைக்கு வந்து போர்வையை எடுக்க அவர் படுக்கிற பக்கம் என்வலப் ஒண்டு தெரியிது. என்ன அது என்று பார்க்க ஆவலாய் இருக்க போய் எடுக்கிறன். மதுமிதா என்று என் பெயர் இருக்க எனக்கு மனதில் ஏதோ செய்ய அதை உடைக்கிறேன்.

“எனக்கு வாற கோபத்துக்கு உம்மை கொலை செய்திட்டு ஜெயிலுக்குப் போகலாம் போல இருந்ததுதான். ஆனால் என் நல்ல காலம் நானே என் கோபத்தை அடக்கீட்டன். அதுக்குக் காரணம் உமது தவறுக்கு உமது பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது என்பதுதான்”

ஐயோ ஏன் தயாளன் இப்பிடி எழுதியிருக்கிறார்.. நெஞ்சு பதற நான்

கட்டிலில் அமர்ந்து மிகுதியை வாசிக்கிறன்.

“நான் ஐந்து ஆண்டுகளாகப் பட்ட துன்பத்திற்கு கடவுள் எனக்குத் தந்த சிறந்த பரிசாத்தான் நான் உம்மை எண்ணினன். என் அடிமனதில உம்மேல் இருந்த காதலும் ஆசையும் நீர் கணவனை விட்டுப் பிரிந்து இருக்கிறீர் எண்டதும் மீண்டும் உயிர்த்திது. அதனால உமது பிள்ளைகளை யும் என் பிள்ளைக்களாய் எண்ணித்தான் இந்த ஐந்து ஆண்டுகளும் வாழ்ந்தனான். ஆனால் நீர் எனக்கு செய்ய நினைத்தது பெரிய துரோகம். அதைக்கூட மன்னிக்கலாம் நீர் என்னோட பேசி ஒரு தீர்மானம் எடுத்திருந் தால். ஆனால் நான் ஒருநாள் வெள்ளன வீட்டுக்கு வந்ததால உம்முடைய சுயரூபம் தெரிஞ்சது. நான் வந்தது தெரியாமல் நீர் உம்மட முதல் கணவனோடை போனிலை கதைச்சதைக் கேட்க நேர்ந்தது என் அதிட்டம்.

நீர் உமது கணவனை ஏஜெண்ட் மூலம் கூப்பிட ஒழுங்கு செய்த விடயம் பற்றி அவனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தீர். முக்கியமாய் ஒண்டு சொன்னீர் பாரும். அதைக் கேட்டு என் நெஞ்சே வெடிச்சிடும் போல இருந்திது. அவன் வந்த உடன அவனையும் இந்த வீட்டில கூட்டிக்கொண்டு வந்து வச்சிருக்கிறது எண்டதைக்கூட மன்னிக்கலாம். ஆனால் அவன் வந்ததும் கோபத்தில நானே வீட்டை விட்டுப் போயிடுவன் எண்டும் இல்லாட்டில் என்னை வீட்டை விட்டுப் போகச் சொல்லி நீயே சொல்லுவாய் எண்டும் உன்ர முன்னாள் புரிசனுக்குச் சொல்லிக்கொண்டிருந்தாய். நானாகப் போகாட்டில் என்னைக் கொடுமைப் படுத்திறார் என்று சொன்னால் அவங்களே என்னை வெளியேறச் சொல்வார்கள் என்று சொல்ல உன்ர புருஷன் ஒரு சிரிப்புச் சிரிச்சான் பார். அப்பதான் உனக்கு எந்த விதத்திலை யாவது தண்டனை குடுக்கவேணும் என்று நான் தீர்மானிச்சது.

நீயும் பிள்ளைகளும் என்னை வா என்று சும்மாதன்னும் கேட்காமல் இரண்டு நாட்கள் எங்கேயோ போனீர்கள் எல்லோ. அன்றுதான் நான் இந்த வீட்டைப் பார்க்க ஆட்களை ஒழுங்கு செய்தது. வீடு என் பேரில இருந்தாலும் உனக்குப் பாதிப் பங்கு இருக்கு. அதனால தயாளன் என்னை எழும்பச் சொல்லேலாது என்று தினாவெட்டா அவனுக்கு நீ சொல்லிக்கொண்டிருந்தது இப்பவும் என் காதில கேட்டுக்கொண்டே இருக்கடி.

என் வீட்டை நான் வேறு ஒருவருக்கு விற்றுவிட்டேன். ஒரு வாரம் மட்டும்தான் நீங்கள் இங்க இருக்கலாம். அதுக்குப்பிறகு உரியவை வந்திடு வினம். உன்ர கையெழுத்து இல்லாமல் எப்பிடி விக்கலாம் எண்டு நீ யோசிக்கலாம். இரண்டு வாரத்துக்கு முந்தி வீட்டுக்கு இன்சூரன்ஸ் செய்திருக்கிறன் என்று சொல்லி உன்னட்டை சில பேப்பரில கைஒப்பம்

வாங்கினது நினைவிருக்கா?? என்னை இளிச்சவாயன் எண்டு எண்ணினதால நீ ஒண்டையும் வடிவாப் பாக்கேல்லை. இதுக்குப் பிறகும் நீ வழக்கு வைக்கலாம். வாதாடலாம். ஆனால் அதையெல்லாம் பார்க்க நான் இந்த நாட்டிலையே இருக்கமாட்டான். உன்ர புருஷன் இந்த நாட்டுக்குள்ள எப்பிடி வாறான் எண்டு நானும் பார்க்கிறன். எவ்வளவு நல்லவனாய் இருந்த என்னை இப்படி மாற்றினது உன்ர துரோகம் தான். அதை நான் என் உயிருள்ளவரை மறக்கவே மாட்டன்”

பெயரே போடாமல் தட்டச்சுச் செய்யப்பட்ட கடிதம் என் கையை விட்டு தானாக கீழே விழுது. பனிப்பாறை ஒன்று என் தலைமேல் விழுந்ததுபோல் அதிர்ச்சியில் கண்களில் கண்ணீர் கட்டுமீறி வர நான் அழுத ஓலம் கேட்டு பிள்ளைகள் பதைப்புடன் எழுந்தோடி வந்து என்னம்மா நடந்தது என்று கேட்க எதுவும் சொல்லாமல் அழுதுகொண்டு இருக்கிறேன் நான்.

# பக்கத்து வீடு

நாங்கள் இந்த வீட்டுக்கு வந்து இருபது ஆண்டுகள் முடியப்போகிறது. காலம் தான் எத்தனை வேகமாக எல்லாவற்றையும் கடந்துபோக வைக்கிறது. ஆசைகள் தான் மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. எனினும் பல ஆசைகள் நிராசையாகியும் போயிருக் கின்றனதான். நல்ல ஆசைகள் முயற்சியின் காரணமாக நிறைவேறி மனதுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுப்பதோடு மட்டுமல்லாது திருப்தியுடன் வாழ்வை நகர்த்திச் செல்கின்றன. திருப்தி எப்போது இல்லாது பேராசை மேலோங்குகிறதோ அதன்பின் மனிதன் வாழ்வின் இன்பமான நாட்களைத் தொலைத்து இன்னும் இன்னும் என்று வசந்தங்களை எல்லாம் தொலைத்து ஒன்றுமில்லாதவனாகி விடுகிறான்.

நான் மகிழ்வாகவும் நிம்மதியாகவும் தானே இப்பொழுது இருக்கிறேன் என என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். சுற்றிவர கண்ணாடி அறையினுள் தொங்கும் பூங்கன்றுகளை ஆசைதீரப் பார்க்கிறேன். எத்தனை தடவைகள் பார்த்தாலும் அலுக்காத பச்சைப் பசேல் எனவும் வண்ணவண்ண நிறங்களுடனும் பூத்துக் குலுங்கும் இந்தச் செடிக்கொடிகளை நாள் முழுதும் பார்த்துக்கொண்டே இருந்தாலும் எனக்குச் சலிப்ப தில்லை.

எட்டு ஆண்டுகளுக்கு முன் இதைக் கட்டியபோதும் சரி அதன்பின் சில மாதங்களாக நான் பட்ட மன வேதனையையும் எண்ண இப்போ சிரிப்புத்தான் வருகிறது.

என் நீண்ட நாள் ஆசையான குளிர் காலத்திலும் பூங்கன்றுகள் வளர்ப்பதற்கான கண்ணாடி அறை ஒன்றை அமைப்பது குறித்து கணவருடன் பலநாட்கள் தர்க்கம் செய்தாகிவிட்டது. அந்தாளும் அசையிற மாதிரி இல்லை. நானும் விடுவதாய் இல்லை.

“உதெல்லாம் வீண் செலவு. கொஞ்ச நாள் சும்மா இருக்க உன்னால முடியாது. காசை கரியாக்கிறதெண்டால் முன்னுக்கு நிப்பாய்”

“இருந்தாப்போல செத்திட்டால் என்ர ஆசை நிறைவேறாமல் போயிடுமப்பா”

“நீ ஒண்டைச் செய்ய நினைச்சால் செய்து முடிக்குமட்டும் விடவே மாட்டாய். உப்பிடிச் சொல்லிச் சொல்லியே எல்லாத்தையும் நிறைவேற்றிக் கொள்”

“நான் என்ன நகை நட்டு வாங்கித் தாங்கோ என்றா கேட்கிறன்”

“என்னவோ செய்து முடி”

அடுத்த நாளே நான் வேலையைத் தொடங்கியாச்சு. சாதாரணமாக எந்தச் சிறிய கட்டட வேலை செய்வதாயினும் கவுன்சிலில் அதற்கான வரைபைக் கொடுத்து சிறிது பணமும் செலுத்தி அதற்கான அனுமதியைப் பெறவேண்டும். சாதாரணமாக மூன்று அடி உயரமும் மூன்று அடி நீளமும் இருந்தால் சரி. சரிவான கூரைக்கு அனுமதி தந்திருக்க வேலை ஆரம்பிக்க வேலைகளைச் செய்வதற்கு ஒரு தமிழர் தான் ஒப்பந்தம் செய்திருந்தார். சமரில் முழுவதும் திறப்பதுபோல் மடியும் கதவுகள்வரை போட்டாச்சு. கூரை வேலை மட்டுமே மிகுதியாக இருக்க விக்டோரியன் ஸ்டைல் கூரை இன்னும் நன்றாக இருக்கும் அக்கா என்கிறார் அந்தத் தமிழர்.

எனக்கும் ஆசை எட்டிப்பார்க்க கவுன்சிலில் சாய்வான கூரை என்றுதானே கொடுத்துள்ளோம் என்கிறேன். பக்கத்து வீட்டுக்காரர் பிரச்சனை இல்லையோ என்கிறார். அந்தக் கிழவன் கொஞ்சம் துவேஷம் தான். ஆனால் கிழவி நல்லது என்கிறேன். அப்ப நான் விக்டோரியன் கூரையே போட்டு விடுறன். ஒரு ஆயிரம் பவுண்டஸ் தான் அதிகம் என்கிறார். அப்ப கவுன்சிலுக்கு அறிவிக்கத் தேவை இல்லையோ என்கிறேன். அவங்களுக்கு அறிவிச்சு திருப்ப பிளான் கீறி காசும் நாளும் விரயம் அக்கா என்கிறார்.

அந்தக் கூரையை எத்தனை பதிவாகப் போட முடியுமோ போடுங்கோ என்கிறேன். அவர்களும் எவ்வளவு பதிவாக்கமுடியுமோ அவ்வளவு பதித்தே தான் போட்டுவிட்டுப் பார்த்தால் மிக அழகாக இருக்க என் கண்ணே

பட்டுவிடும்போல் கண்ணாடி அறை ஒளிர்கிறது. எதற்கும் ஒருக்கா அளந்து பார்ப்போம் என்று ரேப்பை எடுத்து அளந்து பார்க்க மூன்று மீற்றர் இருக்க வேண்டிய உயரம் முப்பது சென்ரிமீற்றர் அதிகமாக இருக்க என் மகிழ்ச்சி எல்லாம் ஒரு நொடியில் வடிந்துபோக ஒப்பந்தக்காரருக்கு போன் செய்கிறேன்.

அது பெரிய பிரச்சனை இல்லை அக்கா. நீங்கள் வீணாப் பயப்படாதைங்கோ என்கிறார். இதுக்கு மிஞ்சி என்ன செய்ய வருவது வரட்டும் என்று நான்கு மாதங்கள் பயத்துடனேயே கழிய குளிரும் குறைந்துகொண்டு வர சிறிது சிறிதாகப் பூங்கன்றுகள் எல்லாம் வைத்து கண்ணாடி அறை மிக அழகாகக் காட்சிதருகிறது. இலைதுளிர் காலமும் வந்துவிட எனக்கு அந்த அறையுள் நிற்பதும் இரசிப்பதுமாக காலம் நகர வெயிலும் எறிக்க ஆரம்பிக்கிறது.

நாம் கண்ணாடி அறையின் கதவுகளை முழுவதுமாகத் திறந்து விடுகிறேன். அந்தக் கண்ணாடி அறையின் அழகு தோட்டம் முழுதுமே பிரதி பலிக்கிறது. சமையல் செய்தபடியே நான் அவற்றை இரசித்தபடி இருக்க, அங்கு ஒரு சிறிய வட்ட மேசையும் கதிரைகளுமாய் நாம் உணவை அங்கு இருந்து இயற்கையை இரசித்தபடி உண்பதும் மனதுக்கு மகிழ்வாய் இருக்கிறது. வீண் காசு என்ற கணவரே உன்ர ஐடியா நல்லாத்தான் இருக்கு என்று கூற என் மனம் நிறைந்துபோகிறது. பிள்ளைகளும் படங்கள் எடுத்து அம்மாவின் பூங்கன்றுகள் என்று இன்ஸ்ரகிறாமில் படங்கள் போட எனக்குப் பெருமிதமாயும் இருக்கு. பறவைகளும் அணில்களும் போடும் உணவு களைக் கொத்தி உண்பதும் ஒலி எழுப்புவதுமாக இருக்க அவற்றை இரசித்த படி பார்த்துக்கொண்டிருக்கவே பொழுது போய்விட ஆறு மாதங்கள் முடிந்து போயிருந்தது.

ஒருநாள் நானும் கணவரும் மட்டும் இரசித்துச் சுவைத்து மதிய உணவை உண்டு கொண்டு இருக்கிறோம். பக்கத்து வீட்டுக்கு அவர்களின் நண்பர்கள் யாரோ இருவர்கள் வந்திருக்கிறார்கள் போல. பெரிதாக சிரித்துக் கதைப்பது கேட்கிறது. சாதாரணமாக யாருமே வந்து நான் பார்ப்பதில்லை. யாராய் இருக்கும் என்கிறேன் கணவரைப் பார்த்து. நான் என்ன சாத்திரம் தெரிஞ்ச ஆளே. உன்னை மாதிரித்தான் நானும் என்று கணவர் சிரிக்க, அவர்கள் பக்கமிருந்து எமது கண்ணாடி அறையின் பக்கம் ஒரு தடி நீள்கிறது. நான் தான் அதை முதலில் பார்க்கிறேன்.

அங்க பாருங்கோப்பா. எங்கட சுவரை அளக்கினமோ என்கிறேன்.

அதுகள் என்ன செய்யுதோ. உனக்கு எப்பவும் வீண் பயம் என்றபடி அவர் திரும்பிப் பார்க்க மறுபடி மறுபடி கண்ணாடிச் சுவரில் ஒரு தடியை வைத்துப் பார்ப்பதைக் கணவரும் கண்டுவிடுகிறார். நீ சொன்னது சரிதான். உதுகள் எங்கடை சுவரை அளந்துதான் பார்க்கிதுகள். பொறு பார்ப்போம் என்றுவிட ஏன் அளக்கிறீர்கள் என்று அஞ்சலாவிடம் கேட்கட்டா என்கிறேன். பேசாமல் இரு, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி எண்டதுபோல நீ கேட்கப்போய் பெரிசுபடுத்தாதை என்றுவிட்டு எழுந்துவிட நானும் யோசனை யோடு எழுகிறேன்.

அடுத்துவந்த ஒவ்வொருநாளும் எனக்கு நிம்மதி இன்றிக் கழிய சரியாக ஒரு மாதத்தின் பின் ஒருநாள் கவுன்சிலில் இருந்து நான் எதிர்பார்த்த கடிதம் வந்திருக்க படபடப்புடன் கடிதத்தை உடைக்கிறேன். நீங்கள் கவுன்சிலில் தந்த பிளானில் இல்லாத விக்டோரியன் சட்ட ஸ்ரையில் கண்ணாடி அறையைக் கட்டியுள்ளதாக எமக்கு முறைப்பாடு வந்துள்ளது. வருகிற வெள்ளி கவுன்சிலில் இருந்து ஒருவர் அதைப் பார்க்க வருவார் என்று போட்டிருக்க, எனக்குக் கோபம், அவமானம், ஏமாற்றம் எல்லாம் ஒன்றாக எழுகின்றன. மனிசனுக்கு போன் செய்கிறேன்.

அண்டைக்கே சொன்னனான். உதுகளின்ர குணத்துக்கு வளவுக்குள்ள வந்த ஆமையை அடிச்சுச் சாப்பிடாட்டிலும் எங்கேயாவது கொண்டுபோய் விட்டிருக்கவேணும். நீயும் மேளும் தடுத்திட்டியள்.

ஆமையின்ர பாவம் எங்களுக்கு எதுக்கப்பா? எப்பிடி உதுகளுக்கு நாங்கள் சாய்வான கூரைக்குத்தான் குடுத்தனாங்கள் எண்டு தெரிஞ்சது?

நாங்கள் கட்ட முதலே கவுன்சில் அவர்களுக்கும் கடிதம் போடும்

அப்ப முதலே உவை எங்களுக்குச் சொல்லி இருக்கலாம் தானே

அவை உன்ர சொந்தக்காரரே. சரி வீட்டை வந்து கதைக்கிறன்

என்றபடி கணவரின் போன் நிறுத்தப்பட யோசனையோடு நானும் போனை வைக்கிறேன். .

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது நினைவில் வருகிறது. பக்கத்து வீட்டார் ஒரு ஆமையை வளர்க்கின்றனர். நாம் வந்தநாள் முதல் சமரில் பகலில் அவர்கள் பின் வீட்டுத் தோட்டத்தில் அங்கும் இங்குமாய் திரியும் இரவில் அதைப் பின் வளவில் உள்ள கட்டடத்தின் உள்ளே விட்டு அடைத்துவிடுவார்கள். ஆனால் அந்த கட்டட அமைப்பு எப்படி இருக்கு என்று பார்க்கவேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தாலும் இதுவரை பார்க்கும்

சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததே இல்லை.

ஒருநாள் பக்கத்து வீட்டு ஆமை எங்கள் வளவுக்குள் வந்துவிட்டது. இந்தப் பத்து ஆண்டுகளில் இதுதான் முதல் தடவை. மகள் கண்டுவிட்டு கணவரைக் கூப்பிட்டுக் காட்ட கணவர் அதைக் கையில் எடுத்து இரண்டு கிலோ இருக்கும் போல. கறி வைத்தால் எப்பிடி இருக்கும் என்கிறார் கணவர். நானும் மகளும் ஒரே நேரத்தில் உங்களுக்கு விசரா என்கிறோம். கிழவன்ர கொழுப்புக்கு உதுதான் செய்யவேணும் என்கிறார் மீண்டும்.

கடைசிவரை உதுக்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று நான் கூற லபக் என்று மகள் ஆமையைக் கணவரின் கைகளிலிருந்து வாங்கி விடுவவிடுவென்று கொண்டுசென்று அவர்களிடம் கொடுத்துவிட்டு வருகிறாள். அடுத்தநாள் என்னைக் காணும்போது இரண்டு மூன்று தடவை ஆமையைக் கொடுத்ததற்கு அஞ்சலா என்னிடம் நன்றி கூற எனக்கே ஒருமாதிரியாகிப்போகிறது.

***

கவுன்சில்க் கடிதம் வந்த அடுத்தடுத்த நாட்கள் வெளியே செல்லும்போது அஞ்சலாவையோ கணவனையோ கண்டும் காணாமல் செல்லவாரம்பிக்கிறேன். கணவனும் யாருக்கும் எதுவுமே சொல்வதில்லை என்று கூற நான் வணக்கம் சொல்கிறனான் என்கிறாள் மகள். அதற்கு நான் எதுவும் கூறாது அமைதி காக்கிறேன். நீங்கள் அவர்களைக் கோபித்து என்ன பயன். முதலே சரியாகச் செய்திருக்க வேண்டும். அவர்கள் இந்த நாட்டவர். நாம் வெளிநாட்டவர். சட்டதிட்டத்துக்கு அமையச் சரியாக நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன குற்றம் அம்மா என்கிறாள். என்னிடம் அதற்குப் பதில் இல்லைத்தான்.

எம் வீட்டுக்கு பின்னால் உள்ள எத்தனையோ வீடுகளுக்கு நாம் கட்டியதிலும் உயர்வான நான்கு மீற்றர் உயரக் கண்ணாடி அறைகள் கூடக் கட்டப்பட்டிருக்க இந்தக் கேவலம் கெட்டதுகள் எரிச்சலில் கவுன்சிலுக்குச் சொல்லியிருக்குதுகள் என்று மனதுள் பொருமியபடி அடுத்த வாரத்துக்காகக் காத்திருக்கிறேன்.

ஒரு வாரத்தின் பின் வந்த கவுன்சில் பொறியியலாளர் நீங்கள் கூரையை மாற்றவே வேண்டும். உயரத்தைக் கண்டும் காணாமல் விட்டு விடுகிறேன். ஆனால் எல்லாம் சரி என்ற பத்திரத்தை என்னால் வழங்க முடியாது என்கிறார். இந்தளவோடு விட்டாரே என மனதில் நிம்மதி ஏற்பட

வேறுவழியின்றிக் கூரை மாற்றிய செலவு 1500 பவுண்டஸ் நட்டமாகியதுதான் மிச்சம் என்று கணவர் புறுபுறுத்ததை கேட்டும் கேளாதாவளாய் இருக்க மட்டுமே முடிந்தது. மாற்றிய கூரையைப் பார்க்கும் நேரம் எல்லாம் பக்கத்து வீட்டின் மேல் வரும் கோபம் மாறாமலே ஒரு ஆண்டு ஓடிப்போக வேலை முடிந்து ஒருநாள் வந்து இறங்கும்போது பக்கத்து வீட்டின் முன் ஆம்புலன்ஸ் நிற்க என்னவாக இருக்கும்என்று யோசித்தபடி உள்ளே செல்கிறேன்.

அடுத்தநாள் மாலை கடைக்குச் செல்வதற்காக வெளியே சென்ற போது இடையில் அஞ்சலா வந்துகொண்டிருப்பது தெரிய நானாகவே வணக்கம் என்றுவிட்டு யாருக்கு என்ன பிரச்சனை? நீ ஓகே தானே என்கிறேன். அஞ்சலாவின் முகம் சோர்ந்து போய் இருக்கிறது. மாக்குக்கு நேற்று காட் அற்றாக் வந்து வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றவர்கள். இன்று கண் திறந்துவிட்டார். ஆனால் ஒரு காலும் கையும் இயல்பாக இல்லை என்கிறார்.

அவருடன் ஆறுதலாகக் கதைத்துவிட்டு வந்தாலும் நீ எனக்குச் செய்ததுக்கு வேணும் என்று என் மனம் எண்ண, அற்ப மகிழ்ச்சிகூட எட்டிப்பார்க்கிறது. அதன்பின் எப்போதாவது மார்க்கை பிரத்தியேக வாகனம் வந்து அழைத்துப்போகும். அதுதவிர வெளியே அவரைக் காணவே இல்லை. ஆனாலும் அஞ்சலாவை சுகம் கேட்பதை நிறுத்தவில்லை.

நாம் முதல் முதல் அந்த வீட்டுக்கு வரும்போதே வீட்டின் வாசலுக்கு அண்மையில் மிகப் பெரிய ஊசி இலை இன மரம் ஒன்று நீண்டு நெடிதாய் வளர்ந்திருந்தது. பார்ப்பதற்கு அழகாய் இருந்ததுதான். ஆனாலும் வீட்டுக்கு அண்மையில் இதை இதை ஏன் வைத்தார்கள் என்னும் அளவு அதன் கிளைகள் வாசல் கதவைத் திறக்க முடியாதபடி பெரிதாகிக் கொண்டிருந்தன. நாம் கதவைத் திறந்து உள்ளே செல்லாது அந்த மரத்தை வெட்டுவோமா என்று கதைத்துக்கொண்டு நிற்க, பக்கத்து வீட்டு வெள்ளைக்காரர் ஒரு அறுபது வயதாவது இருக்கும் வணக்கம் என்கிறார்.

நாமும் வணக்கம் சொல்லி முடிய நீங்கள் தான் இங்கு குடிவருக்கிறீர்களா என்கிறார். ஓம் என்று என் கணவர் தலையாட்ட வாடகைக்கு இருக்கப்போகிறீர்களா என்கிறார் மீண்டும். இல்லை இதை நாம் வாங்கிவிட்டோம். எமது சொந்த வீடு என்று கூறி முடிய முதலே இந்தமரத்தை வெட்டிவிடுங்கள். இதன் வேர் என் வீட்டு அத்திவாரத்தையும் வெடிக்கச் செய்து விடும் என்கிறார். என்னடா இது வந்து வீட்டுக்குள் செல்லவே இல்லை. இந்த மனிதன் மரத்தை வெட்டச் சொல்கிறதே என்கிறேன்.

நீயும் வெட்டுவது பற்றிக் கதைத்தாய் தானே. பிறகெதற்கு கிழவனைக் குறை சொல்கிறாய் என்று கணவர் என்னை கடிந்துவிட்டு வெட்டத்தான் வேண்டும். நாம் இன்றுதான் வந்திருக்கிறோம். நிறைய வேலை களிருக்கு. முடிந்தபிறகு பார்ப்போம் என்று கூறி உள்ளே செல்கிறோம். ஒரு ஐந்து நிமிடங்கள் ஆகவில்லை. கதவின் அழைப்பு மணி அடிக்க யார் என்று பார்த்தால் பக்கத்துவீடுக்காரர் மரம் அரியும் வாள் ஒன்றுடன் நிற்கிறார். நான் கீழே உள்ள கிளைகளை வெட்டிவிடுகிறேன் மிகுதியை நீங்கள் வெட்டுங்கள் என்று சிரித்தபடி கூற, சரி வெட்டுங்கள் என்கிறார் கணவர்.

நாம் உள்ளே சென்று வேறு விடயங்களைக் கதைத்துவிட்டு வந்து பார்த்தால் மரத்தின் அரைவாசிக் கிளைகள் வெட்டப்பட்டு எம் வீட்டின் முற்றத்தில் குவிக்கப்பட்டிருக்க இனி நீங்கள் வெட்டுங்கள் என்று கூறி வாளையும் எம்மிடம் தந்துவிட்டு அவர் உள்ளே போக நானும் கணவரும் சேர்ந்து மிகுதியை வெட்டிக் குவித்துவிட்டோம். பக்கத்து வீட்டார் கணவன் மனைவி இருவரும் வெளியே வந்து இப்போதுதான் வீட்டைப் பார்க்க நன்றாக இருக்கு என்று முகமெல்லாம் பல்லாய் கூறிவிட்டுச் செல்ல நாமும் நல்ல தொரு சனம் பக்கத்தில என்று மகிழ்ந்துதான் போனோம். அந்தமரத்தின் கிளைகளை அகற்ற நான்கு தடவை காரில் கொண்டுசெல்லவேண்டி இருந்தது வேறு கதை.

அதன் பின் எம்மைக் கண்டால் ஒரு வணக்கம் சொல்வதோடு சரி. அவர்களுக்கு ஏதும் எம் உணவு செய்துகொண்டுபோய் கொடுப்போமா என்கிறேன் கணவரிடம். நாங்கள் குடுக்க, அவை தர எதுக்கு உதெல்லாம் பேசாமல் இரு என்று கணவர் சொன்னது எனக்கும் சரியாகவே படுகிறது. அதன்பின் ஐந்து ஆண்டுகள் வணக்கம் சொல்வதுடனேயே கழிகிறது. நத்தார் தினத்துக்கு இரு வாரத்துக்கு முன்னர் வாழ்த்து மடல் போட, நாமும் திருப்ப அவர்களுக்குப் போடுவதுடன் எங்கள் உறவு நிறைவடைந்துவிடும்.

மூன்று பிள்ளைகளுடன் இருந்த எமக்கு சமையலறை மிகச் சிறிதாக இருக்க வீட்டைப் பின்புறமாக நீட்டுவதற்கு ஆலோசித்து அந்த வேலைகளில் இறங்க, சைனீஸ் வேலையாட்கள் கூறிய பொருட்களை கடைகளில் ஓடர் செய்ய, அவர்கள் வாகனங்களில் கொண்டுவந்து இறக்குகின்றனர். மரக் குற்றிகள், நீளமான பலகைகள் என்பன வந்து இறங்குகின்றன. அவர்கள் நடைபாதையில் அவற்றை இறக்கி வைக்கின்றனர். சில பலகைகள் ஆறு மீற்றர் நீளம் கொண்டவை, அவை பக்கத்து வீட்டு வாசலைக் கடந்து நிற்கின்றன.

இன்னும் சிறிது நேரத்தில் வேலையாட்கள் வந்துவிடுவார்கள். அதன்பின் அவர்கள் இறக்கியவற்றை உள்ளே கொண்டு செல்வார்கள். “நாங்கள் அதை எடுத்துக்கொண்டு போய் உள்ளே வைப்போமா” என்று கணவரைக் கேட்கிறேன். “நீ உன்ர அலுவலைப் பார். அவங்கள் தூக்கி வைப்பாங்கள்” என்று கணவர் சொல்லி முடிக்கு முன்னரே எங்கள் அழைப்புமணி கோபத்துடன் அழுத்துப்பட கணவர் சென்று கதவைத் திறக்க, பக்கத்து வீட்டு மனிதர் தன் வளவில் நிற்கிறார்.

“நீயா மணியை அழுத்தினாய்”

“ஓம் நான் தான். நீ உடனடியாக உந்தப் பலகைகளை எடு. எனக்கு இடைஞ்சலாக இருக்கு”

“உனக்கென்ன இடைஞ்சல்? உன் வீட்டுக்குள்ளா வைத் திருக்கிறோம்”

“என் வாசல் வரை வந்திருக்கு. நான் வெளியே செல்லவேண்டும்”

“உனக்கு அவசரம் என்றால் கடந்து செல். இன்னும் 10 நிமிடங்களில் வேலையாட்கள் வந்து தூக்குவார்கள்”

“நான் போலீசுக்கு போன் செய்யப் போகிறேன்”

“தாராளமாகச் செய்”

கணவர் கதவை அடித்துச் சாத்திவிட்டு வருகிறார்.

“என்னப்பா பிரச்சனை”

“பக்கத்து வீட்டுக் கிழடு சரியான துவேஷம். மரங்கள் தனக்கு இடைஞ்சலாம். உடனே தூக்கு என்கிறது”

“அதுக்குத்தான் நான் முதலே நாங்கள் தூக்குவம் என்றனான்”

“நீ உன்ர அலுவலைப் பார். அவர் போலீசுக்கு அடிக்கமாட்டார். எங்களை வெருட்டுறார்”

“இத்தனை ஆண்டுகளாய் இருக்கிறம். ஒரு சத்தம் கூடப் போட்ட தில்லை. அடிமனதில் நாங்கள் கறுப்பர் எண்டது உதுகளுக்கு இருக்கு. அதின்ர வெளிப்பாடுதான் இது”

“சரியப்பா டென்ஷன் ஆகாமல் பெல் அடிக்குது. திரும்பக் கிளவனதானோ தெரியேல்லை. போய் கதவைத் திறவுங்கோ”

அடுத்தநாள் காலை நான் வேலைக்குச் செல்ல வெளியே வர, நான் எப்ப வருவேன் என்று பார்த்துக்கொண்டு இருந்ததுபோல் பக்கத்துவீட்டுப் பெண் கதவைத் திறந்து வணக்கம் என்கிறார். அவருக்கும் வயது ஒரு ஐம்பத்தைந்து அறுபது இருக்கலாம். குறை நினைக்காதை டியர். என் கணவர் கொஞ்சம் முசுடு. நேற்று அப்படிக் கதைத்துவிட்டார். மன்னித்துக் கொள் என்கிறார். எனக்கு உடனே மனது இளகிப்போக அதனால் என்ன. நாம் எதுவும் நினைக்கவில்லை என்று கூற அஞ்சலாவின் முகம் மலர்ந்துபோக நான் பாய் என்றுவிட்டுக் காரில் ஏறுகிறேன்.

அதன்பின் என் கணவர் பக்கத்து வீட்டுக்காரருக்கு வணக்கம் எதுவும் சொல்வதில்லை. ஆனால் என்னை கண்டால் அவர் வணக்கம் சொல்ல நானும் சொல்வேன். அஞ்சலாவைக் கண்டால் மட்டும் நின்று கதைபேன். அவவும் பிள்ளைகளின் படிப்பு என் வேலை இப்படி இரண்டு மூன்று விடயங்களைக் கதைத்துவிட்டு போய்விடுவோம்.

நாம் மூன்று பிள்ளைகள் என்பதால் வாரத்தில் இரு நாட்கள் உடை களை துவைத்துக் காயவிடுவோம். கோடை காலங்களில் வெளியே போட்டால் அன்றே காய்ந்துவிடும். குளிர் காலத்தில் வீட்டின் உள்ளே இரண்டு நாட்கள் எடுக்கும். கொடி முழுவதும் எம் ஆடைக்களால் நிரம்பி வழியும். ஆனால்  அவர்கள் வீட்டில் இரண்டு மூன்று ஆடைகளே காயப் போட்டிருக்கும். பணத்தை ஏன் இப்படிமிச்சம் பிடிக்கின்றனர். வெள்ளைகள் வாழ்வை நன்றாகத்தானே அனுபவிக்கின்றனர். இவர்கள் மட்டும் ஏன் இப்படி என்று எண்ணிக்கொள்வதோடு சரி. கேட்பதற்கு முடியவில்லை.

நாம் ஒருதடவை நானும் கணவரும் கிரேக்கத்துக்குச் சென்று வந்தபோது எம்மைக் கண்ட அஞ்சலா “ஓ விடுமுறைக்குச் சென்று வருகிறீர்களா” என்றுமட்டும் கேட்டுவிட்டுச் சென்றுவிட்டார். அடுத்த நாள் என்னைக் கண்டபோது எங்கே சென்றீர்கள்? என்றார். நான் கிரேக்கம் என்றதும் வாயைப் பிளந்தபடி பயமின்றிப் போய் வந்தீர்களா என்றார்.

நீங்கள் அங்கு சென்றிருக்கிறீர்களா? மிக அழகிய இடம். எந்தப் பயமும் இல்லை என்கிறேன். நான் லண்டன் நகருக்கே இதுவரை சென்றதில்லை. என் கணவருக்கு எங்கு செல்வதும் பிடிக்காது என்றுகூற எனக்கு நம்பமுடியாததாக இருக்கிறது. கோடை மாரி குளிர் வெயில் என்று காலங்கள் எத்தனை விரைவாகச் சென்றுவிட்டன.

***

நாம் லண்டன் வந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டதை நம்பத் தான் முடியாமல் இருக்கு. பதினெட்டு ஆண்டுகளா என்னும் மலைப்போடு பல யுகங்கள் ஆகிவிட்டதான ஆயாசமும் சேர்ந்துகொள்கிறது. இத்தனை ஆண்டுகளில் பக்கத்து வீட்டுக்கு ஒருநாள் கூட நாங்கள் போக முடிய வில்லையே என்னும் ஆதங்கம் மனதில் ஏற்படுகிறது. சில நண்பர்கள் அயல் நாட்டுப் பக்கத்து வீட்டாரைப் பற்றிச் சொல்லும்போது எமக்கும் ஒரு நல்ல நட்பான பக்கத்து வீடு அமைந்திருக்கலாமோ என்னும் எண்ணம் எழும். நாம் மட்டும் எல்லோரோடும் நட்போடுதான் பழகினோமா என்னும் கேள்வியும் கூடவே எழும். பிடித்தவர்களுடன் மட்டும்தானே நெருக்கமாகினோம். எமது பக்கத்து வீட்டாருக்கும் எமக்கும் நல்ல பொருத்தங்கள் இல்லைபோல என நானே என்னை ஆற்றிகொள்கிறேன்.

ஒருநாள் அவர்கள் வீட்டுக்கு இரண்டு மூன்று வெள்ளை இனத்தவர் வந்துபோக ஏதும் விசேடமாக இருக்குமோ என்று எண்ணியபடி செல்கிறேன். மூன்றாவது வீட்டில் வசிக்கும் ஆபிரிக்கப் பெண்மணி எப்பவாவது கண்டால் நின்று கதைப்பார். அன்று கண்டவுடன் மார்க் எப்படி இறந்தார் என்று கேட்கிறார். இறந்துவிட்டாரா? எனக்கு இதுவரை தெரியாதே என்கிறேன். நேற்று இரவு நான் வேலை முடிந்து வந்தபோது அம்புலன்சில் ஏற்றினார்கள். முகத்தை மூடியிருந்தது. அதனால்தான் கேட்டேன் என்கிறார்.

எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஊரில் என்றால் ஒருவர் இறந்தால் அடுத்தமணியே அனைவருக்கும் தெரிந்துவிடும். பக்கத்து வீட்டில் இருந்தும் எனக்குத் தெரியவில்லை என்பது வெட்கமாக எனக்கு இருக்க கணவருக்குப்போன் செய்கிறேன். கணவர் போனை எடுக்கவில்லை.

அஞ்சலாவின் வீட்டுக் கதவைத் தட்ட அவரே வந்து திறக்கிறார்.

“நான் மார்க் பற்றிக் கேள்விப்பட்டேன்”

“ஓ நேற்று மாலை இறந்துவிட்டார். இரவு ஏழு மணிவரை வீட்டில் வைத்திருந்தோம். அதன்பின் கொண்டுசென்றுவிட்டார்கள்”

“ஏலாமல் இருந்தாரா”

“ஆறு மாதங்கள் படுத்த படுக்கைதான். ஒரு நர்ஸ் வந்து பார்த்து வீட்டுச் செல்வார். எனக்கு அவரை கோமில் கொண்டுபோய் விட விருப்பம் இல்லை. என் பிள்ளைகள் பலதடவை சொன்னார்கள்”

“உனக்குப் பிள்ளைகள் இருக்கின்றார்களா??”

“ஓம் இரண்டு ஆண் பிள்ளைகள். ஒருவன் திருமணமாகி மான்சஸ்ரரில் இரண்டு குழந்தைகளுடன் இருக்கிறான். மற்றவன் திருமணம் செய்யவில்லை. அவனும் தூரத்தில்த்தான்.”

“நான் அவர்களை ஒருநாளும் கண்டதில்லையே”

“அவர்களுக்கு எங்கே நேரம். கடைசி மகன் அப்பப்ப வந்துவிட்டுப் போவான். அவனுக்கும் தகப்பனுக்கும் சரிவாராது”

“அவர்கள் வந்திருக்கிறார்களா?”

“இல்லை நாளைதன் வருவார்கள்”

“தனியாகத்தான் வீட்டில் இருக்கிறாயா? யாரும் துணைக்கு இல்லையா?”

“இல்லை எனக்குப் பழகிவிட்டது”

“உனக்கு உணவு ஏதும் கொண்டுவந்து தரட்டுமா??”

“வேண்டாம், வேண்டாம். என்னிடம் உணவு இருக்கிறது”

“ஏதும் தேவை என்றால் என்னைக் கூப்பிடு”

“நன்றி தேவை என்றால் அழைக்கிறேன்”

வீட்டுக்கு வந்தபின் மனதில் எதுவோ அடைத்ததுபோல் இருக்க அஞ்சலா என்னை வீட்டுக்குள் வா என்று அழைக்காததும் மனதை எதுவோ செய்ய மனிசிக்கும் என்ன பிரச்சனையோ என்று மனதைத் தேற்றிக் கொள்கிறேன்.

ஒரு வாரத்தின் பின் மார்க்கின் மரண வீடுக்கு நானும் கணவரும் சென்றிருந்தோம். எல்லோருடனும் கை குலுக்கிய பிள்ளைகள் எம்முடனும் அடுத்த வீட்டு ஆபிரிக்கப் பெண்ணிடமும் கை குலுக்காததை கவனித்தபின் மனதில் சிறிது ஆசுவாசம் ஏற்பட்டதுதான்.

ஒரு மாதம் செல்ல மீண்டும் இலைதளிர் காலத்தில் கடைசி மகன் தாயுடன் வசிக்க வந்துவிட பக்கத்து வீட்டில் பேச்சும் சிரிப்புமாக அஞ்சலா வின் வாழ்கை மாறியிருந்தது. கொடிகளில் விதவிதமாக அழகிய ஆடைகள் காய்ந்தன. எழுபத்தைந்து வயதான முகத்தில் ஒரு பளபளப்பும் மலர்ச்சியும் தெரிந்தன.

கிளவியைப் பாத்தியே. விதவிதமாய் உடுப்புப் போடுது என்று கணவர் நக்கலாகக்கூற எனக்குக் கோபம் வருக்கிறது. அந்தக்கிழவன்

சரியான அடக்குமுறையாளனாகத்தான் இருந்திருக்க வேண்டும். இப்பவாவது அந்த மனிசி தன் ஆசைப்படி வாழட்டுமன். உங்களுக்கு அதில் என்ன நட்டம் என்கிறேன்.

கடந்த வருடம் இலங்கை சென்று ஆறு மாதங்களின் பின் தான் நான் திரும்பி வந்தேன். அடுத்தநாள் நான் வெளியே செல்ல என்னைக் கண்ட அஞ்சலா “ஓ டியர் உன்னை இத்தனை நாள் நான் காணவில்லை. எங்கே சென்றாய், உனக்கு ஏதும் ஆகிவிட்டதோ என்று நான் பயந்துவிட்டேன்” என்றபடி கட்டியணைக்க நான் திக்குமுக்காடிப்போய் பேச்சற்று நிற்கிறேன்.

# நிவேதாவின் கதைகள்

பதினைந்து சிறுகதைகளை உள்ளடக்கிய நிறம் மாறும் உறவுகள் என்ற தனது முதலாவது சிறுகதைத் தொகுதியினை 2013 ஆம் ஆண்டும் பதின்நான்கு சிறுகதைகளை உள்ளடக்கிய உணர்வுகள் கொன்றுவிடு என்ற தனது இரண்டாவது சிறுகதைத் தொகுதியினை 2019 ஆம் ஆண்டும் வெளியீடு செய்த நிவேதா உதயன் தனது பத்து சிறுகதைகளை உள்ளடக்கிய மனதும் இடம் பெயரும் என்ற சிறுகதைத் தொகுதியினை இப்போது வெளிக்கொண்டு வருகிறார். இந்தச் சிறுகதைத் தொகுதிக்கு ஒரு விமர்சனத்தை எழுதுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கொடுத்தமைக்கு எழுத்தாளருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிவேதா உதயனின் இந்தச் சிறுகதைகளை வாசித்தபோது தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் பெரும்பாலும் எழுதத் தயங்குகின்ற ஏன் சிலவேளைகளில் தமிழ் ஆண் எழுத்தாளர்கள் கூட எழுதுவதற்குத் தயங்குகின்ற சில உளவியல் உடலியல் சமூகவியல் குடும்ப வாழ்வு தாம்பத்தியம் சார்ந்த பிரச்சினைகளைத் துணிவாக எடுத்து எழுதி இருக்கிறார் என்பது விளங்குகின்றது. அந்தத் துணிவிற்கும் வெளிப்படைத்தன்மைக்கும் முதலில் பாராட்டுக்கள். பொதுவாக இலங்கைத் தமிழர்கள் பண்பாடு அல்லது குடும்ப கௌரவம் அல்லது சமூக கௌரவம் என்று மூடி மறைக்க விரும்புகின்ற பல விடயங்களை எழுத்தாளர் எடுத்தாளுகின்றார்.

உதாரணமாகத் தண்டனை என்ற கதையில் சில மாதங்களே ஆன தன்னிடம் பார்க்கும்படி தாய் ஒப்படைத்துச் சென்ற தனது ஆண் பேரக் குழந்தையை அதன் அப்பப்பா வாய்மூல பாலியலுக்கு உட்படுத்திய வக்கிரத்தை நிவேதா துணிச்சலாக எடுத்துச் சொல்கிறார். தனது தந்தை செய்த வக்கிரத்தை மூடிமறைக்க "பிளீஸ் தாரணி, அப்பா செய்ததை வெளியில் சொல்லிப் போடாதையும் எங்கட குடும்ப மானமே போயிடும் வேற ஏதும் சாட்டுச் சொல்லுவம்" என்று கெஞ்சிய தனது கணவன் மிதுனின் கையாலாகத்தனத்தை வெறுத்த தாரணி அவனை விட்டுப்பிரிந்தே போகிறாள். இந்தக் கதையின் மூலம் நிவேதா எங்கள் சமூகத்தில் கண்டு கொள்ளப்படாத அல்லது கண்டும் காணாமலும் இருக்கிற மிக முக்கியமான பிரச்சினைகளான முதியோரின் தீர்க்கப்படாத பாலியல் ஆசைகளையும் அந்தப் பாலியல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்ள முயலும் அவர்களால்

குந்தைகளுக்கு ஏற்படுகின்ற அல்லது ஏற்பட இருக்கின்ற பிரச்சினைகளையும் கோடிட்டுக்காட்டுகின்றார். அத்தோடு இத்தகைய பாதுகாப்பற்ற சூழலில் இருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினையும் முன் வைக்கின்றார். உண்மையில் இப்படியான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வுகள் எம்மக்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் இருக்கின்றன என்பதனையும் இக்கதை மூலம் உணரவைக்க நிவேதா முயலுகின்றார்.

அதேபோன்று ஆண்களிடம் தோன்றும் பெண்மைத்தன்மை அல்லது பெண்களிடம் தோன்றும் ஆண்மைத்தன்மை பற்றிய விழிப்புணர்வோ அல்லது அவர்களின் உடலியல் உளவியல் சமூவியல்த் தேவைகள் பற்றியோ நமது தமிழ்ச் சமூகம் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. ஏக பால் நாட்டம் (ஓரினச்சேர்க்கை) அதாவது ஆணினை ஆணும் பெண்ணினைப் பெண்ணும் காமுறுவதுபற்றிய அல்லது அவர்கள் சேர்ந்து வாழ்வது பற்றிய விழிப்புணர்வு எம்மிடம் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். மாறாக இவை எல்லாம் எமது பண்பாட்டிற்கு ஒத்து வராது என்பது பலரின் எண்ணம். இதனை மையமாக வைத்து நான் வசந்தன் என்ற கதையினை நிவேதா எழுதியுள்ளார். வசந்தன் என்ற பெண்மைத்தன்மை உள்ள இளைஞனிடம் ஏற்பட்ட மாறுதல்களை அவனின் குடும்பம் உணரவில்லை அதேநேரம் அவனோ இன்னொரு வேற்றின மத ஆணிடம் மையல் கொண்டு அவனோடு சேர்ந்து வாழத்தலைப்படுகிறான்.

சேர்ந்து வாழுதல் இப்போது புலம் பெயர் சமூகத்திடம் பொதுவாக வளர்ந்து வருகின்ற ஒரு பண்பாக இருந்தாலும் ஏக பாலினத்தவர் சேர்ந்து வாழுவது என்பது மிகவும் புதினமான ஒன்று ஆயினும் அது சேர்ந்து வாழ்பவர்களுக்குப் புனிதமான ஒன்று என்று சொல்லத் தலைப்படும் கதாசிரியர். “எத்தினை நாட்களுக்குத்தான் அவைக்கு என் விடயம் தெரிஞ்சிடுமோ தெரிஞ்சிடுமோ என்று பயந்து பயந்து இருக்கிறது. மற்றவைக்காக என் உணர்வுகளையும் மகிழ்ச்சியையும் நான் ஏன் விட்டுவிட்டு இருக்கோணும்” என்று வசந்தன் நினைப்பதாக கூறுவதன் மூலம் மற்றையவர்களின் கருத்துக்கள் அபிப்பிராயங் களை விடத் தன் தன் மகிழ்ச்சிதான் முக்கியம் என்ற உளவியல் உண்மையை வாசகனை உணர வைக்கின்றார்.

புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் எம்மவர் மத்தியில் இன்று வளர்ந்து வருகின்ற பிறரும் பெரிதாக எண்ணத் தலைப்படாத இன்னுமொரு முக்கிய சமூகப் பிரச்சினை திருமணத்திற்குப் புறம்பான பாலியல் தொடர்புகள். இந்தத் தொடர்புகளில் இருபாலாருமே ஈடுபட்டாலும் இரண்டில் ஒருவரே இத்தகைய தொடர்புகளை ஆரம்பித்தாலும் பொதுவாக இப்படியான தொடர்புகளை ஆண்களே ஆரம்பிப்பதான ஒரு கருத்து பலரிடமும் இருக் கின்றது. அதனை மையமாக வைத்தே இப்பிரச்சினை தொடர்பாக எழுதிய பலரும் எழுதியுள்ளார்கள். ஆனால் நிவேதா இந்த

முறையற்ற பாலியல் தொடர்பினை ஒரு பெண்ணே பலவிதத்திலும் ஆரம்பிப்பதான ஒரு கருத் தினை முன்வைத்து மருந்தே இல்லா நோய் என்றொரு கதையினை எழுதி யுள்ளார். புலம் பெயரும்போதே யாழ்ப்பாணத்தின் சாதிய அமைப்பையும் காவிக்கொண்டு போன ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மது சாதி குறைந்த நவீனை வீட்டாரின் எதிர்ப்பையும் மீறித் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுக்கும் தாய்கிறாள்.

ஆயினும் தான் காதலித்துக்கட்டிய தனது கணவன் தனது நண்பன் வேணுவின் மனைவி கலாவுடன் இரகசியத் தொடர்பினை வைத்திருக்கிறான் என்பதனை அறிந்த மது மனம் உடைந்து போகிறாள். கலா விழுந்து விழுந்து நவீனுடன் கதைப்பதும் அவனை அழைத்துக்கொண்டு மதுவிற்கும் வேணு விற்கும் தெரியாமல் உலாப் போவதுமாக தன்னுடைய உறவினை வளர்த்துக் கொள்கிறாள் ஈற்றில் இதனைப் பொறுக்க முடியாத மது விவாகரத்துப் பெற்றுக் கொண்டு போகிறாள். இந்த திருமணத்திற்குப் புறம்பான பாலியல் தொடர்பு என்பது புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இலகுவில் கடந்து போக முடியாத ஒரு சமூக நோயாக மாறி வருகிறது. அதற்குப் பல உளவியல் உடலியல் காரணங்கள் இருந்தாலும் அது தமிழர்களின் இறுக்கமான பண்பாட்டுச் சுவரில் ஒரு ஓட்டை யினைப் போட்டுவிட்டுப் போவதனைச் சாதரணமாகக் கடந்துவிட முடியாது.

எமது சமூகத்தில் ஒருவனை அல்லது ஒருத்தியைக் காதலிப்பதும் பின்னர் இன்னொருவனை அல்லது இன்னொருத்தியைக் கலியாணம் செய்வதும் வழமையாக நடக்கின்ற ஒன்றுதான். இப்படிக் காதலைக் கைவிடுவதற்கு பல சமூக பொருளாதார பண்பாட்டியல் சமய குடும்பக் காரணிகள் அமைந்து விடுகின்றன. இவ்வாறு கலியாணம் செய்பவர்கள் பெரும்பாலும் தங்களது பழைய காதலை மறந்து விட்டுப் புதிய துணையுடன் வாழுவது இயல்பான ஒன்றாக இருந்து வருகின்றது. ஆயினும் சில இடங்களில் இவ்வாறு கலியாணம் செய்தவர்கள் தங்கள் பழைய காதலை மறக்க முடியாமல் அதனை வளர்ப்பதும் பல சீர் கேடுகளில் ஈடுபட்டு குடும்பங்கள் சின்னபின்னமாகிப் போவதும் கண்கூடு. இத்தகைய ஒரு பிரச்சினையை எடுத்து தானம் நீ என்று ஒரு கதையினை நிவேதா எழுதியுள்ளார். பொதுவாக மனைவிக்குத் துரோகம் செய்யும் கணவன்களைப் பற்றி எழுத்தாளர்கள் எழுதும்போது நிவேதா கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவியைப் பற்றி எழுதுகிறார். இந்தக் கதையில் பெற்றோரின் கெடுபிடி காரணமாகத் தான் காதலித்த செந்தூரனைக்கைவிட்டு முகுந்தனைக் கலியாணம் செய்துவரும் நயனி பிரான்சிற்கு வந்து சேர்கின்றாள்.

செந்தூரன் மீதான தனது காதலை மறக்க முடியாத நயனி தன் மீது நம்பிக்கையும் அன்பும் வைத்திருக்கின்ற கணவன் மீது முழுமையான அன்பு செலுத்த முடியாதது மாத்திரமல்லாமல் தான் கொண்ட கருவையும்

கலைக்கிறாள். தனக்கு பிரஜா உரிமை கிடைத்ததும் முகுந்தனை விவாரத்து செய்துவிட்டு செந்தூரனை பிரான்சிற்கு அழைக்கும் அவளது எண்ணத்தின் காரணமாகவே அவள் தனது கருவினைக் கலைக்கின்றாள். இது எப்படியோ தெரிய வந்த முகுந்தன் அவளுடன் சண்டை பிடிக்காமல் அவளை ஊருக்குக் கூட்டிச் சென்று செந்தூரனுடன் சேர்த்து வைக்கிறான் என்று கதையை முடிக்கிறார் நிவேதா. "நீங்கள் இரண்டு பேரும் காதலிச்சது தவறில்லை. அதுக்குப் பிறகு அவ என்னைக் கட்டினது கூடத்தப்பில்லை. ஆனால் என்னோட தொடர்ந்தும் குடும்பம் நடத்திக்கொண்டு என்னை ஏமாற்றத் திட்டம் போட்டதுதான் தப்பு... நான் இவவை நூறு வீதம் நம்பி என் மனைவி என்ற உணமையான அன்போடதான் நடத்தினனான். இவ பெற்றோரை எதிர்த்து உங்களைக் கலியாணம் செய்திருக்க வேணும். அது நடக்கேல்லை என்றதும் எனக்காவது உண்மையா இருந்திருக்க வேணும்..." என்று முகுந்தன் செந்தூரனுக்கு சொல்வதாக இந்தக் கதையின் ஊடாகத் தான் சொல்ல வந்த கருத்தினை நிவேதா சொல்கிறார்.

துமிழர்கள் சமூகத்தில் பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் அந்தப் பிள்ளைகள் திருமணம் முடிக்கும்வரை வயிற்றில் நெருப்பைக்கட்டிக் கொண்டு இருப்பதாகச் சொல்வார்கள். அதேபோன்று வீட்டைக் கட்டிப்பார் கலியாணத்தைச் செய்துபார் என்றும் சொல்வார்கள். அவ்வளவு தூரம் பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பது என்பது பெற்றோர்களுக்கு ஒரு பெரும் சுமையாக இருக்கும். அதிலும் பெண்பிள்ளை படித்தவளாயும் அழகாயும் இருந்தால் சீதனம் வேண்டாம் உடுத்த சீலையுடன் உங்கள் பிள்ளை வந்தால்ப் போதும் என்று திருமணம் பேசி வரும் மாப்பிளை வீட்டார்கள் ஆரம்பத்தில் கலியாண வீட்டுச் செலவுகளை மட்டும் பங்கிட்டுக் கொள்வோம் என்பார்கள். பின்னர் மெல்ல மெல்ல மாப்பிளைதான் செலவு செய்ய வேண்டும் அவருக்கு இப்போது கொஞ்சம் பிரச்சினை இருக்கிறபடியால் நீங்களே கலியாண வீட்டுச் செலவைச் செய்யுங்கோ செலவுகளைச் சுருக்கமாச் செய்யுங்கோ என்று பொம்பிளை வீட்டாருக்குச் சொல்வார்கள். பின்னர் மெல்ல மெல்ல அது செய்யவேண்டும் இது செய்ய வேண்டும் என்று எல்லாவற்றையும் பொம்பிளை வீட்டில் சுமத்தி விடுவார்கள். அதே வேளை கலியாண வீட்டில் மணமக்களுக்கு கிடைக்கும் அன்பளிப்புகளை யும் பொம்பிளை வீட்டாருக்குச் சொல்லாமல் மணமக்களுக்கும் கொடுக்காமல் சுருட்டிக்கொண்டு போவார்கள்.

அதே போல பிள்ளைகளும் பெற்றோரின் சுமைகளை சிரமங்களை விளங்கிக்கொள்ளாது நாகரீகத்தின் பெயரில் அது செய்ய வேண்டும் இது செய்ய வேண்டும் என்று செலவுகளை அதிகரித்துக்கொண்டு செல்வார்கள். புலம்பெயர் தேசமொன்றில் நடுத்தரக் குடும்பம் ஒன்று எவ்வாறு மேலே சொன்ன சவால்களை எல்லாம் தங்கள் பெண்பிள்ளை போகின்ற இடத்தில்

சிறப்பாக வாழவேண்டும் என்ற அவாவில் பொறுத்துக்கொண்டு கடன் பட்டு தமது மகளின் திருமணத்தை நடாத்தி வைக்கிறது என்ற விடயத்தை சீதனம் வேண்டாம் என்ற சிறுகதையில் காட்சிப்படுத்துகின்றார் நிவேதா.

இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன ஒரு பக்கத்தில் செல்வாக்கு இருக்குமாயின் போலிகளைக் கொண்டாடுவார்கள். மறுபக்கத்தில் செல்வாக்கு இல்லையாயின் திறமைகளைக் கண்டுகொள்ளவே மாட்டார்கள். அதேபோன்று இலக்கிய வாதிகள் எனப்படும் சிலருக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கும். ஒரு பக்கத்தில் தம்மை உத்தமஉகளாகக் காட்டுவதுடன் அவ்வாறே எழுதியும் கொள்வார்கள் மறுபக்கத்தில் காமுகர்களாக இரகசிய வாழ்க்கை வாழ்வதுடன் குடும்பப் பொறுப்பு இல்லாதவர்களாகவும் வாழ்வார்கள். அதேபோன்று இன்னொரு கசப்பான பக்கமும் இருக்கின்றது அதுதான் எழுத் தாளர் ஒருவர் எழுதிப் பிழைக்க முடியாது என்பது. அத்தோடு வாழும் காலத்தில் இலக்கியவாதியைக் கண்டு கொள்ளாது அவன் இறந்த பிறகு அவன் எவ்வளவு பிறழ்வு கொண்டவனாக இருந்தாலும் தலையில் தூக்கி வைத்து கொண்டாடு கின்ற சமூகத்தின் முரண்நகையான நடத்தையும் இங்கு குறிப்பிடத்தக்கது இவ்வளவு பிரச்னைகளையும் மையமாக வைத்து நிவேதா அவனும் அவர்களும் என்ற சிறுகதையினை எழுதியுள்ளார். பிணமாகக் கிடக்கும் தேவர் என்ற எழுத்தாளர் தனது கடந்த காலத்தை மீட்டிப் பார்ப்பது போலக் கதையினை அமைத்து இருக்கும் நிவேதா அந்த தேவர் பாத்திரம் ஊடாக சமூகச் சீர்கேடுகளையும் இலக்கியச் சீர்கேடுகளையும் துணிச்சலாக முன்வைக்கின்றார்.

பொதுவாக வெளிநாட்டு மாப்பிளை என்றதும் தீர ஆராயாமல் தங்கள் பெண்பிள்ளைகளை சிலவேளைகளில் அவர்களின் விருப்பத்துக்கு மாறாகக் கூடக் கலியாணம் செய்துகொடுக்கின்ற ஒரு பெரு நோய் தமிழ்ச் சமூகத்தில் இருக் கின்றது. மாப்பிளை யார், அவர் என்ன செய்கிறார், அவர் எங்கே இருக்கிறார், யாருடன் இருக்கிறார், அவருடைய தகுதி தராதரம் என்ன என்ற எதையுமே விசாரிக்காமல் வெளிநாட்டு மோகத்தில் இவ்வறான பல திருமணங்கள் நடக்கின்றன. சில இடங்களில் பெண்பிள்ளைகளே இத்தகைய வெளிநாட்டு மோகத்தில் உள்ளூரில் இருக்கும் திறமையான பல ஆண்களை நிராகரித்து வெளிநாட்டு மாப்பிளைகளை விரும்புகின்றார்கள். இவ்வாறு பெற்றோரின் வெளிநாட்டு மோகத்தால் இப்படியான ஒரு திருமணத்தில் தள்ளி விடப்பட்ட ஜீவா திருமணம் முடித்த மூன்று மாதங்களின் பின் திரும்பவும் வெளிநாடு போன தனது கணவன் தினேசின் தொடர்புகளை இழந்ததால் வாழா வெட்டியாகின்றாள். ஆயினும் ஆண்டுக் கணக்காகக் காத்திருந்து இளமை தேய்ந்து கொண்டு போன ஜீவாவிடம் தான் வாழ வேண்டும் என்ற ஆசை மட்டும் அடங்கிப் போகவில்லை. பண்பாடு கலாச்சாரம் என்ற போர்வையில் தனது ஆசைகளை

நிராசைகளாக் கவோ அல்லது சமூகத்திற்குப் பயந்து தனது வாழ்க்கையைத் தொலைக்கவோ விரும்பாத ஜீவா தன்னோடு வேலை செய்யும் வாகீசனைத் திருமணம் செய்து கொள்கிறாள் என்று மன வாழ்வு என்ற சிறுகதையில் நிவேதா எடுத்துக் காட்டுகிறார். இக்கதையின் மூலம் பண்பாடு, கலாச்சாரம் என்ற பெயரில் ஏதோ காரணத்தால் திருமணம் தோல்வியில் முடிந்த பெண்கள் துவண்டு விடாது தாங்கள் விரும்பிய இன்னொரு மண வாழ்க்கைத் தெரிவு செய்ய வேண்டும் அதற்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்ற கருத்தினை நிவேதா இந்தக் கதையின் மூலம் கூறுகின்றார்.

திருமணம் முடித்த கணவன் மனைவியருக்கிடையில் சந்தேகம் வருவது இயல்பான குடும்ப வாழ்வைப் பாதிக்கும் என்பது பெரிய உண்மை. கணவன் மீது மனைவிக்கும் மனைவி மீது கணவனுக்கும் சந்தேகம் வருவது பல இடங்களில் பொதுவாக இருந்தாலும் சிலர் அதனைப் பேசித் தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் சில இடங்களில் அது தீவிரமாகிக் குடும்பங்களைச் சின்னா பின்னம் ஆக்கிவிடும். அதேபோன்று கணவன் மனைவிக்குத் துரோகம் இழைக்க அல்லது மனைவி கணவனுக்குத் துரோகம் இழைக்க நினக்கும்போதும் போதும் கூடக் குடும்ப வாழ்வு சிதைந்து விடும். புலத்திலும் புலம் பெயர் தேசத்திலும் பல குடும்பங்களில் இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன இந்தக் கருவினை மையமாகக் கொண்டு நிவேதா மனக்குரங்கு என்ற சிறுகதையினை எழுதியுள்ளார்.

தான் விரும்பிக் கலியாணம் கட்டிய தனது கணவன் ரவி தன்மீது கொண்ட சந்தேகத்தினால் நிம்மதி இழந்த மதுமிதா தனது மூன்று பிள்ளை களுடனும் பிரிந்து வந்து தன் பெற்றோருடன் இருக்கிறாள். சமூகத்தினதும் குடும்பத்தினதும் பல வசவுகளைத் தாங்கிக்கொண்டு இருக்கும்போது புத்தி சுவாதீனமான தனது மனைவியை விவாகரத்து செய்து வாழும் கனடாவில் இருந்து ஊருக்கு வந்த தாயளன் என்ற தனது பள்ளிக்காலத்தைச் சேர்ந்தவரைச் சந்தித்து நண்பனாக்கிக் கொள்கிறாள் மதுமிதா. பரஸ்பரம் பேசத் தொடங்கிய வர்கள் ஆளாளுக்கு ஒரு வித ஈர்ப்புக்கு உள்ளாகியதன் விளைவாக மதுமிதா வைத் தன் செலவில் கனடாவிற்கு எடுத்த தயாளன் பின்னர் அவளின் மூன்று பிள்ளைகளையும் எடுத்ததோடல்லாமல் தான் வாங்கிய வீட்டின் அரைவாசியினை மதுமிதாவின் பெயரில் எழுதி வைக்கிறான். இவ்வாறு தயாளன் பல தியாகங்களைச் செய்தாலும் தனது முதல் கணவன் ரவியினை மறக்க முடியாத மதுமிதா அவனைக் கனடாவிற்கு அழைக்க முயற்சி செய்வதுடன் அவன் வந்ததும் தயாளனை வீட்டை வீட்டு துரத்தத் திட்டமிடுகிறாள். இதனை அறிந்த தயாளன் மதுமிதா அறியாமல் வீட்டை விற்றுவிட்டு அவளையும் விட்டு விட்டு வெளியேறுகிறான் என்று கதையின முடிக்கிறார் நிவேதா. பொதுவாக இப்படியான துரோகங்களைச் செய்யும் ஆண்களை மையமாக வைத்துப் பலர் கதை எழுதினா லும் பெண்கள் செய்யும் துரோகங்களை மையமாக வைத்து எழுதுபவர்கள்

குறைவு . அந்த வகையில் நிவேதா ஒரு பெண் தன்னை நம்பிய, தனக்காகப் பல தியாகங்களைச் செய்த ஒரு கணவனிற்கு அல்லது ஆணிற்குச் செய்யும் துரோகத்தினை மிகவும் துணிவாகப் பதிவு செய்து கொள்கிறார்.

பொதுவாக ஒருவரது தோற்றம் நடை உடை பாவனைகளை வைத்து ஒருவரை எடை போடுகின்ற பழக்கம் தமிழர்களிடம் இருக்கின்றது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே ஒருவரை மதிக்கலாமா இல்லையா என்ற தீர்மானத்திற்கும் அவர்கள் வருவார்கள். அதுபோன்று ஒருவரது பட்டம் பதவிகளையும் சொத்து சுகங்களையும் கூட இவ்வறான தர மதிப்பீடு களிற்குத் தமிழர்கள் பயன்படுத்துவதுடன் அந்த மனிதன் தொடர்பான தீர்மானங்களையும் எடுப்பார்கள். தமிழர்களின் இத்தகைய மனச் சிக்கல் களை அந்த மனிதன் என்ற கதையில் நிவேதா பதிவு செய்கின்றார். மார்ட்டின் என்ற மனிதனின் தோற்றத்தினையும் அவன் கடைத் தாவரத்தில் குந்தி இருப்பதனையும் பார்த்து அருவருப்புக் கொள்வதுடன் அவனைத் தரக்குறைவாக நினைக்கும் கடைப் பணியாளர் அவன் ஒரு படித்தவன் என்பதோடு சிறந்த ஓவியனும் என்பதனை அறிந்ததும் தனது எண்ணத்தினை மாற்றிக் கொள்வது மட்டும் அல்லாமல் அவன் தனக்கு அரச உதவியாகக் கிடைக்கும் பணத்தினை மாணவர்களுக்குக் கொடுக்கும் பண்பினைக் கண்டதும் வியப்பும் கொள்கிறார். அதன் காரணமாக அவன் மீது மதிப்பும் கொள்கின்ற போது மார்ட்டின் காணாமல் போகிறான் என்று நிவேதா கதையினை முடிக்கின்றார். இங்கே அந்த மனிதன் ஊடாக மனித நடத்தை என்பது அகப் புறச் சூழல் மாற்றத்திற்கு ஏற்ப மாற்றத்திற்கு உள்ளாகும் என்பதனை நிவேதா புரிய வைக்க முயல்கின்றார்.

பொதுவாகப் பெண் எழுத்தாளார்கள் எடுக்கத் தயங்கும் கருக்களை எடுத்த நிவேதா அவற்றைக் கதையாக்கினாலும் கூடக் கதையோட்டத் திலும் மொழிப் பயன்பாட்டிலும் சில இடங்களில் சிறு சிறு தொய்வுகளையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதனை விடுத்துப் பார்த்தால் எல்லாக் கதைகளுமே வாசகர்களுக்கு புலத்திலும் புலம்பெயர் தேசங் களிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போய் இருக்கின்ற பல பிரச்சினைகளையும் அதன் விளைவுகளையும் உரத்துச் சொல்கிறது. நிவேதா தொடர்ந்தும் ஏனைய எழுத்தாளர்கள் எடுக்கத் தயங்கும் கருத்துக் களை எடுத்துக் கதைகளை எழுத வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் .

**காரைக்கவி கந்தையா பத்மானந்தன்**
**பாமர எழுத்தன்**



# நிவேதா உதயராஜன்

விவசாயமும் கலையும் செழிப்புற்று விளங்கும் இணுவில் கிராமத்தில் பிறந்து வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று, நாட்டின் போர்ச் சூழல் காரணமாக 1985 இல் தன் பெற்றோருடன் யேர்மனிக்குப் புலம்பெயர்ந்து அங்கு 18 ஆண்டுகள் வாழ்ந்தபின் மீண்டும் பிரித்தானியாவுக்கு இடம்பெயர்ந்து 20 ஆண்டுகளாக அங்கு வாழ்ந்து கொண்டிருப்பவர் திருமதி நிவேதா உதயராஜன்.

இவர் பிரித்தானியாவில் மிச்சம் பகுதியில் தமிழ்ப்பள்ளிக்கூடம் ஒன்றையும் பத்து ஆண்டுகளாக நடத்திவருகின்றார். சிறு வயதிலேயே விளையாட்டுத் துறையிலும் ஓவியம் வரைவதிலும் தையற்கலை, கர்நாடகசங்கீதம், வானொலி நாடகங்கள் என்று பல்துறை சார்ந்து தன் திறமையை வெளிப்படுத்தியவர்.

பின்னர் தமிழ்மொழியின் பால் ஏற்பட்ட பற்றினால் கவிதைகள், சிறுகதைகள் என யாழ் இணையத்தில் எழுத ஆரம்பித்து இதுவரை நான்கு நூல்களை வெளியீடு செய்துள்ளார். துணிவாக எழுதும் இயல்பினால் பலராலும் அறியப்பட்டவர். 38 ஆண்டுகளாகப் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது தாய்மொழியையும் பண்பாட்டு விழுமியங்களையும் மறக்காது அடுத்த சந்ததிக்குக் கடத்துவதில் முனைப்புடன் செய்யலாற்றிக்கொண்டு இருக்கிறார்.

**நூலாசிரியரின் ஏனைய நூல்கள்:**

1. நிறம் மாறும் உறவுகள்(சிறுகதைத்தொகுதி)
2. வரலாற்றைத் தொலைத்த மனிதர்:மொசப்பத்தேமியாவிலிருந்து ஈழம் வரை
3. நினைவுகளின் அலைதல்(கவிதைத்தொகுப்பு)
3. உணர்வுகள் கொன்றுவிடு(சிறுகதைத்தொகுதி)



தமிழ் பெண் எழுத்தாளர்களுள் புலம் பெயர்ந்து வாழுகின்ற நிவேதா உதயன் கணிப்புக்குள்ளான எழுத்தாளராக அறியப்படுபவர்; சிறு வயது முதலே எழுத்துலகில் பிரவேசித்த அவர் தொடர்ந்து எழுதுவதைத் தவமாக மேற்கொண்டு வருபவர். அவருடைய தொடர் எழுத்துக்களின் அறுவடையாக "மனதும் இடம்பெயரும்" என்ற மகுடத்துடன் பத்து சிறுகதைகள் அடங்கிய தொகுதி வெளி வருகின்றது.

– பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் –

ISBN 955524963-6
9789555249638